Regd. No. 2569

21 MAY 1931

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 2. | ஹிஜ்ரி 1349 துல்ஹஜ்ஜு மீ 1931 மே மீ | இதழ் 5

உள்ளடக்கம்		பக்கம்
1.	ஸூரத்துல் காரிஆ ...	193
2.	நாயக வாக்கியம் ...	195
3.	ஹஜ்ஜின் மகத்துவம் ...	197
4.	தொழுகையின் தத்துவங்கள் ...	199
5.	கிராம முஸ்லிம்களின் பரிதாப நிலை ...	204
6.	சிலைவணக்கம் வேண்டாம் ...	207
7.	கஃபத்துல்லா, (ஹ்) ...	209
8.	குர்பானீ ...	212
9.	ஈதுல் அல்ஹா ...	215
10.	உல்ஹிய்யா ...	217
11.	நபிகள்பிரான் (ஸல்.) அவர்களின் நித்திய கருமம்	219
12.	முஸ்லிம்கள் முன்னேறும் மார்க்கம் ...	222
13.	குழந்தைகளைப் பராமரித்தல் ...	224
14.	சுகாதாரம் - பல் ...	227
15.	இமாம் கஸ்ஸாலீ (ரஹ்.) அவர்களது தத்துவம்	230
16.	அகில இந்திய முஸ்லிம் கான்பரன்ஸ் ...	232
17.	ஆசிரியர் குறிப்புகள் ...	238
18.	பொன் மொழிகள் ...	240
19.	விசேஷ அறிக்கை ...	240

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பிணங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4 0 0
தனிப் பிரதி	...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பபட்டமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1349 துல்ஹஜ்ஜு மீ 1931ஷ மே மீ	இதழ் 5

21 MAY 1931

ஸூரத்துல் காரிஆ

நிகரற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஆரம்பிக்கின்றேன்).

(1) திடுக்கிடச் செய்யும் சம்பவம்! திடுக்கிடச் செய்யும் அச்சம்பவம் யாதாகும்?

(2) திடுக்கிடச் செய்யும் சம்பவம் இன்னதென உமக்கு அறிவித்து தந்ததேது?

(3) மானிடர்கள் சிதறடிக்கப்பெற்ற விட்டிற் பூச்சிகளைப் போலாகும் நாளில். (ஏற்படும் சம்பவமாகும்.)

(4) மேலும் மலைகள் கோட்டப்பெற்ற பஞ்சு போலாகும். (நாளில் ஏற்படும் சம்பவமாகும்.)

(5) ஆதலின் எவனுடைய (நன்மைகளின்) எடை கனக்கின்றதோ அன்னவன் இன்பமான வாழ்க்கையை எய்துவான்.

(6) மேலும் எவனுடைய (நன்மைகளின்) எடை இலேசாயிருக்கின்றதோ அன்னவன் எய்தும் ஸ்தலம் (நரகென்னும்) ஆழமறியாக் கிடங்காகும்.

(7) அக்கிடங்கு இன்னதென உமக்கு அறிவித்து தந்ததேது?

(8) தணல் விட்டெரியும் நெருப்பாகும்.

[அஃதாவது, கியாமத் (இறுதி) நாளானது மனதிற்கு ஒரு பெருந்திடுக்கத்தைக் கொடுக்கக்கூடியதாகவும், உயர்ந்ததைதாழ்ந்ததாகவும், தாழ்ந்ததை உயர்ந்ததாகவும் செய்யத்தக்கஅபார சக்திவாய்ந்ததாகவும் அமைந்திருப்பதன் ரகசியமென்ன? இம்மாறுதல்கள் ஏற்படுவதற்குள்ள சக்தி அதில் என்ன இருக்கின்றதென்பதை நாம் நோட்டமிட்டுப் பார்ப்பது கொண்டு நன்கு புலனாகும். அவை ஏற்படுவதின் உண்மைக்காரணங்களை விவரிக்கின் அஃது மானிடர்களின் புத்திக்கு எளிதிற் புலப்படாததாதலின் அந்நாள் வருவது கொண்டு உண்டாகும் சிற்சில சம்பவங்களை விளக்கிக்காண்பிக்கின் அதனால் அந்நாளினது தன்மை இன்னதெனத் தெளிவாய் விடுமாதலின் அவைகளிற் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம். அஃதாவது:-அந்நாள் ஏற்படுவது கொண்டு மானிடர்கள் மிகுதத்திலும், பல பாகங்களில் பரவி யிருப்பதிலும், சக்தியற்றிருப்பதிலும், தாழ்மையிலும், ஆதரவில்லாமல் பறந்து கொண்டிருப்பதிலும் சிதறடிக்கப்

பட்ட விட்டிற் பூச்சிகளே போன்றாகியும், மலைகளும் பரத்தப்பட்ட பல்வகை வர்ணமுள்ள பஞ்சுகளேபோன்றாகியும் விடும். அந்நாளில் நற்கருமங்கள் புரிந்தோர்களது நன்மைத்தட்டு கனத்தும், தீயகருமங்கள் புரிந்தோர்களது நன்மைத்தட்டு இலேசாயும் ஆகிவிடும். அதுபொழுது தீமை மிகுந்தோர் 'ஹாவியா'வென்னும் ஆழமறியாக் கிடங்குடைய நெருப்பில் வீழ்த்தப்பெற்று வேதனைக்குள்ளாவர் என்பதே.]

இத்திரு அத்தியாயம் 'மக்கீ'யாம். இதில் 'இஸ்ராபீல்' (அலை) அவர்கள் 'ஸூர்' ஊதுவது தொடுத்து படைக்கப்பட்ட வஸ்துக்களுக்கிடையில் ஆண்டவன் தீர்ப்பளிக்கும் வரை நிகழக் கூடிய சம்பவங்களை எடுத்துக் காண்பித்து அந்நாள் அளவற்ற மனோ வேதனையை அளிக்கக் கூடியதாயிருப்பதோடு, அதில் உண்டாகும் சம்பவங்களைக் கண்ணுறின், கனத்ததிரேகம் கரைந்து மெல்லியதாகவும், உறுதியாயுள்ள திரேகம் துண்டு துண்டாகவும், சரீரத்தில் எலும்போடு சேர்ந்துள்ள சதை அதை விட்டுப்பிரிந்தும், ஒரு வஸ்துவைத் தன்னகத்தே அமைத்துக்கொள்வதற்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சக்தி அதை விட்டு அகன்றதாகவும் தோற்றுமென்பதைப் பற்றிவிளக்கமாய் எடுத்துக்கூறப்பெற்றிருப்பதனால் இஃது 'ஸூரத்துல் காரிஆ' (திடுக்கிடச் செய்யும்) அத்தியாயம் என்னும் பெயரோடு வழங்கப்பெறுகின்றது. இத்தன்மைத்தாய பெரும் மாறுதலைக்கொண்டு மன்பதைகட்கு அச்சம் புகட்டி அறிவிப்பதே 'குர்ஆன்'ஷரீப் அருளப்பட்ட நோக்கங்களில் முதன்மையான நோக்கமாகும்.

இதன் மூன்றாம் வசனத்தில் மானிடர்களை சிதறடிக்கப்பட்ட விட்டிற் பூச்சிகட்கு உபமானிக்கப்பட்டதெல்லாம், எவ்வாறு அப்பூச்சிகள் பறக்குங்கால் ஒருதிசையை நோக்கிச் செல்லாமல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையை நோக்கி சின்னாபின்னமாகச் செல்லுகின்றனவோ அவ்வாறே மானிடர்கள் (கப்ரு) புதை குழியைவிட்டு எழுப்பப்பெற்றவுடன், தனித்தனியாக வெவ்வேறுதிசையை நோக்கிச் சிதறடிக்கப்பட்டவர்களே போல் திரிந்தலைவர், என்பதற்காகவேயாம்.

இவ்வசனத்தில் மானிடர்களுக் கேற்படும் சம்பவங்களைக் குறிப்பிட்டுவிட்டு அதன் பின்னர் மலைகளுக்கு ஏற்படும் சம்பவங்களைச் சுட்டிக்காண்பித்திருப்பதன் நோக்கமாவது அந் நாளில் திடுக்கமாக்கிவைக்கும் சம்பவங்கள் நிகழ்வதால் உறுதியுள்ள கெட்டியான பெரியபெரிய மலைகளுங்கூட அவ்வதிர்ச்சியால் கொட்டப்பட்ட பஞ்சேபோல் ஆய்விடும் நிலைமையில் எழும் ஓர் ஓசையை, எளியவனும் அற்பசக்தியுடையோனுமாகிய மானிடன் கேட்பானாயின் அவன் கதி யாதாகுமென்பதை அவனே யூகித்து அறிந்து கொள்வதற்காகவேயாம். தவிர மறுமை நாளில் ஏற்படும் சம்பவங்களைக் குறிப்பிட்டபின் மானிடர்கள் இரு வகையினராயிருப்பர் என்ற விவரத்தை எடுத்துக்காண்பித்து உலகில் தெரிந்தோ, தெரியாமலோ மானிடனால் புரியப்படும் செயல்களனைத்தும் அந்நாளில் வெளியாய் அதற்குத் தக்க பரிகாரம் அளிக்கப்படுமென்பதை விளக்கிக் காட்டப்பட்டிருப்பதும் காண்க.

மானிடர்களது நன்மை, தீமைகளை துலாக்கோல் கொண்டளவிடப்படும் அந்நாளில் தீமையைப் பார்க்கினும் ஏதேனும் ஒரு நன்மையைச் செய்த ஒருவன் சுவனபதியடைவனென்றும், நன்மையைப் பார்க்கினும் தீமையை அதிகமாகச் செய்தவன் நரகபதவியடைவனென்றும் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பெற்றுள்ளது.

இதன் 6 வது வசனத்தில் 'உம்மு' என்ற பதம் குறிப்பிடப் பெற்றுள்ளது. அறபியில் அப்பதத்திற்கு 'தாய்' என்பது பொருள். இவ்விடத்தில் பாவிகள் அடையும் ஸ்தலத்திற்கு அப்பெயரிடப்பட்ட தன் காரணமாவது, பிள்ளைகளுக்கு கஷ்டம் ஏற்படும் பொழுதும், அவர்களுக்கு தேவையான வஸ்துக்களைப்பெற்றுக்கொள்ள நாடும்பொழுதும் தாயிடம் செல்வதே வழக்கமாயிருந்து வருகின்றது. அத்தன்மைப்போல் அன்னாளில் ஏற்படும் கஷ்டங்களை மானிடர்கள் சகித்துக் கொள்வதற்கியலாதவர்களாய் அந்நரகின் பக்கமே குழந்தைகள் தாயிடம் செல்வதே போல் செல்வார்கள்; பிள்ளைகளைத் தாய் தன் பக்கல் இழுத்துக்கொள்ளல் போன்று அவ் ஆழியகிடங்கும் இப்பாவிகளைத் தன் பக்கலிழுத்துக்கொள்ளும். அக்கிடங்கின் தன்மையை அதற்குப்பின் குறிப்பிடப்பெற்றுள்ள வசனத்தில் தெளிவுபடக் கூறப்பட்டிருப்பதைக் காண்க. (வல்லாஹு அஃலம்)

படுத்தி நெய்தும் காட்டினார்கள். அதுமுதற் கொண்டு தான் நெசவுத் தொழில் ஆரம்பமாயிற்று. இவ்வாறே மானிடர்களுக்கு அத்தியா அவசியமான ஒவ்வொரு விஷயத்தையும் 'வஹீ' விளக்கிவந்தது. ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்களின் மக்கள் அது சமயம் ஒரே குடும்பத்தினராக விளங்கி வந்தார்களாதலின், அவர்களுக்குப் பற்பலவாறான விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய ஆவசியமில்லாதிருந்தது. அதனால் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு ஒரு சில சுஹுபு (ஆகமங்கள்) மட்டுந்தான் அருளப்பட்டிருந்தது. அதற்குப் பின் தோன்றிய நபிமார்களுக்கு பற்பல அவசியங்கள் தோன்றலாயின. இந்நிலைமையில் காலம் செல்படியாய்க் கொண்டு போகவே, ஒரு சில மூடாத்மாக்கள் தன்னை ஆண்டவனென்று தாவாச்செய்யத் தொடங்கியதால் அவர்களுடன் மல்லாத வேண்டிய அவசியமும் நபிமார்களுக்கேற்பட்டது. அது பொழுது அல்லாஹ்த ஆலாவின் தாத்தையும் பரிசுத்தமான குணதிசயங்களையும் மக்களுக்கு அறிவித்து பொய்தாவாச் செய்தோருக்கும் பொன்மொழி கூறவேண்டிய சந்தர்ப்ப மேற்பட்டுப் போயிற்று. தவிர சில நபிமார்கள் இராஜியாதிகாரம் வகிக்கவேண்டிய சந்தர்ப்ப மேற்பட்டுவிட்டதால், அவர்கள் இராஜிய பரிபாலனஞ்செய்ய வேண்டிய முறைகளும் பிரஜைகளுடன் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்குகளும் வேதங்கள் மூல்யம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வந்தது. ஆகவே, பிற்காலத்திய சந்தர்ப்ப நிகழ்ச்சிகளுக்கேற்ப வேதங்களும் அதிக விவரங்களுடையதாக மாபெரும் கிரந்தங்களாகவும் ஆகமங்களாகவும் வெளிவந்தது. சில நபிமார்கள் தபசிகளாக யிருந்தனராதலின், அவர்கள் ஆண்டவனது கட்டளைகளை மக்களுக்கு அறிவித்த நேரங்கள் தவிர எஞ்சியுள்ள காலங்களில் ஏக பரம்பொருளாகிய அல்லாஹ்த ஆலாவை தவம்புரிந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் மூல்யமாகவும் கட்டளைகள் அறிவிக்கப்பட்டு வந்தது.

இக்காலை நாம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் திருத்தூதை கவனிப்போமாக: அவர்களுக்கு வேதம் அருளப்படுங்காலை அது அருளப்படுவதற்குள்ள சகல காரணங்களும் ஒருங்கேநிகழ்பெற்றிருந்தன. எனவே, அநீதியும் அந்தகாரமும் உச்சஸ்தானத்தை அடைந்திருந்ததால் எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு சம்பூர்ணமான வேதம் அருளப்படவேண்டிய அவசியமேற்பட்டு விட்டது; சகல சம்பவங்களுக்கும் தேவைப்படும் சகல சட்டதிட்டங்களும் வெளியிடப்படவேண்டியிருந்தது; ஆண்டி முதல், அரசன்வரை தோட்டிமுதல் தொண்டமான்வரை அனுஷ்டிக்கவேண்டிய சகல விபரங்களும் அறிவிக்கப்பட வேண்டியதாகயிருந்தது. இதனைக்குறித்தே அருள்வேதம் அடியிற் கண்டவாறு அறிவிக்கின்றது:

> இன்றைக்கு உங்களுடைய மார்க்கத்தை சம்பூர்ணமாக்கிவிட்டேன்; உங்கள்மீது என்னுடைய அருட் கோடையை (தெய்வ அறிவிப்பை) முடிவுபெறச் செய்துவிட்டேன்; உங்களுக்கு இஸ்லாத்தை சன்மார்க்கமாக ஏற்றுக்கொண்டேன்.—அல்குர் ஆன்.

இத்திருவசனம் மாபெரும் கருத்தமைந்ததாகும். இது போலொற்ற வசனங்கள் வேறெந்த வேதத்திலும் அருள்செய்யப்படவேயில்லை. ஆகவே, தெய்வ அறிவிப்பின் தொடர்பு இங்குதான் முடிவுபெறுகின்றது. இதனாலேயே இத்திருவசனம் அருளப்பட்டபொழுது அருமை சஹாபாக்கள் அழத்தொடங்கவே காரணம் வினவப்பட்டபொழுது, அல்லாஹ்வின் அருட்கொடையான 'வஹீ' அறிவிப்பு இன்றோடு முடிவடைந்து நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் நம்மைவிட்டுப் பிரியக்கூடிய காலம் சமீபித்துவிட்டதெனும் சமிக்கை இதிலுள்ளது; அதற்காகத்தான் கவலைப்படுகிறோமென அறிவித்தார்கள். அவர்கள் கவலையுறக்காரணமில்லாது போகவில்லை!. பல்லாயிர வருடம் அருள் செய்யப்பட்டுவந்த 'வஹீ' அறிவிப்பு நின்றுவிடுவதானது விசனிக்கத்தக்கதேயாகும். ஆனால் அத்துடனேயே அதற்குச் சமாதானமான சுபச்செய்தியும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது: தீனுல் இஸ்லாத்தை சம்பூர்ணமாக்கிவிட்டதாகவும், அதுதான் சகல மானிடர்களுக்கும் சன்மார்க்கமாக ஆக்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டிருப்பதானது, சுபச்செய்தி என்பதிலையமில்லை. எனவே, மானிடர் நடந்தொழுகவேண்டிய சகல விபரங்களும் அனுஷ்டிக்க வேண

டிய சகல முறைகளும் இத்திருவேதத்தில் பரிபூர்ணமான நிலைமையில் அறிவித்து முடிந்துவிட்டதென்பதேஇதன்கருத்தாகும். மேலும் சகல சீர்திருத்தங்களும் திருக் குர் ஆனில் கூறப்பட்டிருக்கிற தென்பது உலகப்பிரசித்தம். திரு குர்ஆன் அருளப் பட்டு இற்றைக்கு 1350 வருடங்கள் கடந்து போயும் இதுபொழுது தேவையானவை களும் குர்ஆனில் காணப்படாதுபோகவில்லை. இதர மதஸ்தர்கள் காலத்திற்குத் தக்கவாறு எத்தனையோ சீர்திருத்தங்கள் செய்து கொண்டு, அதன் விபரம் தங்கள் புராணங் களில் காணப்படாததால்அதனைமார்க்கக்கட் டளைகளிற் சேர்த்துக்கொண்டோமென்று கூறுகின்றனர். ஆனல் அவைகள், திருக்குர் ஆன் வெகுகாலத்திற்கு முன் அறிவித்த சீர் திருத்தமாகத்தான் காணப்படுகின்றது.

முந்திய வேதங்களிலும் ஆகமங்களிலும் அறிவிக்கப்பட்டிருந்த விஷயங்கள் யாவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் திரு குர் ஆன் ஷரீபில் அறிவிக்கப்பட்டிருப்பதுடன் பிற்காலத்திற்குத் தேவையான சகல விவரங் களும் அருள்செய்யப்பட்டுள்ளது. அது போலவே எம்பெருமானர் சற்குண சீலர் (ஸல்.) அவர்கள்பால் எல்லா நபிமார்களிலும் காணப்பட்ட சகலசற்குணங்களும் திகழ்ந்து கொண்டிருந்ததுடன் அநேக நற்குணங் களின் பொக்கிஷமாகவும் விளங்கினர்கள். எனவே, நீதிவழுவா மன்னராகவும், போர்புரி யும் வீரராகவும், சேனதிபதியாகவும் இருந் ததேபோல், இரவு முழுதும் நின்று வணங் கும்தபசியாகவும், ஏழைகள்பால் அன்புபூண் டொழுகும் தயாளசிந்தையுடையவர்களாவும் அகதிகளை ஆதரிக்கும் அன்பராகவும் இருந் தார்கள். எனவே, நபித்துவமும் திருத்தூதும் நபிபெருமானர் (ஸல்.) அவர்களுடன் முடிவு பெற்றுவிட்டதென்பதையும், அவர்களுக்குப் பின் எவரும் அந்த ஸ்தானத்தை தாவாச் செய்வது முடியாதகாரியமாகுமென்பதையும் நன்கு தெரிந்துகொள்கிறோம். இதனல்தான் எம்பெருமானர் நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் முத்திராங்கமான இறுதி நபி என்று குர்ஆன் அருள் செய்து விட்டது. இதற்கு மாருய் "எவரேனும் தங்க ளுக்குப்பின் நபித்துவத்தை தாவாச் செய் வாராயின், அவரைப் பொய்யரென்று கூறி விடுங்களென" நபிகள் நாயகம் (ஸல்.) அவர் கள் கூறியிருக்கின்ருர்கள். இதனலேயே குல பாக்களின் காலத்தில் இவ்வாறு தங்களை நபி யென்று தாவாச்செய்த பொய்யர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுப்போயிற்று. இக்காலையும் நம் நாட்டில் ஒருசில போலிகள் தங்களை நபி என்று தாவாச்செய்தும் அத் தாவாவில் தோல்வி அடைந்து போந்தார் கள். ஆனல் அதன் வாடை இற்றைக்கும் வீசிக்கொண்டு தானிருக்கிறது. அதனைப் போக்கவேண்டியது நம்முஸ்லிம்கள்மீதுள்ள முக்கியக் கடமையாகும் என்பதில் ஐயமுள தோ?

நுபுவ்வத்தானது, அல்லாஹ்த ஆலா வால் அருளப்படும் ஓர் சன்மான மாகை யால் அவ்வக்காலமக்களில் சிரேஷ்டமான வர்கட்கு அந்த ஸ்தானத்தை அருள் செய் தான். ஆனல் ஒருசிலர் 'நுபுவ்வத்து' மனி தப் பிரயாசையால் அடையக்கூடியதென எழுதி வருகின்றனர். இவர்கள் நுபுவ்வத் தின் தாத்பரியத்தை நன்குணராததே இவர் களின் தீய கொள்கைக்குக் காரணமாகும். எனவே, அவ்வாறு அருட்கொடையைப் பெற்ற நபிமார்கள் பொய்புகலாதவர்களா கவும், தீக்ஷண்ய முடையவர்களாகவும், சிரே ஷ்டமானவர்களாவு மிருந்தார்கள். அன் னோர் மக்களுக்கு அல்லாஹ்த ஆலாவின் மஹாத்மியத்தையும், அருட் கொடையை யும் எடுத்து போதிப்பார்கள்; உலகின் ஆசாபாசங்களை வெறுத்து மறுமையின் பக் கல் அன்பு பூண்டொழுகவேண்டுமென்று உபதேசிப்பார்களா; நரகத்தின் வேதனையைக் குறித்து அச்சமூட்டுவார்கள்; சுவர்க்கத் தின் சுகபோகங்களைக்கொண்டு அவிழ்க்கை பூட்டுவார்கள். இந்த போதனைகளைக் கேட்டு நற்பதவி அடைந்தவர்கள் மக்களிலனேகர் உளர். ஆனல் ஒரு சில மூடாத்மாக்கள் நபி மார்களுடன் எதிர்த்துப்போராடி அதோகதி அடைந்தார்களென்பது உலகப் பிரசித்தம்.

ஆகவே, முஸ்லிம் சோதிரர்கள், எம்பெரு மானர் உலகதயாளர் (ஸல்.) அவர்கள் தான், அவர்களில் இறுதியான நபி யென்பதை உறுதிகொண்டு அவர்களுடைய நற்குண நல் லொழுக்கங்களையே பின்பற்றி நடந்து இகபர சாதனங்களை அடைந்து சிறப்புற்ருேங்கி விளங்குவார்களாக.

மானுஷ்ய பரிபூர்ணராய எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் வாழ்க்கைச் சரிதை

கைரோ அல்மினார் பத்திரிகையின் ஆசிரியரான அல்லாமா செய்யித் முஹம்மது ரஷீத் ரிலா அவர்கள் எழுதியது

பெருமானாரின் வம்சமும் தேசமும்

உலக சீர்திருத்தத்திற்கு அராபியர் நியமனம்

எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களது வம்சவழித் தொடர்பானது குறைஷ்குலத்தையும், ஹாஷிம் கோத்திரத்தையும் சார்ந்து சென்று, இறுதியில் கிளைவையும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களேயும் போய்ச் சேருகின்றது.

லோக தயாளர் (ஸல்.) அவர்கட்கு முன் றோன்றிய நபிமார்களது போதனைகளெல்லாம் ஓர் சில குறிப்பிட்ட தேயங்கட்கும் சமூகங்கட்கும் மட்டும் மட்டிடப்பட்டனவாயிருந்தன. ஆனல், நம் உலகநாதர் (ஸல்.) அவர்களது நற்போதமானது சர்வலோகத்துக்குமென்றிருந்தது. மேலும் இது பரிபூரண சன்மார்க்கத்தின் இறுதி நமூனவாகவும் மிளிர்ந்தது. பொதுவாய்க் கூறுமிடத்து பல்லாயிரமாண்டு அபிவிருத்தியடைந்த பின்னர் ஒரு மதத்துக்கு எத்தனைப் பரிபக்குவ உயர்நிலை சித்திக்குமோ அஃதே பரிபக்குவநிலை நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் சன்மார்க்கத்துக் குடையதாயிருந்து வருகின்றது.

நிற்க, இப்பிரபஞ்சத்தின் சகல சமூகத்தார்களேக் காட்டினும் இத்துணை சிரேஷ்டத்துவம் அவ்வராபியருக்கு மட்டும் ஏன் அருளப்படவேண்டும்? அது விஷயத்தில் உலகத்தின் மற்றெல்லா சமுதாயத்தினர் ஏன் ஒதுக்கிவிடப் பட்டனர்? அராபியர்கள் மௌடீகம், விக்கிரகாராதனை, உட்கலகங்கள் முதலியவற்றில் மூழ்கியவர்களென்பது ஜகப் பிரசித்தமாயிருந்துங்கூட, அவர்களே, பரிபூரண சன்மார்க்க ஊழியத்துக்கும், அதன் பிரசாரத்துக்கும், இவ்வுகிலத்தாரின் விசுவ ஆன்மார்த்த போதத்துக்கும், இராஜரீகப் புனருத்தாரணத்துக்குமென்று ஏன் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பன ஆக்ஷேபமாய்க் கிளத்தப்படும் கேள்விகளாகும். ஆம்! யாமும் இச்சுருக்கப் பிரசங்கத்தில், இம்முக்கிய வினக்கட்கு தகுந்த விடையளிப்பதற்கே பெரிதும் பிரயாசையெடுத்துக் கொள்கிறேம்:

அராபியர்களின் சிறப்பமசங்கள்.

அராபியகட்கிருந்த முதலாவது சிறப்பம்சம் இதுவாம்:—"அன்னேர் அப்பண்டைக் காலத்திலுங்கூட விவேகச் சிந்தனஸ்திரம், மானுஷ்ய சுய சுதந்திரம் முதலிய ஜீவிய ஆபரணம் பூண்டவர்களாயிருந்தனர். இவ்வுலகிலுள்ள மற்றெல்லா சமுதாயத்தினர்களும் அடிமைத்தனத்தில் சிக்குண்டு கிடந்த காலத்தில் அதாவது, அன்னேரெல்லோரின் உடல்கள் மீது அரசர்களின் ஆதிக்கமும், விவேகங்களின் மீது மார்க்கத் தலைவர்களினுடைய ஆதீனமும் ஏற்பட்டிருந்தன. இதன்காரணமாய், அச்சமூகங்களின் நிலைமை மிகமிக ஈனஸ்திதியிலிருந்துவந்தது. எனவே, அவர்கள்யாவரும் தம்மார்க்கத்தலைவர்களின் சமிக்ஞையின்படி யெல்லாம் அதன் விவரங்களை நன்குணர்ந்துகொள்ளாது நடந்துவருங்காலை, அராபியர்கள் மேற்கூறிய சிரேஷ்ட அம்சங்களில் சிறந்தவர்களாயிருந்தனர்."

அவ்வராபியர்களின் இரண்டாவது சிறப்பமசங்கள் யாதெனில்:-"அன்னேர் தங்கள் ஜீவியமுறைமையின் சர்வகாரியாதிகளிலும் முழுமுழு ஸ்வதந்திரமும் சுயேச்சாதிகாரமும் கிடைக்கப்பெற்றவர்களாயிருந்தனர். அக்காலத்தில் அவனியின் இதரவர்க்க மனுஷ்யர்களெல்லோரும் சுயேச்சாதிகாரச் செருக்குப் பூண்ட அரசர்களுடைய முஷ்டியினுள் அகப்பட்டுக் கிடந்தார்கள். எனவே, அக்கோவேந்தர்கள் அம்மக்களை தம் சுய நலன்கட்காக வேண்டி கேவலம் மாக்களைப் போலவே பயன்படுத்திக் கொண்டு வந்தார்

கள். அம்மக்களாய மாக்கள் சமாதானம், போர் ஆகிய வியவகாரங்களில் தலையிடக் கிஞ்சித்தேனும் பாத்தியதை கிடைக்கப்பெற்றவர்களாயில்லை. தவிர அன்னோர் தம் சுயஜ் ஜீவியமுறையிலுங் கூட தம் சுய அபேக்ஷை யின்படி நடந்துகொள்ள சிறிதும் சுய உரிமைக் கிடைக்கப் பெறாதிருந்தனர்;" என்பதாம்.

அந்தக்காலத்திய அராபியர்கள் இராணுவ நீதியின்படி எவ்வண்ணமிருந்துவந்தனரென்பதை சிறிதே நோட்டமிட்டுப் பாருங்கள்.—"அராபியநாடு முழுமையும் வீரசிப்பாய் மயமாகவே இருந்தது; அக்குடிமக்களெல்லோரும் ஸ்வயகண்ணியத்தாலும், ஆண்மைப் பராக்கிரமத்தாலும், புஜபல வலிமையினாலும், தீரத்துணிச்சலாலும், நனிமிகச் சிறந்தவர்களாய் இருந்தனர். ஆயின் அஞ்ஞான்று உலகத்தின் இதர சமுதாயத்தினர் யாவரும் (பொதுவாய்) இருதிறத்தினராய் வகுக்கப் பட்டவர்களாயிருந்தனர். அதன்படி ஒரு சார்பாராய உயர்வகுப்பென்பார், சுகபோக வைபவத்தின் துஷ்கிருத்தியங்களிலேயேமுழுதும் மூழ்கிப்போய்க் கிடந்தார்கள். மற்றோர் சார்பாராய தாழ்வகுப்பாரென்பார், அளவற்ற இழிவிலும் வறுமையிலும் ஆழ்ந்து கிடந்தார்கள். இங்கிலையில், ஜனாதிகாரிகளை அவர்களது கர்வமும், தான்றோன்றின் தன்மையுமான மயக்கமே வீணர்களாக்கி வைத்திருந்தது. அஃதேபோல் அடிமைகளும், தாழ்ந்து போனவர்களுமான வர்க்கத்தினரை அவர்களது உரோஷமற்ற கொடுமைக்குடன்பட்ட ஊழியத் தன்மையின் சுமையே அன்னோரை மிகக் கேவலஸ்தர்களாக்கிவைத்துவிட்டது. இஃதே அவ்வராபியர்களின் மூன்றாவது சிறப்பம்சத்தை எண்பிப்பதாம்.

அவ்வராபியர்களின் நான்காவது சிறப்பம்சம்: அவர்களது சமதர்ம சமத்துவ நிலைமையேயாம்: "அப்பண்டைப்போது, அராபிய சமுதாயத்தினரின் அறிவையும் நிர்ணயங்களையும் ஈர்த்து சீரிய நேரிய மார்க்கத்தில் நடாத்திச் செல்வதற்கனுகூலமான எவ்வித ஆசாரக்கட்டுப்பாடும் அன்னோர்க்கிருந்தது கிடையாது; அவ்வராபியரிடையே பொது ஜன பாத்திய பாதுகாப்புப் புரிந்தனுகூலம் செய்யும்படியான உலகார்த்தச் சட்டதிட்டக் கட்டுப்பாட்டின் முறைமையும் இருந்தது கிடையாது. நிலைமை அங்ஙனமிருந்துங்கூட அவ்வராபியர்களது நித்திய வாழ்க்கைப் பாங்கில் சமதர்ம சமத்துவ ஜோதி இலங்கிக் கொண்டேதானிருந்தது.

அஞ்ஞான்றே ஏனைய உலக மக்கள் பல்வகைப்பட்ட பிரிவினர்களாய் வகுக்கப் பட்டுக் கிடந்தனர். எனவே மட்டற்ற மக்கள் செருக்கினால் தம்மனோரை மற்றோரைக் காட்டினும் (கௌரவத்தில்) பெரியவர்களெனவும் நிகரற்றவர்களெனவும் வீணெண்ணங்கொண்டிருந்து வந்தார்கள். இத்தகையோர் இன்னெண்ணங்கொண்ட பெருமையின் நிலைப்பாடு, அன்னோரது நற்றன்மை, கலாஞானம், விவேகம் ஆகியவற்றின் திறமைக்கிணங்க இருக்கவில்லை. ஆனால் அவற்றிற்கு அன்னோர் ஆதாரமாய்க் கொண்டிருந்தமை, தமக்குரிய சாதாரண பிதுரார்ஜிதம் அல்லது பிறப்பினாலாம் பாத்தியதையாகமட்டுந் தானிருந்தது. ஆகையால் (பிறப்புப் பெருமையோ, பணப்பெருக்கமோ பெறுவதால்) ஒரு கொடுங்கோலனுடையவோ, அக்கிரமஸ்தனுடையவோ, அல்லது ஒரு ஜனத்தலைவனுடையவோ ஸ்தானத்தில் அமரும் பேறு பெற்றவன் உடனே மற்றெல்லாப் பொது மனுஷ்யர்களைக் காட்டினும் தான் தான் மேலான சிந்தையும் உயர்வான அந்தஸ்துமுடையவனென்று வீணெண்ணங் கொள்ளத் தலைப்படுபவனா யிருந்தனன்.

அப்பண்டைய அராபியர்களின் தன்மையில் பலவித சுகுணம்சச் சிறப்புக்களும் வாய்க்கப்பெற்றிருந்தன எனவே, அன்னோர் கூர்ந்த மதி, உயர்ந்த நோக்கம் முதலியன உடையவர்களா யிருந்ததோடு, இயற்கைத் தன்மைப்படியும் தொழிலோம்பற்றன்மைப் படியும் எண்ணற்ற சிறப்புக்களுடையவர்களாய்த் துலங்கினர். மேலும், அன்னோர், துன்புற்ற எளியோர்பால் பச்சாத்தாபம், பெருந்தன்மை, உயர்தர ஆற்றல், பொருள் தானம், அருள் தானம், பரோபகாரம், பரத்தியாகம் முதலிய சுகுணம்சங்களின் அதிபர்களாய் விளங்கினர். எனவே அன்னோர், தம் பால்முறையிட்டுக்கொள்பவர்கட்குபேருதவி புரிய பக்கத்துணையாக விரைந்தெழுவார்கள்; எவரேனும் அவர்கட்பால் அபயம் வேண்டுவாராயின் உடனே அவரது உயிர், பொருள் பாதுகாப்புக்காகவேண்டி தம் உயிரையும் அர்ப்பணம் புரிந்துவிடுவார்கள்; நண்பர்,

சுற்றத்தார் முதலியோரின் உரிமைப் பரிபாலனக் கடமைகளை விட்டும் ஒருபோதும் முகந்திருப்பார்கள். இஃதிங்ஙன மிருக்க, அஞ்ஞான்றே, இதரவர்க்கத்தினர் எஞ்ஞான்றும்சுயநலத்தையொட்டியே வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள். அன்னோரில், அதிபர்களுடையவும் அதிகாரிகளுடையவும் போக்கு எவ்வாறிருந்தது? ஏழை எளியோரின் ஸ்திதி எவ்வா றிருந்த தென்பதற்குச் சரித்திரமேசான்று பகர்ந்துகொண்டிருக்கின்றது. எனவே, அராபிய நாட்டின் அக்கம்பக்கங்களில் அக்கால உலகிலேயே பெரிதென மதிக்கப்பட்ட அரசாங்கங்கள் பல, சுகபோகப் பிரயத்தனத்திலும், சுயநல வேட்கையிலும், இலஞ்சம் பெற்றுண்பதிலும், ஏழைகளை இம்சிப்பதிலும், குணக்கேடுகளிலும், சிற்றின்ப போகங்களிலுமே மிகமிக ஆழ்ந்து மூழ்கிப்போய்க் கிடந்தன. அவை யாவும் இயற்கையருளும் அமைதியை விட்டும்—சிரமத்தின் நல்வாழ் முறைமையை விட்டும் பாக்கியமிழந்தனவா யிருந்தன. இவ்வாறேதான் அக்காலே ஒவ்வோரிடத்திலும் அதிகாரிகளுடையவும் அதிகாரத்துக் குட்பட்டவர்களுடையவும் பொதுநிலை சீர்கேட்டிலாய் இருந்து வந்தது.

நிற்க, வித்வத் தன்மையை ஆராயுங் கருத்துடனும் சிறிதே அவ்வாராபியர்களின் வாழ்வு முறையினை நோட்டமிட்டுப் பாருங்கள்:—“ அப்பண்டைகாலத்திலுங்கூட அராபியர்கள், பிரசங்க இலக்கியச் சீரிலும், வாய்மொழி உத்சாகத்திலும் தீர்க்கமான உயர் ஸ்தானத்தில் விளங்கி இலங்கிவந்தார்கள். அன்னோரது பற்பல உட்பிரிவினரின் மொழிகளும் தமக்குள் ஒன்றுக்கொன்று ஒப்புடையனவாயிருந்துவந்தன. எனவே, வடதிசைப் பகுதியினரின் மொழியும் இலக்கியச்சீர் முறைமையில் தூயதாய் கணிக்கப்பட்டே வந்தது. ஏனெனின் அப்பதியினருடன் குறைஷியர் முதலியோரின் வியாபார சம்பந்தங்கள் இருந்து வந்ததனாலாம். இங்ஙனம் குறைஷியர்க்கும் அத்தேசத்தாருக்குமிடையே ஏற்பட்ட வித்வத்துவ ஐக்கியமானது அவ்வராபிய சமுதாய ஐக்கியத்துக்குரிய ஓர் ஆதரவாகவும் பரிணமித்துவிட்டது. இப்பிரயத்தன பலனே, அராபியர்களுடைய நுண்ணறிவினை கல்வித்துறையிலும், பிரசங்க வன்மையிலும், தத்துவராய்ச்சியிலும் தகுதிக்குரியதாய்ச் செய்துவிட்டது. மேலும் சகலவிதமான ஞானங்களையும், வித்தைகளையும் வெளியிட்டுக் கூறுவதற்கு ஒரு பாஷையின்கண் வேண்டுமான நல்லம்சங்களை யெல்லாம் அச் சம்பந்தமே உண்டாக்கி வைத்துவிட்டது. இப்படிப்பட்ட காலத்திற்றான், இதர சமூகங்கள் தனக்குள்ளிருந்த பலதிறப்பட்ட மத வம்ச குடும்பப் பிணக்கு முதலியவாற்றால் சண்டை சச்சரவுகட்கு இலக்காகிப்போயிருந்தன. இதனால் அவைகளின் அரசாங்கங்களும் உட்கலகங்களிலும், வெளிப் படையெடுப்புகளிலும் சிக்குண்டு சிதறுண்டு சீர்குலைந்து போய்க் கொண்டே இருந்தது.

இதர சமூகத்தினர் கிடைக்கப்பெற்றில்லாதிருந்து, அராபியர்மட்டும் கிடைக்கப் பெற்றிருந்த சிறப்புற்ற அம்சங்கள் (ஈண்டு கூறப்பட்ட) இவைகளாகும்.

சர்வமும் வல்ல அல்லாஹுத்த ஆலா இப்பூவுலகத்தைச் சிருஷ்டித் தளித்தமை எதற்கெனில், ‘இவண் எம்பெருமானார் ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்களது சத்போதனை த்வனி ஒங்கி ஒலிப்பதற்கும், இஸ்லாமிய ஆத்மார்த்த-ஜீவாதார ஆட்சியின் முரசு எங்கும் முழங்குவதற்குமேயாம்.’ மேலும் முற்காலத்தில், அரேபியாவில் வதிந்திருந்தவர்கள் சிரியா, பாபிலோன், எகிப்து முதலியவற்றின் ஆட்சியதிகாரத்தை இழந்துவிட்டபின்னர் தங்கள் கண்ணியவாழ்வையே இழந்துபோயிருந்தனர். ஆகையால் கஃபாவின் இரக்ஷகனாகிய இறைவனானவன், அராபிய (சத்தியச்) சூரியன் சர்வலோகத்துக்காகவும் உதயமாகி ஒளியளிக்கவேண்டுமென்றும், அரேபியாவின் (சத்திய) மேகங்கள் பூபாகமனைத்தின் ஒவ்வோர்மூலைமுடுக்கிலும்சோனாமாரிப் பொழியவேண்டுமென்றும், மானுஷ்யத் தன்மையென்னும் வரண்டு மரித்துப்போயிருந்த பயிர்களை வசந்தகால பசுமையினாலும், செழிப்பினாலும் துளிர்ந்தோங்கச் செய்ய வேண்டுமென்றும் விருப்பங்கொண்டே எம்பெருமானார் (ஸல்.) அவர்களை இப் பூஉலகின் கண் அனுப்பிவைத்தான்.

அராபியாவின் பூர்வீக நல்லாசாரத்திற்குரிய எழுத்தாதாரமானது (கண்டுபிடிக்கப்பட்டுள்ள) அன்னோரது சித்திரங்களின் வித்வத்தன்மையினால் கிடைக்கப்பெறுகின்றது. மேலும், உலக வழக்கையொட்டிய எல்லாப்

பாஷைகளிலும் அரபிப் பாஷைதான் மேன்மைத் தன்மை வாய்ந்ததென்று உலகோரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அக்கால அராபியர்களின் அவ்வித நன்னாகரிகம் க்ஷீணித்துப்போன பின்னர்தான் இன்னோர் அவிவேகத்துக்கும் விக்கிரக வணக்கத்துக்கும் ஆளாகிவிட்டார்கள். ஆயினும் அவர்களின் வாழ்க்கை முறையானது மானுஷ்யத்தன்மைக்குரித்தான இயற்கைவிதிக்குப் பெரிதும் நெருங்கியதாகவே இருந்தது. மேலும், இவ்வகில உலகின் நாகரிக ஜாதியினர் என்போர் அக்காலை பற்பலவிதமான கலா ஞானங்களினுடையவும் வித்தைகளினுடையவும் முன்னணியை மிகவும் கடந்து சென்றிருந்தனரெனினும், ஆன்மார்த்த சீர்திருத்தத்துக்காகவும் அறிவுச்சுதந்தரத்துக்காகவும் நற்குண நல்லொழுக்கத்துக்காகவும் தூயமனத்துக்காகவும் உத்தம ஒழுக்கத்துக்காகவுமென்று அடிப்படைப் போட்டுள்ள (சுத்த சத்திய) இஸ்லாத்தின் மிகமிக இணக்கமான இயக்கத்தில் பணியாற்ற அவ்வராபிய ஜனங்கள் தான் மற்றெல்லோரைக்காட்டினும் பெரிதும் தகுதியுடையவர்களாய் இருந்தனர். ஆகையால் தான் அல்லாஹுதஆலா, இம் மகத்தான சீர்திருத்தச் சேவைக்காகவும், அதன் பிரசாரத்துக்காகவுமென்று குறிப்பாய் அராபியரையே தேர்ந்தெடுத்தருள்புரிந்தான்.

நபிபெருமானாரின் கூட்டமும் குலமும்.

கினானா, குறைஷ், பனூஹாஷிம் முதலியோரைத் தேரிந்தெடுத்தல்.

அல்லாஹுதஆலா, இவ்வகித்தாரெல்லோரிலும் இஸ்லாமியச் சேவைக்காகவென்று அராபியரைத் தான் தேர்ந்தெடுத்தான். அவ்வராபியரிலும் இஸ்மாயீல் (அலை.) அவர்களுடைய மக்களுக்குத்தான் சிரேஷ்டத்துவத்தை யருளினான். இஸ்மாயீல் (அலை) அவர்களுடைய மக்களிலும் கினானா என்னும் உத்தமப் பெரியாரைத் தான் தெரிந்தெடுத்துக்கொண்டான். ஏனெனில், கினானா அவர்கள், கல்வி, கண்ணியம், தருமகுணம், ஆன்மச்சிறப்பு ஆகியவைகளில் நலமிகச் சிறந்தவராயிருந்தமையால் அவர்கட்கு தம் கூட்டத்தாரிடையேயும் தனிப்பட்ட கௌரவம் இருந்துவந்தது.

புகாரீயின் விரித்துரையில் கூறப்பட்டிருப்பதாவது:—“அராபிய ஜனத்தலைவர்கள் (கினானா) அவர்களது கல்வித்திறமையின் காரணத்திற்காக அவர்களை தரிசிப்பதற்காக வந்து போவதுண்டு. அவர்களது பெருமைக்கு, பாட்டனாராகிய இம்ராஹீம் (அலை.) அவர்களுடைய விருந்துபசாரம் (பல்லோருக்கும் பொது உணவாய்) மிக தாராளமாயிருந்ததைப்போலவே இவருடையதும் இருந்தது.

நபி பெருமானாரின் (குறைஷ்) குலத்தின் சிறப்பாம்சங்கள்.

நிற்க, குறைஷ் குலத்தவர்கள் யாரெனின், மஹர் பின் மாலிக் உடைய மக்களாவர். எனவே, இவர்களின் பெருமையும் கீர்த்தியும் வெளிப்படையானதாகும். மக்கமாநகர் ஜனவாசமுடைய தானபோது இவர்கள் கஃபத்துல்லாவுடைய பாதுகாப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். மேலும் இன்னோர் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது (வழிவந்த) மக்களாவர். ஆகையால் இன்னோரது உத்தமத்தன்மையும், பெருந்தகைமையும் ஒப்புக்கொள்ளப்பட்டதாயிருந்தன. இன்னோரின் மொழியும் மிகவும் இலக்கியச்சீரும் கருத்துப்பண்பும் உடையதா யிருந்தது. இன்னோருடைய திவ்விய ஆலோசனையானது அராபிய ஐக்கியத்துக்கும் அடிகோலி இருந்தது.

குறைஷ்குலத்தாரில் மூன்றாவதாய் பிரசித்திப்பெற்ற பெரியார் ‘குஸ்ஸா’ என்பவராவர். இப்பெரியார், கஃபத்துல்லாவின் பாதுகாப்பாளர்களில் கடைசியான ஸ்தானம் பெற்றிருந்தவரொருவரின் அரும் புதல்வியை மணந்துகொண்டிருந்தவராவர். மேலும் இவர் எல்லாக் குறைஷ் கூட்டத்தாருக்குமே ஒருபெரிய தலைவராயு மிருந்தவராவர். இவர்தான் மக்கமாநகரின்கண் விஷயாலோசனை மன்றம் (தாருன்னத்வா) நியமனஞ் செய்துவைத்தவருமாவர். இன்னும் இவர் கஃபத்துல்லாவின் ஒரு பாதுகாப்பாளராகவும், ஹாஜிகளுக்கு ஜலபானம் செய்விப்பவராகவும், ஏழைகளின் பரோபகாரியாகவும், ‘மஜ்லிஸுல் உமரா’ என்னும் பிரபுக்கள் சபையின் தலைவராகவும், கல்வி யறிவாற்றலின் அதிபராக விளங்கி வந்தவருமாவர்.

தவிர குறைஷியர்களுடைய பெருந்தகைமைக்கு மாபெரும் மற்றோர் ஆதாரமாயிருந்தது, அன்னோர் 'ஹலபுல்புழூல்' என்னும் நாமத்துடன் ஸ்தாபிதஞ் செய்திருந்த பொதுச்சங்க ஸ்தாபனமாகும். இச்சங்கத்தின் நோக்கம் யாதெனில், மக்கமா நகரின்கண் துன்பப்படுத்தப்பட்டோர் எவரேனும் காணப்படுவராயின் அவருக்காதரவாய் சங்கத்தின் சார்பாக நடவடிக்கை யெடுத்துக் கொள்ளப்பட்டு, அவ்விதக்கொடுமையையும் கொடுமையாளனையும் ஒழிப்பதாகும்.

புகாரீ ஷரீபின் சரிதையில் வரையப்பெற்றிருப்பதாவது:—அருள் மிகுந்த அல்லாஹு தஆலா, குறைஷ் குலத்தாருக்கு ஏழு மகத்துவங்களை யருள்புரிந்துள்ளான். அவை, (1) ஆதியில் அரப் தேசத்தில் சத்திய இறைவனை வணங்குபவர் வேறுயாருமேயில்லாதிருந்த காலத்தில் இவர்கள்தான் பத்து ஆண்டுகள்வரை ஏக இறைவனின் வணக்கம் புரிந்துவந்தார்கள்; (2) யானைப் படைகளைத் திரட்டிக்கொண்டு பரிசுத்த மக்காவின்மீது அப்ரஹாம்மன்னன் படையெடுத்துவந்தபோது, இன்னோர் அக்காலை முஷ்ரிக்களாக யிருந்துங்கூட அல்லாஹு தஆலா இவர்கட்கே உதவிபுரிந்து (அப்ரஹாம் படையை நாசப்படுத்தி) காப்பாற்றி வைத்தான்; (3) பரிசுத்த குர்ஆன் ஷரீபில் இவர்களைப்பற்றி இறைவன் பிரஸ்தாபித்துள்ளான்; (4) இவர்கட்கு நபித்துவத்தை அருள் புரிந்தான்; (5) இவர்கட்கு கிலாபத் பதவியும் அளித்தான்; (6) இன்னோர் கஃபத்துல்லாவை பாதுகாக்கும் பாக்கியமும் அருளப்பட்டனர்; (7) ஹாஜிகளுக்குச் சேவைப் புரியும் பெரும்பேறும் இவர்கட்குக் கிடைத்தது என்பனவாம்.

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா அராபிய தேசத்தின்கண் அராபியக் கூட்டத்தினின்று, குறிப்பாக குறைஷ் குலத்தாரின்றே லோக தயாளர் சுகுணசீலர் நபிகள் பெருமான் (ஸல்.) அவர்களை திரு ஜனனம் புரியச்செய்தான் என்பதற்கும், இஸ்லாமியத் தொண்டாற்றுவதற்கு அக்குறைஷ் குலத்தாரின் தன்மையில் தகுதித்துவம் எம்மட்டும் அமைந்திருந்த தென்பதற்கும் மேலே எடுத்தோதப்பட்ட வசனங்களில் தக்க சமாதானத்தைக் கண்டெடுத்துக் கொள்ளலாம்.

நபி பெருமானாரது (பனூஹாஷிம்) குடும்பத்தாரின் பெருமைகள்

குறைஷ் குலத்தாரிலும் பனூஹாஷிம்கட்குத்தான் 'நபித்துவத்துக்குரிய குடும்பம்' என்ற புனிதச் சிறப்புக் கிடைக்கப்பெற்றிருந்தது. இதற்குரிய காரணங்களோ மிகவெளிப்படையாம்.

(ரிவாயத்):—ஆபூநஈம் அவர்களால் அறிவிக்கப்பட்டிருப்பதாவது:—"குறைஷியர்களிடையே நான்கு பெரும் விசேஷத்துவங்கள் அமையப்பெற்றிருந்தன. அவை, (1) எங்கேனும் சண்டைச் சச்சரவு நிகழ்வுறுமாயின் மிக மிக துரிதமாய் முன்வந்து சமாதானம் செய்யவும்ஒற்றுமைப்படுத்திவைக்கவும் அவர்கள்தான் முதன்மையாய் நிற்பார்கள்; (2) துன்பங்கள் வந்துறுங்காலை ஒவ்வொரு எளியவர்க்கும் பக்கபலமாய் நின்று ரக்ஷிப்பவர்கள் அவர்களாகவே இருப்பார்கள்; (3) யுத்தகளத்தினிடையே அவர்கள் காலூன்றிநின்று கொள்வார்களாயின் வெற்றியோ, மரணமோ நிகழாதவரை ஓரடியும்பின்னெடுத்துவையார்கள்; (4) அகதிப் பிள்ளைகட்கும், ஏழைகட்கும் அருந்துணையாயிருந்து அனுதபித்துதவுவார்கள். மேலும் கொடுங்கோலர் - அட்டூழியக்காரர்களுடைய வழிகளை அடைத்துப் போடுவார்கள்" என்பனவாம்.

இஸ்லாமியத் திருவருள்தூதர் (ஸல்.) அவர்களுடைய முப்பாட்டனர் ஹாஷிமாவர். இப்பெரியாரது நாமத்தாலேயே குலப்பெயரும் வழங்குகின்றது. ஹாஷிம் அவர்கள் தங்கள் சமுதாயத்துக்காக வேண்டி கோடைப் பருவத்திலும், மாரிப்பருவத்திலும் யாத்திரைச் சென்று வியாபார வழிக்காக அடிகோலி வைத்தார்கள். எனவே, அவ்வுத்தமப் பெரியார் வெய்யிற் கால யாத்திரைக்குரிய பாதுகாப்புக்காக வேண்டி ரோமாபுரி அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தனர்; குளிர்காலத்தின் யாத்திரைக்குரிய பாதுகாப்புக்காகவென்று யமன் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டிருந்தார்கள். அப்பெரியாரது திவ்விய வியாபார சம்பந்தமான இப்பெரும் ஒப்பந்தங்களின் பயனாய் அவர்களது குடும்பத்தாரிடையே பெருந்திரவியம் சேர்ந்துவிட்டது. அவர்கள் புரிந்த வியாபாரத்திறனும் பெருக்கமும் எம்மட்டும்

போற்றற் குரியதா யிருந்ததெனின், இறைவனே தன் தூயத் திருக்குர்ஆனில் அவர்களின் வியாபாரத்தை வெகுவாய்ச் சிலாக்கித்துப் பிரஸ்தாபித்துவிட்டான்.

பெரியார் ஹாஷிமுடைய அசல் பெயர் 'அம்ரு' என்பதாகும். இப்பெரியார், ஏராளமானபேர்கட்குரொட்டியை(ஷோர்பா)குழம்பில் தோய்த்து உணவூட்டுபவரா யிருந்தமையால் இப்பட்டப்பெயர் அருளப்பட்டதெனக் கூறப்படுகின்றது. மேலும் ஹாஷிம் அவர்களுடைய உணவிரிப்பும் பல்லோருக்கும் இடமுள்ளதாயிருந்தது எனவே, ஊரிலே பஞ்சமிருப்பினும், இல்லாமற்போயினும் என்றென்றும் சதா அவர்கள் வீட்டில் எண்ணற்ற யாத்ரீகர்கட்கும், ஹாஜிகட்கும், மக்கா வாசிகட்கும், மற்றோருக்கும் தாராளமாய் உணவுபசரணைகள் அதிகம் நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.

இஸ்லாமியத் திருத்தூதர் (ஸல்) அவர்களுடைய பாட்டனாரான அப்துல் முத்தலிப் அவர்கள், தங்களது அருமந்தத் தந்தையாரைக் காட்டினும் பரோபகார தான தருமத்தில் முன்னேறிச் சென்றுவிட்டார்கள். இவ்வுதாரத் தன்மையைப்பற்றி (ரிவாயத்) அறிவித்திருப்பதாவது :—"அப்துல் முத்தலிப் அவர்கள் உணவு தான தருமங்கள் புரியுங்கால், மாந்தர்களென்ன வனவாழ் மிருகங்களையும், ஆகாயப் பறவைகளையுங் கூட மறந்துவிடமாட்டார்கள். தவிர முதன் முதலாக 'ஹிரா' குகைக்குட் சென்று 'இஃதிகாப்' இருந்த புனிதப்பெரியார் இவர்களேயாவர். மேலும், ஹாஷிம் மதுபானம் அருந்தலை அடியோடு விட்டுப்போட்டார்கள் இன்னமும் 'ஜம்ஜம்' கிணற்று ஜலத்தைப் பருகலாமே யல்லாது அதனால் ஸ்நானஞ் செய்யக் கூடாதென்று அவர்கள்தான் சட்டக்கட்டுப்பாடியற்றி வைத்தார்கள்" என்பதாம்.

இவைதான், நபித்துவத்துக் குரித்தாயிருந்த குடும்பத்தாரின் பெருமைகளை விளக்கும் சுருக்கவரலாறு. இன்னமும் அந்தக் குடும்பமானது சத்குணங்களிலும், பெருந்தகைமையிலும், ஆன்மார்த்தத்திலும், அறிவுப்பரிபூரணத்திறனிலும் மற்றெல்லா சமூகங்கட்குத் தலைசூடும் முடியாகவே விளங்கி வந்தது. குறைஷ் கூட்டத்தார்களனைவரிலும் இக்குலத்தார் மட்டுந்தான் எல்லாவித சூது, வஞ்சம், சுயநலம், அகந்தை, போர்க்குணம் முதலியவற்றை விட்டும் மிக ஒதுங்கி தூய தன்மைவாய்ந்தவர்களா யிருந்தனர். பின்னர் இஸ்லாமில் யாவரும் சேர்ந்துகொண்ட பிறகுங்கூட அக்குலத்தவர்கள் மிகமிக கண்ணியமாகவும், தலைமையாகவும் பாவிக்கப்பட்டுவந்தார்கள்.

எம்பெருமானாரின் பெற்றோர்கள்.

நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் அருமந்தப் பாட்டனாரான அப்துல் முத்தலிப் அவர்கள் ஹாஷிமவர்களின் ஏகப்புதல்வராவர். ஆனால் அப்துல் முத்தலிப் அவர்களுக்கு பௌத்திர பாக்கியத்தை இறைவன் அதிகமாகவே அருள்புரிந்திருந்தான். அப்பலப்புதல்வர்களில் அபூதாலிப், அப்பாஸ், ஹம்ஸா, அப்துல்லாஹ் ஆகியவர்கள் பிரக்கியாதிக் குரித்தானவர்களாகும்.

எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் அரும்பிதாவாகிய 'அப்துல்லாஹ்' அவர்களது திருமணம் ஆமினா அம்மையாரவர்களுடன் நிகழ்வுற்றது. இவ்வுத்தமப்புனிதப் பிராட்டியார் 'குஸிய்யீ'வின் சோதரராம் ஜுஹ்ராவுடைய வம்சத்திலுதித்தவர்களாவர். பெரியார் அப்துல்லாஹ் அவர்கட்கு தங்கள் குலத்திலேயே விவாக பந்தத்துவம் கிடைக்கப்பெற்றதால் அவர்களும் கீர்த்திக்குரியவர்களானார்கள். மேலும், அப்துல்லாஹ் அவர்களது விவாகச்சடங்குகள் ஆமினா பிராட்டியார் வீட்டில்தான் நிறைவேறிற்று. பெரியார் அப்துல்லா அவர்கள் திருமணத்தையடுத்த மூன்று நாளும் அவ்வில்லத்திலேயே தங்கியிருந்தார்கள். அதே காலத்திற்றான் அன்னை ஆமினா அவர்கள், நபிய்யுல் அமீன் (ஸல்.) அவர்கட்கு தம் கர்பாசயத்தின்கண் இடமளித்தனர்; சூல்கொண்டனர்; தமக்கோர் அரும் மகவு ஜனிக்குமென்னும் அபிலாஷைப் பூண்டனர்.

சூல்கொண்டபின் அன்னை ஆமினா அவர்கள் சுகதேவியாகவும், ஆனந்தத் தோற்றத்தினராகவும் இறுதிவரை இருந்துவந்தனரென்றும், புனித சிசுப் பிரசவகாலம் வரைக்கும் அவர் தம் சரீரத்தினில் எத்தகைய நோவினையோ, சிரமமோ அடையப்பெறவே இல்லையென்றும் ரிவாயத்து அறிவிக்கின்றது.

லோக தயாளர் (ஸல்) அவர்கள் ஜனனமாவதற்கு சிறிது காலமே எஞ்சியிருந்தக்

காலை, பிதா அப்துல்லாஹ் அவர்கள் இப் புவி வாழ்வைவிட்டு மறைந்தார்கள். ஆகையாய் சற்குண தயாளர் (ஸல்.) அவர்கள் அன்னையின் வயிற்றினுள்ளேயே அனாதை சிசுவாகிவிட்டார்கள்.

ஒருமுறை நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் சிரிய தோழர்கள் எம்பிரானவர்களை விளித்து, "யாரஸுலல்லாஹ்! தங்களது ஜனன வரலாற்றைப்பற்றி எங்களுக்கு அறிவித்தருளுங்கள்" என்று கேட்டுக்கொண்டமைக்கு, அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் திருவுளமானதாவது:—யான் எனது பூர்வப் பிதா இப்ராஹீம் (அலை.) உடைய பிரார்த்தனையாக இருக்கின்றேன்; இன்னும் ஈஸா (அலை.) அவர்களுடைய நன்மாராய அறிவிப்பாகவு மிருக்கின்றேன்; எனது அருமந்த அன்னையார் சூல்கொண்டிருந்த காலத்தில் சொர்ப்பனமொன்று கண்டார்கள்; அதில், அவர்களுடைய சரீரத்தினின்று ஜோதியின் கிரணங்கள் வெளிப்பட்டுச்சென்றன; அவற்றால் பஸ்ராவின் பூமியும் ஸிரியாவின் ஓடைகளும் ஒளிமயமாய் இலங்கத் தெரிந்தனவாம்." என்பதே.

வெளிரங்கத்துக்கு இஃதோர் சொர்ப்பனமேயாயினும், அந்தரங்கத்தில் அஃது கனவாகயில்லை. ஆனால் ஆமினா அம்மையாரின் மான்மியம் மிக்க அரும்புதல்வரான நபிபெருமானார் (ஸல்) உடைய மகத்தான பிற்கால வெற்றிக்குரிய ஓர் அத்தாக்ஷியேயாம். இதன் மர்மத்தை இஸ்லாமிய சரித்திர வாயிலாய் உணர்ந்தறியலாம். ஆகையால் நபித்துவப் பிரகாசக் கிரணங்கள் இத்தாரணியிலும், தாரணிவாழ் மாந்தரிலுமிருந்த எந்தெந்த அந்தகாரப் படலங்களை எல்லாம் எத்தகைய சத்திய தர்மநீதியின் ஒளிவுகளாகவும், விவேகார்த்த சன்மார்க்க சுத்பிரஹாசக் கிரஹணங்களாகவு மாற்றி வைத்து இலங்கச் செய்துவைத்துவிட்டதென்பதை ஓர்ந்துப் பார்ப்போமாக.

எம்பெருமானாரின் புனித ஜனனம்

லோகத்திற்கே பேரருளாய்த் தோன்றிய அத்தூய குழவி கி. பி. 571-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் இத்தாரணியின் கண் புனித ஜனனமாயிற்று. அச்சிசுவின் உடலம் மாசற்ற தங்க மயமாய்—பரிபூரணமாய் யாதோர் பின்னமுமின்றித் துலங்கிற்று. அதன் திருமுகாரவிந்தம் (பௌர்ணமியை நிகர்த்து) சுந்தரூபணமாய் விளங்கிற்று; அதன் சின்னஞ்சிறு கண்கள் ஜோதிமயமாயும் மனோகரமாயும் இலங்கிற்று.

ஜனித்த மூன்று நாட்கள் அன்னை ஆமினா அம்மையார் அதற்குப் பாலூட்டினார்கள். அதன்பின்னர் சில நாட்வரை அபூலஹபின் அடிமை நங்கையரான துவைபாவே அமுதூட்டிவந்தனர். குறைஷ் குலத்து கனவான்களின் வழக்கம், தங்கள் சிசுக்களை செவிலித் தாய்மார்களிடம் பாலூட்டி வளர்ப்பதற்காக ஒப்படைத்து விடுவதாயிருந்தது. இஃதேனெனின், மக்கா நகரத்தின் சீதோஷ்ணமானது கடுமையாகவும் தீங்குண்டு பண்ணுவதாகவு மிருந்ததாகையால் கனவான்கள் வீட்டுக் குழந்தைகள் செவிலித் தாய்மார்களிடம் ஒப்படைக்கப்பட்டு தம் மேற் பார்வையின் கீழ் ஊரையடுத்துக் காற்றோட்டமும் விசாலமுமான பகுதிகளில் வைத்து வளர்க்கப்பட்டு வருவர்.

அவ்வாறே அன்னை ஆமினா அவர்களும் தன்னருமந்த புனிதக்குழந்தையை ஊட்டி வளர்ப்பதற்காக வேண்டி ஹலீமா ஸஅதிய்யா என்ற செவிலித்தாயாரிடம் ஒப்புவித்தார்கள். ஹலீமாவும் அக்குழந்தையை தனக்குக் கிடைத்த அரும்பெரும் பாக்கியமெனப் பாவித்து பிரியத்துடன் ஊருக்கெடுத்துச்சென்று அபரிமித வாஞ்சையுடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தார்.

அறிவும் விவேகமும் சிறப்புற வளர்ந்த பிள்ளை நான்கு பிராயங் கடந்த மழலைச் சொற்பாலகரானதும் வழக்கம்போல் பெற்றன்னையாம் ஆமினா அம்மையாரிடம் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர் ஈராண்டுகள் கழிந்தவுடன் அருமைத்தாய் ஆமினா அம்மையவர்களும் இத் தாரணியைவிட்டு விண்ணடைந்துவிட்டார்கள். ஆகையால் ஆறே ஆண்டுகளடைந்த அப்பாலகரான முஹம்மத் (ஸல்.) மாதாபிதாவற்ற அனாதைப்பிள்ளையாகிவிட்டனர்.

புனிதப்பிள்ளையின் பெற்றோர் இருவரும் காலஞ் சென்றுவிட்டமையால், பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள், வியசனத்தால் வாடிய தம் அருமைப் பேரப்பிள்ளையை வாஞ்சையுடன் ஏந்தி போஷித்து வரலானார்கள். இப்பெரியாரும் ஈராண்டுப் போஷ

ணக்குப் பின் தம் பேரப்பிள்ளையை அகதியாகவே விட்டுக் காலஞ்சென்று போனார்கள். அதன்பின் அபூதாலிப் அவர்கள் முனைந்துத் தம் தமையரின் தனையரை தயையுடன் ஆதரித்து போஷித்து வளப்பதானார்கள். எம்பிரான் (ஸல்.) அவர்களின் சிறிய தந்தையான அபூதாலிப் (ரலி.) அவர்கள் வருமையின் காரணத்தால் சுகவாழ்வு இல்லாதாராயிருந்தனர். எனவே, பாலகரான முகம்மத் (ஸல்.) அவர்கள் தங்கள் சிறிய தந்தை யாதரவில் இருந்துவந்த காலமெல்லாம் சிரமமும் கஷ்டமுமான வாழ்க்கையே நடத்தி வரலானார்கள். இங்ஙனம் எம்பிரான் (ஸல்.) அவர்கள் பால்யகாலத்திலே பலவித சஞ்சலத்துக்கும் கஷ்டத்துக்கும் ஆளாகவேண்டி யிருந்தது கருணாகரனான இறைவனின் நாட்டப்படியேயாம். அதாவது, சர்வலோக சீர்த்திருத்தப் பெரியாராய் விளங்கத்தக்கவர் தாமும் சுயமே உலகத்தொல்லைக்கும் சஞ்சலங்கட்கும் ஆளாகி அனுபவம் பெற்றுத் தேர்ச்சி பெறுவதற்கேயாம்.

ஆரம்பவாழ்க்கையும் திருமணமும்.

இப்பிரபஞ்சத்தின் மகத்தான சீர்திருத்தகராய வள்ளல் (ஸல்) அவர்கள் அனாதையாகவே பிறந்தார்கள்; ஏழ்மை நிலையிலேயே வாழ்ந்தார்கள்; மழலைப் பிராயத்திலேயே மாதாவின் வாஞ்சை மடியை விட்டும் வேறுக்கப்பட்டார்கள். இவற்றையெல்லாம் கடந்து வந்தபின், மேலும் பாலப்பருவ வாழ்க்கை அவர்கள்மாட்டு சம்பவிக்கின்றது. இவ் விளம் பிராயத்தில், அவர்கட்குத் தங்கள் பிதாவின் ரார்ஜிதத்தினின்று கிடைத்தமை ஐந்து வெள்ளாடுகளும், ஐந்து ஒட்டகங்களுமேயாம். சர்வலோகமாந்தரின் மேய்ப்பாளரான அப்பாலகர், அந்நாற்காற் பிராணிகட்கோர் மேய்ப்பாளராகி, ஆட்டுமந்தையை மேய்க்கும் பணியில் பிரவேசித்தார்கள். அப்பாலகப் பெருமானாரவர்கள் (ஸல்.) பாடுபட்டு சம்பாதித்துக்கொண்டுவந்து தங்கள் சிறிய தந்தையினிடம் சமர்ப்பிக்கும் ஊதியமனைத்தையும் அப்பெரியார் தங்கள் செல்வக் குமாரருக்காக வென்றே பிரத்தியேகமாய் செலவழித்துவிடுபவரா யிருந்தனர்.

சர்வலோக மேய்ப்பாளராம் முஹம்மத் (ஸல்) அவர்கள் தங்கள் பன்னிரண்டாம் பிராயத்தில் சிறிய தந்தை அபூதாலிப் அவர்களுடன் ஸிரியா (ஷாம்) தேயத்துக்கு யாத்திரைபோனார்கள். இதை யொட்டிரிவாயத்து அறிவிப்பதாவது,—"ஷாம் தேசத்தின் கண் கிறிஸ்துவ சன்னியாசி யொருவரிருந்து வந்தார்; அவர் பெயர் 'புஹைரா' என்பதாம். இக்கிறிஸ்துவத் துறவியானவர், நமது இளஞ் சிறு யாத்திரீ கரைக்கண்டு அவர்களது நிறையன்பினாலும் சத்குணங்களினாலும் பெரிதும் வசிகரணமாய் விட்டார். எனவே, அக்கிறிஸ்துவப் பெரியார், அபூதாலிப் அவர்களை நோக்கி, "இஃதோ பாருங்கள்! உங்களது இந்த இளஞ்சிறு சோதிரப்புதல்வர் தான் தீர்க்க தரிசியாவர்; ஆகையால் இவரைப் பாதுகாக்கும் விஷயத்தில் தாங்கள் ஒரு கணமும் அசிரத்தையா யிருத்தலாகாது" என்று நல்வாக் களித்தார்.

நம் திருத்தூதர் (ஸல்) அவர்களது வாணாட் சரிதை வரலாற்றால் தெரிவதாவன:— எம்பிரான் (ஸல்) எந்தத் துறையில் காலடி எடுத்து வைத்தப் போதிலும் அவர்கட்கு முற்றுஞ் சாதகமாய் ஜீவியத் திருத்த வாயல்கள் சுயமே திறவுண்டு கொண்டிருந்தன. ஆதலின் அவர்களது வாழ்க்கை நாளுக்குநாள் முன்னேற்றமடைந்து கொண்டே சென்றது. மேலும், கதீஜா எனும் மாது சிரோமணி அம்மக்கமா நகரின்மிகப்பிரபல தனவணிகையாகவும், செல்வச் சீமாட்டியாகவு மிருந்து வந்தனராதலின் குறைஷ்குலத் தவரிடையே சீமாட்டியவர்கட்கு மிகப் பெருங் கண்ணியமிருந்துவந்தது. அம்மாதர் திலகம் உத்தமப் பத்தினியாயும், நற்குண நங்கையாயுமிருந்து வந்தமையால் அவரது கீர்த்தி அரப் நாடெங்கணும் பரவியிருந்தது. அக்காலை 'நவ்ஜவான்' பருவத்தை யடையப் பெற்றிருந்த முஹம்மத் (ஸல்.) அவர்கள், கதீஜா பிராட்டியாரின் வியாபாரப் பொருட்களை ஸ்வீகரித்துக்கொண்டு வர்த்தகம்புரிய ஷாம்தேசத்துக்கு யாத்திரைசென்றார்கள். கதீஜா சீமாட்டியின் ஓர் அடிமையான 'மைஸரா' என்பாரும் நம் ஆன்மார்த்த வர்த்தகராய முஹம்மத் (ஸல்.) அவர்களுடன் அப்பிரயாணத்தில் துணையாளாகச் சென்றிருந்தார். நிற்க, அன்னோர் தம் வியாபார வியவகாரங்களை இனிது முடித்துக்கொண்டு வந்ததும், அவ்வடிமை மைஸரா தன் எஜமாட்டியான கதீஜா அவர்கள் சமுகம் நண்ணி, "எம்

பெருமானார் (ஸல்.) அவர்களுடைய திவ்விய குணவிசேஷங்களையும், ஒழுக்க சுசீலங்களையும், அற்புதச் சுபாவங்களையும், புஹைராபாதிரியான கிறிஸ்துவத் துறவியார் அறிவித்த செய்திகளையும் உள்ளது உள்ளவாறு எடுத்தோதியவாற்றால், கதீஜா சீமாட்டியார் அவர்களது தூய உள்ளத்தின்கண் எம்பிரான் (ஸல்.) அவர்கள்மாட்டு அணைகடந்த பரிசுத்த பிரீதிதோன்றி, அவர்களைத் திருமணம் முடித்துக்கொள்ள வேண்டுமென்ற அபிலாஷையும் எழும்பிவிட்டது. அவ்வாறே பின்னர் இருவர்க்கும் திருமணம் நிறைவேறியக் கால்கதீஜாநாயகி (ரலி.) அவர்கட்கு வயது நாற்பதும், லோகநாயகர் (ஸல்.) அவர்கட்கு வயது இருபத்தைந்துமா யிருந்தது.

நாயகி கதீஜா பிராட்டியார் (ரலி.) அவர்கள், அத்திருமணத்துக்குப்பின் 25 ஆண்டு வரை ஜீவித்திருந்தார்கள். இந்நெடியகால வறைக்குள் எம்பிரான் (ஸல்.) அவர்கள் வேறுமணம்புரிந்து கொள்ளவுமில்லை; கதீஜா பிராட்டியாரை விசுவாசித்து வந்ததைப் போல் வேறெவரையும் விசுவாசிக்கவுமில்லை. கதீஜாப் பிராட்டி (ரலி.) விண்ணேகிய பின்னரும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், தங்கள் ஆயுட்காலமெல்லாம் அப்பிராட்டியாரை நினைத்து வருந்திக்கொண்டேதானிருந்தார்கள். ஆகையால், கதீஜா பிராட்டியாருக்குப் பிறகு நாயகம் (ஸல்) அவர்களின் இளம்பத்தினியாய் வாய்க்கப்பெற்ற உத்தமி ஆய்ஷா நாயகியாருங்கூட எம்பிரான் (ஸல்.) அவர்கள் கதீஜா (ரலி.)வை நினைத்து வருந்து தலைகண்டு மனம்வெதும்பியுள்ளார்கள்.

எனவே, ஆயிஷா (ரலி.) அவர்கள் அறிவித்திருப்பதாவது:—"ஒருமுறை எனது நாயகர் (ஸல்.) அவர்கள் ஹஜ்ரத் கதீஜா (ரலி.) வைப்பற்றி என்மாட்டுப் பிரஸ்தாபிக்கலானார்கள்; அன்னவரைப்பற்றிய புகழுரைகள் எனக்குவிருப்பில்லாதனவாய்ப் புலப்பட்டன. எனவே யான் "என்னரும் நாயகரே! கதீஜா ஒரு கிழப் பெண்பாலராகவன்றோ இருந்தனர்; இஞ்ஞான்று இறைவன் தங்கட்கு அவரைவிட மேன்மையான மனைவியை அளித்திருக்கவில்லையா?" என வினவிவேன். எனது இக்கேள்வியால் லோகநாயகர் (ஸல்) அவர்கள் அதிகம் அதிருப்தியடைந்து கூறலானார்கள் :—"இல்லை! ஆண்டவன்மீது ஆணையாக அப்பத்தினியை விட மேன்மையான மனைவி எனக்கு முற்றுங் கிடைக்கவேயில்லை!! மற்றெல்லா மாந்தரும் என்னை நிராகரித்துக் கொண்டிருந்த காலை அவ்வுத்தமிதான் என்மீது நன்னம்பிக்கை (ஈமான்) கொண்டனர்; இன்னும் வேறொரு வரும் என் சொல்லை உண்மைக் கொள்ளாதிருந்தக்கால் அச்சத்தியவதிதான் என் சொற்களை முற்றும் உண்மைப்படுத்தி செவிசாய்த்தனர்; மற்றெல்லா ஜனங்களும் என்னை பகிஷ்கரித்து விட்டிருந்தபோது அவ்வுயர் குணவதிதான் எனக்காக தன் பொருட்களை யெல்லாம் அர்ப்பணஞ்செய்து விட்டனர்; ஆண்டவனும் அவர் வாயிலாகத்தான் எனக்குப் புத்திரப் பாக்கியத்தையும் அருள்புரிந்தான். எனவே இத்தியாதிச் சிறப்புக்களும் வேறெந்த என் மனையாட்டியிடமும் கிடைக்கப்பெறவே இல்லை" என்பதே. லோகநாதர் (ஸல்) அவர்கள் இங்ஙனம் எடுத்தியம்பியதன் பின்னர் யான் எச்சமயமும் இனி அவ்வுத்தமத் தலைவியை பற்றி துர்சிந்தனைக் கொள்வதே இல்லையென மனோ உறுதிப்பாடு செய்துகொண்டேன்"

அத்தகைய திருமிகு கதீஜா பிராட்டியார் (ரலி.) அவர்கள் விண்ணுற்றேகிய பின்னர் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அநேக விவாகம் முடித்துக்கொண்டு வாழ்ந்தார்கள். இங்ஙனம் பலதாரங்களை மணந்துகொண்டமைக்குரிய காரணங்கள் இரண்டாகும். (1) அவர்களது பலதார மணத்தின்கண் விளங்கும் பொதுப்படையான தத்துவம், இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம் ஸ்திரீ வர்க்கத்தினருக்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள் தங்கள் இப்பல மனைவிகளைத்தான் சன்மார்க்க குண ஒழுக்க போதகிகளாக நியமித்திருந்தார்கள். இப்படிச் செய்வதனாற்றான், உலகப்பிரஜைகளிலொரு பகுதி இனத்தினரான பெண் சமூகத்தாருக்கு பெண்களைக்கொண்டே போதிக்கச் செய்தாற்றான் சன்மார்க்கக் கட்டளைகள் இறுதிவரை நிலைத்து தலைமுறைத் தலைமுறையாய் ஓங்கி நடைபெறுமென்னும் நுட்பத்தை வள்ளலவர்கள் உணர்ந்திருந்தார்கள், (2) அப்பலதார மணத்தின்கண் மிளிரும் மற்றோர் குறிப்பான விசேஷ தத்துவம், கால தேச வர்த்தமானத்தை யனுசரித்து அனுஷ்டித்ததாகும். இதனையொட்டிவிரித்தெழுதுவதாயின் அதற்காக தனிப்பட்ட கட்டுரை அத்தியாவசியமாகிவிடும்.

எம்பெருமானார் நபித்துவம் பெறல்.

மாந்தரிற் பெருந்தகையார் முஹம்மத் (ஸல்.) அவர்கள், உலகார்த்த ஸ்திதியை யொட்டியப் பாங்கில் ஜன சமுதாயத்தின் மத்திபமான அந்தஸ்தையுடைய இனத்தைச் சார்ந்தவர்களாகவே யிருந்தார்கள். ஆனால், சாத்வீக இயற்கை சுபாவத்தையும், மிகத் தூய ஆன்மார்த்தத் துறையையுமொட்டியப் பாங்கில் மற்றெல்லா மாந்தர் கோடிகளைக் காட்டினும் மிகமிக மேலான அந்தஸ்தை யடைந்தவர்களாய் விளங்கினார்கள். எனவே, அவர்கள் மானுஷ்யச் சிரேஷ்டர்களாய்த் துலங்கினார்கள். மானுஷ்யக் கோமான் முஹம்மத் (ஸல்.) அவர்கள், அனாதை ஸ்திதியில் பிறந்தார்கள்; ஏழ்மையோடிருப் பினும் மிகத்தூய தன்மையுடன் வளர்க் கப்பெற்றார்கள்; அவர்கட்கு தனவந்தவதி யுடன் விவாகமாகியுங் கூட அவர்கள் நிஷ்களங்கமும் நன்றியறியுமுள்ள தன்மை யாளராய் மனைவியுடன் வாழ்ந்து வந்தார் கள்; அந்தியும் சந்தியும் எம்பிரானவர் கள் (ஸல்.) அந்தக் குறைஷியர்களது சக வாசத்திலிருந்து வந்தார்களெனினும், தங்க ளது மூதாதைகளைப்போல் அன்னவர்களின் மதாசாரத்திலோ, உலகாசாபாசத்திலோ கிஞ்சித்தேனும் கலந்துகொண்டார்களில்லை; அவர்களின் சுற்றத்தார்கள் விக்கிரகாரா தனை புரியுங் காலமெல்லாம் எம்பெரு மானாரவர்கள் (ஸல்.) தூரவே விலகி யிருந்து விடுவார்கள்; அன்னோர் இராக் காலங்களில் கூடி யுட்கார்ந்து கதா காலக்ஷேபங்கள் புரியுங்கால் ஆத்மநாதர் (ஸல்) அவர்கள் அதில் சிறிதும் கலந்து கொள்ளாமலே இருந்து விடுவார்கள். இன் னும் அன்னோர் குதர்க்க வாதங்களும் தீய தீர்மானங்களும் புரிய ஆலோசனை மன்றத் துக்குப் போகுங்காலத்திலெல்லாம், ஞான நாதர் (ஸல்.) அவர்கள் அதைவிட்டு முற் றும் தங்களை விடுவித்துக் கொள்ளுவார்கள்; அக்கால மக்கமாநகர் மாந்தர், கவிப்புனைவதி லும் கவிப் பாடுவதிலும் பெரும் பெரும் ஆர்பாட்டங்கள் புரிபவர்களா யிருந்தனரெ னின், நமது வித்வநாதர் (ஸல்.) அவர்கள் ஒருநாள் கூட அன்னோருடன் கவிப்புனையா மலே இருந்து வந்தார்கள். சுருங்கக் கூறு மிடத்து, ஞானாசிரியத் தலைமைத் தனத்தின் பால் சமுசயக் களங்கமேற்படக்கூடியதும், தங்களுக்கு இராஜரீக ஆதிக்கம்பெறும் ஆர் வம் சிறிதேனும் இருப்பதென்று வெளிப் படுத்தக் கூடியதுமான எவ்விதச் சொல்லோ செயலோ அம்மெஞ்ஞான கர்த்தர் (ஸல்.) அவர்கள்மாட்டுக் காணப்பட்டதே கிடையா தெனலாம். மேலும் பெரும்பாலும் நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் ஏகாந்த வாசத்தை விரும்புகிறவர்களா யிருந்தனர். இன்னும் மௌடீக மாக்களின் துராசாரச் சடங்குகள், இணைவைத்தலாய வழிகேடுகள், கவிப்புனைவ தினாலாய செருக்குப் பெருமைகள், சண்டை சச்சரவுகளின் சம்பந்தங்கள் முதலியன வற்றை விட்டும் பெரிதும் விலகிவிடுபவர்களா யிருந்தார்கள்.

மெய்யாக நந்திருத்துதாங்கர் (ஸல்.) அவர்கட்கு உண்மை பேசல் நாணத்துட னொழுகுதல், நன்னடத்தை புரிதல், சத் சுபாவங்களை அனுசரித்திருத்தல் ஆகிய வைகளே மிகமிக விருப்பமுடையதாக யிருந்து வந்தது. இவ் விஷயங்களில் ஸர் வரே ஆலம் (ஸல்.) அவர்கட்கு அக்காலத் தவரிடையும் அழியாப் புகழ் பிரசித்திப் பெற்றிருந்தது. ஆகையால் உற்றார்களிட மும் மற்றோர்களிடமும் நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் அல்அமீன் (நம்பிக்கைக் குரியவர்) என்ற புனித நாமத்தால் பிரஸ் தாபமாயிருந்துவந்தார்கள்.

இவ்வாறாய நிலைமையினூடே நமதுரஸூல் (ஸல்.) அவர்கள் வாலிபப் பருவத்தினைக் கடந்து சென்றுவிட்டார்கள். எனவே அவர் களது தூயதேகம் பரிபூர்த்தியடைந்துவிட் டது; அவர்களது பரிசுத்த ஆன்மாவின் சக்திகளும் பரிபக்குமடைந்து விட்டன. அதன் பயனாய் அவர்கட்கு செல்வத்தின் ஆர்வமும் ஜனிக்கவில்லை; அதிகார வேட் டையும் உண்டாகவில்லை; பட்டம் பதவி களின் கதிரொளியும் இலங்கவில்லை; இன் னும் கீர்த்திப் பிரதாபத்தின் அபிலாஷையும் தூண்டவில்லை. ஆனால், பரிசுத்த பரமலோக கர்த்தனின் அருட்சோதி அவர்கள்பால் விஜ யம் செய்யும் தக்ககாலம் நெருங்கிவிட்டது. எனவே அவ்வருட்ஜோதி (நபித்துவம்) கிடைக்கப்பெற்ற வரலாறு வருமாறு.—

நபிகள் திலகம் முஹம்மத் (ஸல்.) அவர் கள் இராக்காலத்தில் சொர்ப்பனவாய்லாய் ஒன்றைக் காண்பார்களானால், பகற்காலத்தில்

அதனை பிரத்தியக்ஷமாய் காண்பவர்களாயிருந்தார்கள். மேலும் தனிமையாகயிருந்து தவமியற்றும் ஆசையானது எம்பிரான் (ஸல்.) அவர்கட்கு அபரிமிதமாய் பெருகிற்றுதலின், பன்முறை மக்காநகர்ப் பகுதியைவிட்டு வெளிப்போந்து பற்பல நாட்கள்வரை 'ஹிரா' என்னுங் குகையில் தனித்திருந்து தவமியற்றுவார்கள். சமயாசமயத்தில் ஆங்கிருந்து இல்லம் வந்து, தங்கள் பத்தினி கதீஜாபிராட்டியாரிடமிருந்து வறுத்த மாவும் வெறும் ஜலமும் வாங்கிக்கொண்டு போய் விடுவார்கள். இதேவிதமாக எம்பிரான் (ஸல்) அவர்கள் நாற்பதாம் பிராயத்தைப் பூர்த்தியாக்கினுர்கள். அஞ்ஞான்று கி. பி. 610-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் 22-ம் தேதி திங்கட்கிழமை யன்று அதே 'ஹிரா' குகையின்கண் இறைவனது தேவ தூதர் (ஜிப்ரயீல்) அவர்கள் விஜயஞ்செய்து நபித்துவம் ஒப்படைக்கலானுர்கள் —

எனவே, ஜிப்ரீல் (அலை.) அவர்கள் நபிகளுதர் ரஸூல் (ஸல்.) அவர்கள் முன்னிலையில் இருந்து 'இக்ரவ்' (ஓதுவீராக) என்று கூறினுர்கள். அதற்கு எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் "யான் ஓதப்படிக்கத் தெரியாதிருக்கும் நிலைமையில் எவ்வாறு ஓதுவது" என்று பதில் மொழிப் பகன்றூர்கள். இவ்வாறே மும்முறை ஜிப்ரயீல் (அலை.) ஆக்ஞையும் நபிகள்பிரான் (ஸல்) அவர்களின் பதில் மொழியும் நிகழ்வுற்றபின், ஜிப்ரயீல் (அலை) அவர்கள் முன்வந்து லோக நாயகர் (ஸல்.) அவர்களை தங்கள் மார்போடணைத்து ஆலிங்கனம் (முஆனகா) புரிந்தார்கள். அப்போது உடனே, (இறைவனுக்கும் அவ்வடியாருக்குமிடையே இருந்த) திரையானது நீக்குண்டு போயிற்று. இங்ஙனம் நபித்துவம் அருளப்பட்டதான முதலாவது வஹீயின்மூலம் பின் வரும் திருவசனங்கள் அருளப்பட்டன :—

நபியே! சிருஷ்டித்தவனுன உமது இரக்ஷகனுடைய நாமத்தால் ஓதுவீராக! அவன் மனுஷ்யரை இரத்தச் சத் (இந்திரியத்)திலிருந்து சிருஷ்டித்தான். மேலும் ஓதுவீராக! சிறப்புமிக்க உமது இரக்ஷகனுனவன் எழுதுகோலைக் கோண்டு கற்பித்து வைத்தான். மனிதனுக்கு அவன் அறியாததைக் கற்பித்துக் கோடுத்தான். (குர் ஆன்.)

இஸ்லாத்தின் திருவருள் தூதரான முஹம்மத் நபி (ஸல்.) அவர்கள், இந்த மெஞ்ஞான திருத்தூதை ஏற்றுக்கொண்டு, துரிதமாய் தங்கள் அருமைப்பத்தினி கதீஜா நாயகி (ரலி.) அவர்களிடம் வந்து சேர்ந்தார்கள். தங்கள் நாயகர் (ஸல்.) அவர்கள் அதுசமயம் பெருமித அச்சத்தால்உறுத்தப்பட்டவர்களாயிருந்ததை நாயகி யவர்கள் கண்டார்கள். உடனே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் படுத்துக்கொண்டு என்மீது கதகதப்பான துப்பட்டியைப் போர்த்துங்கள் ; போர்த்துங்கள் !!' என்று வேண்டினுர்கள். இவ்வாறுய் சொற்பநேரங் கழிந்தபின்னர் எம்பிரான் (ஸல்.) அவர்கள் மனப்பதற்றம் அடங்கி அமைதி ஏற்படலாயிற்று. அப்போழ்து அவர்கள், கதீஜா நாயகியை (ரலி.) நோக்கி, குகையில் நிகழ்வுற்ற விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாக எடுத்துரைத்து "யான் என் உயிருக்கு பயப்படுகின்றேன்" என்று பிரலாபித்தார்கள். இவ்வற்புத வரலாறுகளைச் செவியுற்ற கதீஜா நாயகியவர்கள் (ரலி) தங்கள் நாயகரை நோக்கி இறைவன் மீதுப் பிரமாணமாய்! "தங்களுக்கு யாதோர் அச்சமுங்கிடையாது ! அவ்விறைவன் தங்களை ஒருபோதும் சஞ்சலத்திலாக்கிவைக்கமாட்டான் ; தாங்களோ எல்லோருடைய சஞ்சலங்களையும் தீர்த்து வைப்பவர்களாயிருக்கின்றீர்கள் ; தேவைப்படுவோர்களின் தேவைகளைப் பூர்த்திப் படுத்திவைப்பவர்களாகவு மிருக்கின்றீர்கள்; விருந்தினர்களைப் பெரிதும் உபசரிக்கின்றீர்கள் ; ஆகையால் அவ்விறைவன் தங்களைப் பாதுகாப்பவனுகவும், உதவி புரிந்தருள்பவனுகவு மிருக்கின்றுன்" என்று தைரியங் கூறித் தேற்றினுர்கள்.

இச்சம்பவம் நிகழ்வுற்று மூன்று வருடங்கள்வரை நபிகள் பிரான் (ஸல்) அவர்கட்கு அவ்வித 'வஹீ' (ஞானேதயம்) நிகழவில்லை. எனவே, அவர்கள் பெரிதும் மனவமைதியின்றி அல்லாஹ்வினிடமிருந்து திருவருள் தூதின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதையொட்டி ரிவாயத்து அறிவிப்பதாவது:—ஓர் நாள் லோகதயாளர் (ஸல்.) அவர்கள் இல்லம்விட்டு வெளியே போய்க்கொண்டிருந்தார்கள் ; அப்போது அவர்கட்கு ஒருதொனி கேட்டது ; எனவே அத்தொனிவந்த திசையாகிய வானத்தை ஏறிட்டு நோக்கினுர்கள் ; முன்னர் குகையில் வந்திருந்த அந்த ஜோதிப்பிரகாச தேவத்

தூதரே மீண்டும் தங்களைநோக்கி விஜயம் செய்வதைக் கண்டார்கள். இம்முறை இறைவனிடமிருந்து அத்தேவத்தூதர் கொண்டு வந்த வசனங்களாவன :—

"ஏ துப்பட்டிப் போர்த்திக் கொண்டிருப்பவரே! எழுவீராக! ஜனங்களுக்கு அச்சுறுத்துவீராக! உமது இரக்ஷகனின் பெருமையைப் பரத்திவைப்பீராக! உமதுவஸ்திரத்தை பரிசுத்தமாய் வைத்துக்கொள்வீராக! (விக்கிரத்தொழும்பாகிய) அசூசையைவிட்டு விரண்டு செல்வீராக! என்பதாம் (குர் ஆன்)

இக்கட்டளைக்குப் பின்னர் றஸூல் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். குர் ஆன் ஷரீபின் ஆயத்துக்கள் கொஞ்சங் கொஞ்சமாக ஜிப்ரயீல் (அலை) மூலமாய், தங்களது மரணகாலப் பரியந்தம் இறங்கிக் கொண்டே இருந்ததால் அவற்றினை நபிகட் பெருமானர் (ஸல்.) அவர்கள் உடனுக்குடன் மன்பதைகட்கு போதித்து வந்தார்கள். இவ்வாறு இஸ்லாத்தின் திருத்தூதரவர்கட்குக் கிடைத்த இரக்ஷகனது திருத்தூதுகளெல்லாம் பரிசுத்த குர்ஆனின்கண் சேகரமாக்கப்பட்டுள்ளன.

எம்பிரான் (ஸல்.) அவர்களின் திருத்தூது.

ஒரு சில ஆண்டுகளுக்குள்ளே இவ்வுலக மக்களின் சரிதையை ஒரே அடியாய் மாறுதலாக்கிவைத்த அப்படிப்பட்ட மகத்தான திருத்தூது(போதனை)கள் யாதா யிருந்ததென்பதை சற்றே நோக்குவாம் :—

மானுஷ்ய ஆசானிடம் எத்தகைய கல்வியறிவுங் கல்லாதவரும், ஓரெழுத்தும் படிக்காதவரும், ஒரு வரியும் எழுதத் தெரியாதவரும், ஒரு கவியும் புனையாதவருமான மனுஷ்யர் ஒருவர் குரோதம் மிகுந்த முரடரும், அவிவேகிகளாயு மிருந்த கூட்டத்தாரில் பிறந்து வளர்ந்து அவர்களை சீர்த்திருத்தி வைக்கும் போதராய் விளங்கலானார்கள். இன்னமும் அம் மௌடீகக் குழாத்தினர் எத்தகையவர்களெனின், விக்கிரகாராதனையின் இழிவும், மூடத்தனத்தின் அகங்காரமும் அவர்கள்மீது குடிகொண்டிருந்தது; இகத்துடையவும் பரத்துடையவும் சாம்ராஜ்ஜியத்தை வெகு காலத்துக்கு முன்னரே இழந்துபோயிருந்தவர்கள்; அன்னோர்கட்குரித்தாய் எந்த அரசாங்கமு மிருந்ததில்லை; அவர்களில் எவரும் அதிகாரியாக யிருக்கவுமில்லை; அன்னோருக்காக ஒருவித சட்டதிட்டமுங் கிடையாது. அப்படிப்பட்ட சமூகத்தில் நிர்கதியாளராய் உதித்த அனாதையும், உத்தமோத்தமரும், எதேச்சை சுபாவியுமான ஒருவர் துணிவுடன் எழுந்து நின்று, தம் கூட்டத்தின ரெல்லோரையும் அழைத்து, இப்பூவுலகின் பொய் தெய்வமாகிய விக்கிரக வணக்கத்தை விட்டுத் தொலைத்து, என்றென்றும் ஜீவிப்பவனும் அழியாது சதா நிலைத்திருப்பவனுமான ஒரே இறைவனின் ஏகத்துவத்தை விசுவாசிக்க வேண்டுமென்றும், அவனையே வணங்க வேண்டுமென்றும் புனருத்தாரணம் செய்து வைத்தனர். மேலும், எங்கும் கவிந்துக் கொண்டிருந்த அக்ஞானத்தையும் அறியாமையும் ஒரே அடியாய் ஒழித்தனர். மானுஷ்ய வர்க்கத்தினர்பால் கல்வியையும், வேத அறிவையும், பகுத்தறிவையும் விவேகத்தையும் அவசியக் கடமையான திட்டங்களாக்கி வைத்தனர்; இன்னும், மூட நம்பிக்கைகட்கும், மூதாதையரை குருட்டுத் தனமாய் பின்பற்றுவதற்கும் எதிரிடையாக கிளர்ச்சிப் புரிந்தனர்; மேலும் மாந்தர்கள் ஒவ்வொரு வியவகாரத்திலும் புத்தியையும், பகுத்தறிவையும் செலுத்திப் பயனடையும் படிப்பினையையும் கற்பித்து வைத்தனர். அப்பரிபூர்ண மனுஷ்யர், ஒவ்வொரு மனிதரும் கல்வி ஞானத்தைப் பெறுவதற்காக தமது சகல சக்திகளையும் ஒப்படைத்துவிட வேண்டுமென்று வற்புறுத்தி வைத்தனர்; இன்னும் இவ்விகலோக சராசரங்களில் பொதிந்து கிடக்கும்படியான பிரயோஜனங்களையெல்லாம் தேடியடைந்து நலனெய்துமாறுஞ் செய்தனர். மேலும் இப்பிரபஞ்சத்தின்கண் இறைவன் சிருஷ்டித்து வைத்தவையனைத்தும் மானுஷ்யக் கோடிகளின் தொண்டிற்கும் பிரயோஜனத்துக்குமே யாகுமென நம்பி பயனெய்துமாறு நல்லறிவையும் போதித்தனர். இத்துணை மான்மியமும் ஒருங்கே அமையப்பெற்றுள்ள அற்புதப் போதகர் நமது நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களேயாவர்.

சர்வலோக சீர்திருத்தகராய் எம்பெருமானர் (ஸல்.) அவர்கள், முன்னுண்டாயிருந்த வானவழி வேதங்களையெல்லாம் முற்றும் மெய்ப்பித்து வைக்கும்படியான தெய்வீக

சட்டதிட்டத்தை (குர்ஆனை)ஏற்றுக்கொள்ளு மாறு மாந்தர்களை பகிரங்கமாய் அழைத்தார்கள்; அழைத்தவண்ணமே உலகத்தின் சகல மதஸ்தர்கள் யாவரும் ஓர் மத்திபஸ்தானத்தின்பக்கல் (இஸ்லாத்தின்பால்) வந்து ஏக மாகிவிடும்படியான வகையையும் ஏற்படுத்தி வைத்தார்கள்; அவ்வித சீர்திருத்த வரம்புக்குள்ளவே சர்வ மானுஷ்ய வர்க்கத்தாருக்கும்வேண்டுமான சகல அனுகூலங்களையும் ஏற்படுத்திவைத்தார்கள். இவ்வனுகூலங்களால் சமூக வேறுபாடு, குலப்பிரிவினை முதலிய ஏற்றத் தாழ்வுகளெல்லாம் ஒழிந்து போகுமாறும் சாதித்தார்கள். மேலும், மனுஷ்யரை இராஜரீகமாகவோ, ஆன்மார்த்தமாகவோ அடிமைகளாக்கிக்கொள்ளும் வழக்கத்தையும் கெல்லி எறிந்தார்கள்; ஒவ்வொரு மாந்தரும் மானுஷ்ய ரீதிப்படி முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடைதற்குரிய வழியாகிய வாயிலையும் திறந்துவைத்தார்கள். தவிர மானுஷ்யரெல்லோரும் சுயேச்சையாளரும் சுதந்திர சாலியுமாவர் என்ற நரதருமத்தைப்பிரகடனப்படுத்தியும்வைத்தார்கள்; ஒவ்வொருவரும் முதலாவதாக (இஸ்லாம்) சன்மார்க்கத்தின் கொள்கைக் கோட்பாடுகளை நன்கு ஆராய்ந்துணர்ந்த பிறகே அதனை ஏற்றுக்கொள்ளலாமென்று அறிவித்துவிட்டார்கள். எனவே, முதலில் சன்மார்க்கத்தின் வணக்கத்திலுள்ள தத்துவங்களை யுணர்ந்து அதனையே சர்வேஸ்வரனின் திருவருளை யடைதற்குரிய உபாயமாய்க் கொள்ளலாம் என்ற உண்மையை யாவரும் நன்கு தெரிந்துகொண்டார்கள்.

இன்னமும், நபிகள்பிரான் (ஸல்.) அவர்கள், பொதுவான அரசியல் வியவகாரத்திலும் சமுதாய விவகாரத்திலும் ஆலோசனை யளிக்க வல்லவருடைய ஆலோசனைகளைக் கேட்டு நடக்கவேண்டியது அவசியமென்றும் ஏற்படுத்தினர்கள். தவிர மாந்தர்கள் தம் தமக்குள் அமைதியை நிலைநிறுத்துவதும், பரோபகாரங்கள் புரிவதும், தம் ஷரீஅத்தின்படியும் நற்குண ஒழுக்கக் கட்டளைப்படியும் நடக்கவேண்டியது அவசியமாகுமென்றும் தெரிவித்தார்கள். இன்னமும், மார்க்கானுஷ்டானப்படியும், உலக வழக்காசாரப்படியும் எவருடைய நடத்தைகள் தூய்மையானவையாகவும், நல்லெண்ண முள்ளவையாகவுமிருக்குமோ அவர்கள் ஈடேற்றம் பெறுதல் சாலுமென்று வெளிப்படையாய் அறிவித்துவிட்டார்கள். மேலும் நன்மையையொட்டி பிறர்க்குப் போதனை செய்வதையும், தீமையை விட்டுப் பிறரைத் தடுப்பதையும், வாழ்க்கை முறையின் பிரதானக் கடமையாக ஏற்படுத்தினர்கள். மேலும் ஒவ்வொரு மாந்தரும் இக்கடமைத் தொண்டு புரியவேண்டுமென்றும், ஒவ்வொரு சபையினரும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டுமென்றும் விதி ஏற்படுத்தினர்கள்.

நபிகள் திலகம் ரஸூல் (ஸல்.) அவர்கள், சில குறிப்பிட்ட அத்தியாவசிய சந்தர்ப்பங்களில்மட்டுந்தான் யுத்தம் புரிவதற்கு தங்கள் வாளுளில் அனுமதித்துள்ளார்கள். அதுவும் அதைத் தவிர்த்து உய்ய வேறு வழியில்லாத சமயத்தில்மட்டுந்தான். அத்துடன், அவ்வித ஜிஹாதுகளில் பொருள் அழிவுகளும், உயிர் நஷ்டங்களும் அதிகப்பட்டுப் போகாத வண்ணம் பகீரதப் பிரயத்தனமும் எடுத்துக்கொண்டுள்ளார்கள். அவ்வித யுத்த சந்தர்ப்பத்தில் லோக தயாளர் (ஸல்.) அவர்கள் தங்கள் தோழர்கட்கு ஆக்ஞைப் பிறப்பித்ததாவது:—“பெண்மணிகள்மீது எவரும் தம் வாளாயுதத்தைப் பிரயோகிக்கவே கூடாது; சிறுவர்கள்மீதும், கூலிக்காரர்கள்மீதும், வணக்கம் புரிந்து கொண்டிருப்பவர்கள்மீதும் வாளாயுதத்தை ஏந்தக் கூடாது. மேலும் கொல்லப்பட்டுப் போனவர்களின் அவயவங்களைத் துண்டித்தல் கூடாது; காயப்பட்டு வீழ்ந்தவர்களின் அங்க இலக்ஷணத்தைக் குலைத்துப் போடலாகாது; யாரேனுமொரு பகைவன் தாழ்ந்து அபயங் கோருவானுகில் உடனே வாளாயுதத்தை உறையில் போட்டுவிட வேண்டும்; வேறு எதிரி யாரேனும் சமாதானம் விரும்புவாராயின் அல்லது யுத்தந் துவங்கிய நோக்கம் பூர்த்தியடைந்து விடுமாயின் அந்தக்ஷணமே வாள் வீச்சுகளை ஒடுக்கிக்கொண்டுவிட வேண்டுமென்பனவாம்.

இவ்வாறே நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் மானுஷ்ய வாழ்வு சம்பந்தப்பட்ட ஒவ்வோர் அம்சத்தையும் உள்ளுணர்ந்து சீர்திருத்தம்செய்து வைத்தார்கள். எம்பெருமானுரின் (ஸல்.) இத்தகைய சமத்துவ சட்டதிட்டங்களினுல் அடிமைகளின் அந்தஸ்து பெரிதும் உயர்ந்துவிட்டது; சிற்சில சந்தர்ப்பங்களில் அவ்வடிமைகளை விடுதலை செய்து

விடுவதும் கடமையென ஏற்படுத்தப்பட்டு விட்டது. மேலும், லோகதயாளர் (ஸல்) அவர்கள் அனுதைகளின் பாதுகாப்புக்காக வேண்டியும் ஆக்ஞைப் பிறப்பித்துள்ளார்கள்; பெண்மணிகட்கு சொத்துரிமையையும், அன்னேர் தனிப்பட சொத்து சாதனங்களைச்சேமித்து வைத்துக்கொள்ளும் பாத்தியதையையும் அருள் பாலித்தார்கள். இம்மகத்தான சீர்திருத்தங்களெல்லாம் மானுஷ்ய வாழ்க்கையிலே இணையற்றனவாய் அமைந்திருக்கிறதன்ருே? (இவற்றினை சாதித்த எம்பிரான் (ஸல்.) சர்வ லோகத்தாரின் நன்றியறிதலுக்குப் பாத்தியமானவர்களா யிருக்கின்ருர்களன்ருே?)

சர்வ லோகத்துக்குமுரிய சத்போதம்.

மானுஷ்ய வர்க்கத்தின் வாழ்க்கை நிலையானது, சர்வலோகத்துக்குமுரிய சீர்த்திருத்த இயக்க மொன்றின்பால் தேவைப்பட்டுக் கொண்டிருந்தது. (அதாவது மனிதர்களைப் பரிபக்குவப் படுத்திவைக்க மானுஷ்யப் பரிபூரணச் சீர்திருத்தகரொருவர் அவதரிக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டிருந்தது.) ஆகையால்தான் லோக சீர்திருத்தகர் ஹஜ்ரத் நபிய்யகரீம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இத்தாரணியின் கண் விஜயஞ் செய்தார்கள். எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள், ஆண்டவனது கட்டளைப்பிரகாரம் "யான் அகில உலகத்தின் சர்வ சமூகத்தினர் கட்காகவும் அல்லாஹுவின் நபியாக வந்துள்ளேன்; யான் அவ்வாண்டவனின் திருத்தூதை மாந்தர் களனைவர்கள்பாலும் சமர்ப்பிக்கின்றேன்" என்று அறிவித்து வைத்தார்கள். எம்பிரான் (ஸல்.) அவர்களின் இந்த சத்திய வாதத்தை யொட்டி திருக்குர் ஆனில் பின்னிருவசனங்கள் காணப்படுகின்றன. அவை:

(1) சர்வ லோகத்தாருக்கும் அச்சமூட்டி எச்சரிக்கைச் செய்பவராயிருப்பதற்காக தன்னுடைய அடியார் (முஹம்மத்)மீது புர்கானை-சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமிடை பிரிவினைச்செய்து காட்டும் வேதத்தை இறக்கி வைத்த இறைவன் மகா உயர்த்தியானவனுகி விட்டான்.

(2) (ஏ நபியே!) யாம் உம்மை அனுப்பி வைத்தமை, சர்வ மானுஷ்ய கோடிகட்கு சுபச்செய்தி அறிவிப்பதற்காகவும், அச்சமூட்டி எச்சரிக்கைச் செய்வதற்காகவுமே யல்லாது வேறில்லை.

இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் ஒருபக்கல், சர்வலோகத்துக்குரிய சன்மார்க்கத்தைப் போதித்துக்கொண்டிருந்ததினூடே தங்களுக்குரிய பரிபூரண வெற்றியையும் உலகத்தோர்பால் பிரகடனப்படுத்தி வைக்கலானுர்கள். எனவே அவர்கள், இஸ்லாத்தின் விரோதிகளை நோக்கி, "சகலமும்வல்ல அல்லாஹுதஆலா இவ்வகிலத்தின் கண் உங்கள்மீது எனக்குப் பரிபூரண வெற்றியை யருளியுள்ளான்; பின்னர் நீங்கள் மறுமைவாழ்வில் இறைவனின் தண்டனைகட்கு இலக்காவீர்கள்" என்று முன்னறிக்கைச்செய்து வைத்தார்கள். மேலும் தங்களைப் பின்பற்றியவர்களை நோக்கி, மிக பகிரங்கமான மொழிகளில் "ஏ தோழர்களே! யான் உங்களுக்கு இருலோகத்திலும் மகிழ்ச்சியையும் வெற்றியையும் அருளும்படியான சுபச்செய்தி யறிவிக்கின்றேன்; அவ்விரண்டிலொன்றை எக்காலும் நீங்கள் அவசியம் அடையப் பெறுவீர்கள்; எனவே, நீங்கள் யுத்த மைதானத்தில் வெட்டுண்டுப் போவீர்களாயின் ஷஹீதுடையப் பதவியை பெற்றுக் கொள்வீர்கள்; அவ்வாறின்றி நீங்கள் உயிர்தப்பிஜீவிப்பீர்களாயின் வெற்றி வாழ்க்கையும் நித்தியக் கீர்த்தியும் பெற்ருேங்குவீர்கள்; அல்லாஹுத ஆலா உங்கள் கரங்களினுலேயே எகிப்துடையவும் ஸிரியாவுடையவும் இராஜ்ஜியத்தை வெற்றிக்குள்ளாக்கிக் கொடுப்பான்; நீங்கள் பிற்காலத்தில் கெய்ஸருடையவும் கிஸ்ராவுடையவும் பிரதேசங்கட்கெல்லாம் அதிபதிகளாய் விளங்குவீர்கள்; மிகச் சொற்பகாலத்துக்குள்ளரே அன்னேர் மீது ஆதிக்கங்கொண்டு விடுவீர்கள்" என்று நன்மாராயமும் சுபச்செய்தியு மருளினுர்கள்.

எம்பெருமானுர் முஹம்மத் (ஸல்.) அவர்கள், வெறும் உத்தேசமாக மட்டும் விஷயங்களை முடிவு கூறுபவர்களாயில்லை; ஆனுல், ஞானேதயப்படி இவ்வித விஷயங்களை தீர்க்கமா யுணர்ந்து முடிவுகட்டுபவர்களா யிருந்தனர். இங்ஙனம் வெற்றியருள்வது முஸ்லிம்கட்கு, தூய்மைமிக்க இறைவன் செய்தளித்த திடமான வாக்குறுதியாகும் என்று எம்பெருமானுர் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். இம்மகத்தானதும், நித்திய கீர்த்திக்குரியது

மான இவ்வெற்றி விஷயத்தைப்பற்றி ஆண்டவனும் தனது திருமறையில் பின் வருமாறு அறிவிக்கின்றான் :—

உங்களிலின்று நன்னம்பிக்கை கொண்டிருப்பதுடன் நற்கருமங்கள் புரிகின்றவர்கட்கு, அல்லாஹுத ஆலா வாக்குறுதி யளிப்பதாவது: உங்களுக்கு முன்னுண்டாயிருந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் அருளியதைப்போல் இப்பூவுலக (இராஜ்ஜிய)த்தில் அம்மூமினை வர்கட்கும் பிரதிநிதித்துவம் அருள்வான்; இன்னும் அவர்களுக்காகவேன்று அல்லாஹுத ஆலா பொருந்திக்கொண்ட (இஸ்லாம்) மதத்தை அவர்கட்கு ஸ்திரமான தாக்கி வைப்பான்; இன்னும் அவர்களுடைய அச்சங்களை அமைதிப் பாதுகாப்பாக மாற்றி வைத்துவிடுவான்; அப்படிப்பட்ட (மூமினை)வர்கள் என்னுடன் யாதோர் வஸ்துவையும் இணையாக்கி வைக்காமல் என்னையே வணங்குவார்கள். அவ்வாறின்றி யாரேனும் அவ்வெற்றிக்குப் பிறகும் மாறுபாடு செய்து விடுவோரானால் அன்னவர்கள்தான் மகாப்பாவிகளாவர்.'' என்பதாம்.

மானுஷ்யப் பரிபூர்ணராய நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் இவ்வரும்பெரும் மகத்தான சத்திய வாதத்தோடு தங்கள் நபிப் பட்டத்தை ஜனங்கள்பால் எடுத்தோதினார்கள். அப்போது அவ்வவிவிவேக ஜனங்களிற் பெரும்பாலோர் அவைகளை ஏற்றுக் கொள்ளாமல் முகந்திருப்பிப் போய்விட்டனர். மேலும் அக்கூட்டத்தினர்க்கு தலைவர்களாயும், சற்றே அறிவுடையவர்களாயுமிருந்தவர்கள், எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடைய புத்தி சுவாதீனத்தில் கோளாறு ஏற்பட்டுவிட்டதென்று எண்ணிக்கொண்டு பலகாலும் லோக தயாளர் (ஸல்.) அவர்களின் சத்வசனங்களை நிராகரித்துப் பார்த்து அலுத்துப்போனார்கள். இறுதியாக அன்னோரெல்லாம் 'இங்ஙனம் முஹம்மத் (ஸல்.) கூறும்—புரியும் அற்புதங்களெல்லாம் மாயஜாலமென்று முடிவுகட்டினார்கள்; எம்பிரான் (ஸல்,) அவர்களை கேலிப் பரிகாசஞ் செய்யவுந் தலைப்பட்டுவிட்டார்கள்; அவர்களை மாந்திரீகரென்றும், சூன்னியக்காரரென்றும், கவிப் புனைபவரென்றும் பல பல விதமான நாமங்களைச் சூட்டத் தலைப்பட்டு தாங்கள் செய்வதே சரியானதென்று கூறி சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

மேலும் உலகச்சிரேஷ்டர் நபிகட்பிரான் (ஸல்.)அவர்கள்முற்றும்யாதோர்சொத்துசாதனமற்றவர்களென்பதையும்,வெற்றிப்பெறுதற்கு உபாயப் பொருட்களும் ஆதரவுகளும் அவர்கட்குக் கிடையாதென்பதையும் கண்டு கொண்டேதானிருந்தனர். தவிர அவர்களுக்கு எத்தகைய செல்வாக்கோ, வலிமையோ, பணமோ காசோ, ஜனமோ, கூட்டமோ யாதொன்றுங் கிடையாதென்பதை நன்கறிந்தேதானிருந்தனர். மாந்தர்களின் மனங்களை வசிகரஞ் செய்வதற்கு அவர்கள் (ஸல்.) தன்மையில் கவிப்புனையுந் திறன் கிடையாதென்பதையும், கேட்போர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்வதற்குரிய திவ்விய பிரசங்க ஆற்றல் கிடையாதென்பதையும் நன்குணர்ந்தே தானிருந்தார்கள். தூயத்தூதர் ரஸூல் (ஸல்.) அவர்கள்பால் ஏதேனும் குற்றங் குறை கண்டு பிடிப்பதற்கு இவ்வாறெல்லாம் அப்பெருமானாரின் (ஸல்) வாழ்க்கை முறையின் ஒவ்வோரம்சத்தையும் துருவித் துருவியாராய்ந்தார்கள். எனவே அம்மௌட்டிய மக்களின் நோட்டமும் ஆராய்ச்சியும் மிகமிக ஆழமாய்த் தேடிச் சென்று பார்த்துங்கூட லோகதயாளர் (ஸல்.) அவர்களது வாழ்க்கையினில் சத்தியம், உண்மைப் பேச்சு, நாணயம், சொற்றவறாமை, ஆழ்ந்த சிந்தை, நற்குண நல்லொழுக்கம், சாந்தம், சுசீலம் முதலிய அம்சங்களைத் தவிர்த்து வேறெவ்வித களங்கமும் இருப்பதாய் அவர்கள் கண்டு கொள்ளவே இல்லை. இவ்வாறு அந்தக் காபிர்கள் பன்முறைஅறிவையும்சிந்தனையையும்உபயோகித்துப் பார்த்துங்கூட நேர்மைக்கு வராது அதற்கு மாறாய், "முஹம்மத் (ஸல்.) ஏதோ பைத்தியப் பிணிக்காளாயிருக்கின்றாரென்றும், அவர் ஒருபோதும் தம் வாதத்தில் வெற்றியடைய முடியாதென்றும்'' பிணாத்திக்கொண்டு திரிந்தார்கள்.

இத்தகைய நிலைமைகளில், அல்லாஹுத ஆலா தனது மகாசக்திக்குரிய அத்தாக்ஷிகளைக் கொண்டு, அதாவது மிகமிகப் பெரிய தெய்வீக அத்தாக்ஷியான குர்ஆன் வேதம் முதலியவற்றைக் கொண்டு லோக தயாளர் (ஸல்.) அவர்களுடைய சத்தியத்தையும் மகத்துவத்தையும் நிலை நிறுத்தி வைத்தில்லா திருப்பின், இன்னமும், அல்லாஹுத ஆலா தன்னுடைய அருள் வாக்

குறுதிகளை பிரத்தியக்ஷமாய் சர்வஜனங்களின் கண் முன்னர் நிறைவேற்றி வைத்தில்லாதிருப்பின், பிற்காலத்தில் தோன்றிய ஜனங்களெல்லாம் தம்முன்னோராய மூடர்களைப்போலவே, நபிகள் திலகம்(ஸல்.) அவர்களைப் பழித்துக் குறை கூறுவதற்கு ஒருசிறிசிறிதும் பின்னடைய மாட்டார்களன்றோ? ஆனால் அல்லாஹுதஆலா தன் சக்தியினால் எம்பிரான் (ஸல்.) அவர்களுக்கு அருள் புரிந்த வெற்றிகளின் காரணமாய், இக்கால உலகத்தின் எத்திசையிலும், எத்திக்கிலும் இஸ்லாமிய ஸ்திரத்தின் ஜோதியே பரவி வியாபித்துக்கொண்டு போகின்றது. இதன் காரணமாய் இஸ்லாத்தின் மேன்மைகளை உலகத்தாரெல்லோரும் ஊன்றி கவனிக்கலானார்கள். மேலும் இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்.) அவர்கட்கு விரோதமாய் உளறிக்கொண்டிருந்த மூடப் பகைவர்களின் கூற்றுகட்கு குர்ஆன் ஷரீப் அறைந்த மகத்தான மறுமொழியானது எத்துணை உறுதியும் வன்மையுமாயிருக்கிறதென்பதை ஒவ்வொரு மாந்தரும் உணர்ந்து வருகின்றார்கள் அம்மொழியாவது:—

"நூன், எழுதுகோல்மீதும், அதனால் எழுதப்படுபவைகள்மீதும் பிரமாணமாக! (எநபியே) உமது இரக்ஷகனின் அருளினால் நீர் பைத்தியக்காரராய் இல்லீர்! நீர் நன்றிசெலுத்தியும் மாளாத (அத்துணை) நற்கூலி நிச்சயமாக உமக்குஉண்டாயிருக்கின்றது.மேலும் நிச்சயமாக நீர் மேன்மையான குணத்தின்பேரிலா யிருக்கின்றீர். ஆகையால் உண்மையில் யார் பைத்தியத்துக் காளாக்கப்பட்டவர் என்பதை கூடிய விரைவில் நீரும் கண்டுகொள்ளுவீர்; மற்றோரும் கண்டுகொள்வார்கள். நிச்சயமாக உம்முடைய இரக்ஷகன் தன் சன்மார்க்கத்தைவிட்டு வழிகெட்டுச் சென்றவன் யாரேன்பதை மிகவும் நன்கறிகிறவனாயிருக்கின்றான். மேலும், அவ்விறைவன், நேர்வழிப் பெற்றவர்களைப்பற்றியும் நன்கறிந்தவனாயிருக்கின்றான்" என்பதாகும்.

பரிசுத்த குர்ஆன்.

இஸ்லாத்தின் திருத்தூதர் ரஸூல் (ஸல்.) அவர்களது சத்தியத்துவமானது ஆயிரக்கணக்கான பகுத்தறிவாதாரத்தைக் கொண்டும், வெளிப்படை யத்தாக்ஷிகளைக் கொண்டும் ஸ்திரமாயிருக்கின்றது. அவற்றுடன், நபி கட்டிலகம் (ஸல்.) அவர்களுடைய நபித்துவ உண்மைக்கு மகாப்பெரும் அரும் சான்றாகத் துலங்குவது பரிசுத்த குர்ஆன் திருமறையேயாகும். இச்சான்றானது ஓர் இம்மியளவும் மாறுதல் மருகுதல் இல்லாமல் உலகமுடிவுகாலம்வரை நிலைத் திருக்கக் கூடியதாகும். எனவே குர்ஆன் ஷரீபானது, மாந்தர் கோடிகட்கு சன்மார்க்கத்தை போதிக்கும் இலக்ஷணமும், கடந்த காலம் நிகழ்ந்தகாலம் வருங்காலம் ஆகிய முப்பருவத்துடைய அறியப்பட்டிராச் செய்திகளையும் அந்தத்திருவேதம் எடுத்தியம்பும் பாங்கும் பெரியதோர் தெய்விக அற்புதமாய் விளங்குகின்றது. அத்திருமறையின் மிகமிகமேலான நஞ்சன்மார்க்கத்தின் சட்டதிட்டங்களும், மிகமிக உச்சஸ்தானத்துக்குரிய சமூகச்சீர்த்திருத்தத்தின் ஒழுக்கரீதிகளும் பரிபூரணமாய் அமைந்திருக்கின்றன. மேலும் ஆன்மார்த்தத்துறையில் மிகமிக மேன்மையும் பரிபக்குவமும் எய்தற்குரிய அனுஷ்டான வகைகளும்அதில் அமையப்பெற்றிருக்கின்றன.மிகமிகபரிபூர்த்தியான முறையில், மானுஷ்யஉடலோம்பலின் தத்துவார்த்த அனுஷ்டானத் திட்டமும் அதில் போதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தனிநபர்க்கும் வேண்டுமான சர்வ விஷயங்களும் அதில் குறைவறக் கூறப்பட்டுள்ளன. இன்னம் ஒவ்வொரு கூட்டத்தாருக்குந் தேவையான முன்னேற்ற வழிகளெல்லாமும் அத்திருமறையின்கண் கூறப்பட்டுள்ளன. மேலும் மானுஷ்ய வர்க்கத்தினர், அறிவாதார முன்னேற்றமும், நுண்ணறிவின் பரிபக்குவமும் அடைதற்குரிய கலாஞான சம்பந்தமான அவசிய தத்துவார்த்தங்கள் அத்திருமறை நிறையக்கிடக்கின்றன. ஆகையினாற்றான் இப்போதனைகள் எந்நிலைமைக்கும் எக்காலத்துக்கும் எத்தேசத்துக்கும் ஏற்றமுறையில் மானுஷ்ய இனத்தின் சரியான சத்வழிக்காட்டியாய்ச் சிறந்து விளங்கிக்கொண்டிருக்கின்றது.

குர்ஆன் ஷரீபின் மகாத்மியத்துக்குரிய மற்றுமோர் அரும்பெரும் சிரேஷ்டாம்சம் யாதெனில், அதன் சட்டதிட்டங்களெல்லாம் இயற்கை நியதிக்கு முற்றமுற்ற ஒத்தமைந் திருப்பதாகும். ஆகையால், அந்நீதிகள் எல்லாவித விகற்பங்கள், முரண்பாடுகள், குறைகள், தவறுதல்கள், தப்பிதங்கள், ஒழுங்கீனங்கள் முதலிய வெல்லாவற்றை விட்

டும் மிகத் தூய்மை வாய்ந்திருக்கின்றது. இன்னும் அதன் மற்றுமோர் சிறப்பம்சம் யாதெனில், சிறுபிள்ளையின் மனப்பாடத்திலும் வெகு எளிதில் அமைந்துகொள்கிறது; ஒரு முறை மனனம் பண்ணிக்கொண்டால் பிறகு அது எளிதில் மறக்கப்படுவதில்லை. அவ்வித தெய்வீக வேதத்தின் பிரிதோர் சொற்களிலும், கருத்துக்களிலும் உஜ்ஜீவிதமும் வசீகரப் பாங்கும் அபரிமிதமாய் அமைந்திருக்கின்றன. ஆகவே அதனை ஓராயிரம்முறை பாராயணஞ் செய்தபோதிலும் மேன்மேலும் மனப்பிரியமானது அதிலேயே ஊடுருவிச் செல்லும்; எத்தனை ஆயிரம் முறை ஓதினுலும் மனமும் உளமும் சிறிதும் சடைவடையவே மாட்டாது. அதன் ருசியும் வசீகரண சத்தியுங்கூட சிறிதும் குறைப்படுவதில்லை. குர்ஆன் உதயமானபோது அதன் மொழி திவ்வியத்திலும், வியாசப்புதுமையிலும் எத்தகைய செழிசெழிப்பும் அழகுடனும்காணப்பட்டதோ அதேபோல் நூற்றாண்டுகள் கழிந்துபோயும் தத்துவாரசத்தம் மிளிர புத்தப் புதிதாகவே நின்றிலங்குகின்றது; அத்திருமறையின் அற்புதத்தன்மையும் குன்றுவதில்லை; அதன் இரகசிய அமைப்பும்,ஞானமார்மப்பிரவாவமும் சிறிதும் தடைப்படுவதில்லை. மேலும் அத்திருமறையின் திவ்விய வசனத்தை நீங்கள் எந்தச்சமயத்தில் எடுத்துப் பாராயணஞ்செய்தபோதிலும் அதன் ஆயத்துகளும் வாக்கியங்களும் அப்போது தான் நுங்கள் முன்னிலையிலேயே இறங்கியதைப்போன்று அத்துணைத் திவ்வியமாகவும் புத்தப் புதிதாகவும் துலங்கும். எந்தக் காலத்துச் சரிதையும், எந்த இனத்து மக்களும் அதன் போதனைபகாரப் பிரவாகத்தின் பயன்பெறுமல் வேறுபட்டுத் தனிப்பட்டிருக்கிற தென்பதை நிரூபித்தல் முடியாது. இப்பிரபஞ்சத்து நிகழ்ச்சியினின்று எந்தச்சம்பவத்தையும், எவ்வியவகாரத்தையும் நந்திருமறையாம் சத்தியக் குர்ஆனானது அவற்றின் பிரதித் தோற்றத்தையும் அவற்றின் காரணகாரியத்தையும் மிகமிக இனிய முறையிலும், இயற்கை நியதி முறைப்படியும் நீங்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உங்கட்கு எடுத்தோதிவிடும். அத்தகைய மகாத்மியம் மிக்கத்திருமறையானது சென்ற கி. பி. 1914-ம் ஆண்டு (நம்முன்) நிகழ்வுற்ற மகாயுத்தத்தின் நிகழ்ச்சிகளை எத்துணை திவ்விய முறையில் எம்மட்டும் ஆழ்ந்த கருத்தமையப்பெற்று விளக்கி வைத்திருக்கிற தென்பதை கீழ் பொறிக்கப்படும் இச்சில ஆயத்துகள் மூலம் அறிந்துணர்வீர்களாக :—

(1) நபியே சொல்வீராக! அந்த அல்லாஹுதஆலா எத்தகைய சர்வசக்திவாய்ந்தவனெனின், அவன் உங்கள் மீது வேதனையை உங்களுக்கு மேலாலிருந்தும், அல்லது உங்களது பாதங்களின் அடியினின்றும் இறக்கி வைக்கவல்லவனாயிருக்கின்றான். அல்லது உங்களை பலதிக்கிலும் சிதறடிக்கச்செய்து, உங்கட்சிலரின் தீங்கைகொண்டு வேறு சிலரை ருசியறியச்செய்யவும் வல்லவனாயுள்ளான். ஆகையால், எமது சக்தியின் உண்மை அத்தாக்ஷிகளை எங்ஙனம் உலகத்தினர்பால் திரும்ப மீண்டும் மீண்டும் விளக்கிவைக்கிறோம் என்பதை நோட்டமிட்டுப் பார்ப்பீராக ; இதனால் அன்னோர் உண்மையை உணரக்கடவர் !

(2) வானமானது பகிரங்கமான புகைப் படலத்தைக் கொண்டு மனிதர்களை கவிழ்ந்துக்கொள்ளும் (பயங்கரமான) நாளை எதிர் பார்த்துக் கொண்டிருப்பீராக! அது மகாக் கொடுமையான வேதனையாம்.

மேலும் அம்மகாயுத்தத்திற்குரிய பகிரங்க அந்தரங்கக் காரணங்களையும், இவ்வுலகத்தின் சுகபோகவைபவத்தில் ஒரே அடியாய் மூழ்கிய முதலாளிவர்க்கத்தினாலேற்பட்ட சாதக பாதக நிலைமையையும் திருக்குர்ஆன் மூலம் உணர்வதற்கு கீழ்வரும் ஆயத்தை நோட்டமிடுங்கள் :—

(3) அல்லாஹுத ஆலா ஒரு நாட்டாருடைய உதாரணத்தை எடுத்தறைகின்றான்; அதாவது, அன்னோர் (முதலில்) அமைதியுடையோராகவும் மனத் திருப்தியாளராகவுமிருந்து வந்தனர்; ஒவ்வோர் பிரதேசத்தினின்றும் அன்னவர்கள்பால் உணவுச்சாதனம் மிக தாராளமாய் ஈர்ந்து கொண்டுவரப்பட்டன ; பின்னர் அன்னவர்கள், அல்லாஹுடைய அப்பாக்கியங்களுக்கு மாறுபாடு (குப்ரியத்) செய்துவிடவே அல்லாஹுத ஆலா, அன்னோர்கள் புரிந்த கருமங்கட்குப் பிரதிபலனாக அந்நாட்டாருக்கே கொடும் பசிப்பிணியையும், அச்சத்தையும் ருசிபார்க்க வைத்தான் *

திருக்குர்ஆன் எடுத்தோதியுள்ள இச் சில வாக்கியங்களில், சென்ற மகாயுத்தத்தின் நிகழ்ச்சிகளை யொட்டிய பகிரங்கமானதும் அந்தரங்கமானதுமாய விஷயங்களும், அதன் உண்மைக் காரணங்களும் எம்மட்டு திவ்வியமான முறையில் பல நூற்றாண்டுகட்கு முன்னரே வரையறுத்துக் கூறி விடப்பட்டிருக்கிறதென்பதை அகநோக்குள்ள அறிவாளிகள் நன்கறிவர். இவ்விஷய மொருபக்கமிருக்க, அவ்வசனத்தின் அமைப்பும் இலக்கிய வனப்பும் மனோகரமானதாயிருக்கிறதென்பதையும் எளிதில் உணரலாம். இத்தகையதான அதிஅற்புத மறைவான விஷயங்களை முற்கூட்டியே அறிவித்துரைக்கும் சிறப்பம்சமும், சன்மார்க்கக் கல்விகளும், சமூக தத்துவார்த்தங்களும், மெய்ஞ்ஞான ஆன்மார்த்தப் போதனைகளும், ஒருங்கே நிறையப்பெற்றுள்ள இம்மகத்தான குர்ஆன் ஷரீப் உண்மை வேதமென்பதற்குப் போதிய அத்தாக்ஷியில்லையென்று எவரேனும்எண்ணுவரோ? மேலும், மற்றற்ற அநாகரிகமும் காட்டுமிராண்டித் தனமும் கல்விச் சூன்னியமு முள்ளவர்களாயிருந்த மௌட்டிய வர்க்கத்தில் பிறந்து, கல்வியறிவு பயிலாமலேயே வளர்ந்து, நாற்பது வயதுகள் எத்தாமுன்னர் மிகச் சாதாரண சக்தியும் பக்குவமில்லா ஞானமுமே உடையவரா யிருந்த உம்மீயாகிய முஹம்மத் (ஸல்.) அவர்களின் சொந்த மூளையின்பயனைத்தான் இம்மகத்தான வேதம் உண்டாயிற்றென்று கூறப்படும் மொழிய வாஸ்தவமாமோ? இல்லையில்லை! ஒருபோதுமில்லை. இங்ஙனம் எந்த நுண்ணறிவாளனும்என்ணமாட்டான். ஆனால் அக்கால உயர்தர அறிவுள்ள அராபியரும் இவ் வேதத்தை நிராகரித்து விட்டனரே யெனக்கூறப்படின், அஃது அகந்தையினாலும், பகைமைத்தனத்தினாலும், எளியவரொருவரின் சொல்லை நாம் நம்புவதா என்ற மமதையினாலுமே யல்லாது வேறில்லை. அத்தகைய உயர்தர அந்தஸ்துடையவரா யிருந்தவர்களைத் தவிர்த்து மற்ற அராபிய பாமரர்கள், ஏழை எளியோர்கள், அகந்தையில்லா நற்புத்தியுள்ளவர்கள் முதலியோர் அக்கால பணக்காரக் கூட்டத்தினரின் தயை தாக்ஷண்யத்துக்குட்பட்டு அவர்கள் சொற்படி கேட்டு நடப்பவர்களா யிருந்தமையால் ஆரம்பத்தில் அன்னோர் நிராகரித்து பின்னர், ஈமான் கொண்டார்கள். இதனை யொட்டி பின்வருமாறு குர்ஆன் திருமொழி எடுத்தியம்புகின்றது:—

ஹாமீம். (இவ்வேதம்) அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமானவனின்றும் இறங்கியதாகும். மேலும் இவ்வேதமானது இதன் வசனங்கள் (விஷயத் தோகுப்பில்) பிரித்து வைக்கப்பட்டனவாகும்; மேலும் இது, அறிவுகோண்டுணரும் கூட்டத்தினர்க்கு அரபியாலான அருங்கிரந்தமாயிருக்கின்றது. இது நன்மாராயம் அறிவிப்பதாயும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதாயுமிருக்கின்றது. அந்த மூட ஜனங்களினின்று பெரும்பாலோர் இதை ஆக்ஷேபித்தனர்; ஏனெனின் அன்னோர் (சொன்னாலும்) கேட்காதவர்கள்; எனவே அன்னோர் 'எந்த வேதத்தின் பக்கல் நாங்கள் அழைக்கப்படுகிறோமோ அதைவிட்டும் எங்கள் மனம் மூடியிடப்பட்டுக் கிடக்கின்றது; மேலும் எங்கள் காதுகளில்அடைப்புக்கிடக்கின்றது; இன்னும் எங்களுக்கிடையிலும் உங்களுக்கிடையிலும் (ஒத்துவராத) திரையும் விழுந்துகிடக்கின்றது; ஆகையால் உமது காரியத்தை நீர் செய்துகொள்ளுவீராக! எங்கள் காரியத்தை நாங்கள் செய்துகொண்டு தானிருக்கிறோம்' என்று கூறிச்சென்று விட்டனர்.

அக்கால அராபிய மூடஜனங்கள் பிடிவாதத்தினாலும் மௌடீகத்தினாலும் செருக்கடைந்து, குர்ஆனின் உண்மையை ஒப்புக்கொள்ளாமல் நிராகரித்தே நின்றார்கள். அப்போது இஸ்லாத்தின் திருத்தூதர் எம்பிரான் (ஸல்.) அவர்கள், அன்னோரைநோக்கி, "நீங்கள் சர்வதேச சர்வஜனங்களையும் துணையாகக் கொண்டு குர்ஆனின் வசனத்து சமத்துவம் வாய்ந்ததான ஒரே ஒரு வாக்கியமாவது தயாரித்துக்கொண்டு வாருங்கள் பார்க்கலாம்"

முன் பக்கத்தில் கூறப்பட்டுள்ள மூன்று ஆயத்துகளின் முதல் வசனத்தில், மகா யுத்த நிகழ்ச்சியின் கொடும் முஸ்தீபுகளான ஆகாய விமானம், விஷக் காற்று (கியாஸ்), மேலிருந்து குண்டுகள் பொழிதல், ஜலத்துக்குள் நீர்மூழ்கி கப்பல் செல்லல் முதலியனவற்றையும், 2-வது வசனத்தில், சர்வதேசத்து எல்லா அரசாங்கங்களும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போராடலையும், விஷப் புகையை பரத்தி மக்களை மடியச்செய்வதையும், 3-வது வசனத்தில் கவனிக்கத்தக்க ஆழ்ந்த புத்தி மதியையும் எடுத்தோதப்பட்டிருக்கின்றது.

என்று அறைமொழிக் கூறி (சாலஞ்சு) செய்தார்கள். அவ்வராபியர்கள் நபிகள்பிரான் (ஸல்.) அவர்களின் சாலஞ்சை ஏற்றுக்கொண்டுபோய், தம்மெல்லோராலுமானமட்டும் பிரயத்தனப்பட்டுப் பார்த்தும் குர்ஆனது ஆயத்துக்கு இணையானதை அவர்களால் கற்பனைச் செய்ய முடியாது தோல்வியே அடைந்தனர். அங்ஙனம், குர்ஆன்ஷரீபை பொய்யென்று நிரூபித்துவிடும் ஆற்றல் அன்னோருக்கு இருந்திருக்குமாயின்,

அதற்கு ஒப்பானதாயுள்ள ஒரு சிறு அத்தியாயத்தையேனும் கொண்டுவாருங்கள்; உங்கள் கூட்டாளிகளையும் அதற்குத் துணையாக அழைத்துக்கொள்ளுங்கள்.

என்ற திருமொழி கட்டளையை நிச்சயம் நிறைவேற்றி, அவ்வேதத்தைப் பொய்ப்படுத்தி இருப்பார்கள். ஆனல் அது அவர்களால் முடியாமற் போய்விடவே,

(இப்போது) நீங்கள் அதைச் செய்ய இயலவில்லை; பிறகு எப்போதுமே அதைச் சாதிக்க மாட்டீர்கள்; ஆகையால் நரக நெருப்புக்குப் பயந்துகொள்ளுங்கள்.

என்று இறைவனே, அவர்களுடைய இயலாமையொட்டித் தீர்ப்புக்கூறிவிட்டான். இவ்வாறு தீர்ப்புக் கூறப்பட்ட வாதத்துக்கும் அவர்களால் யாதொன்றும் பதில் கூற முடியாமற் போய்விட்டது. 'இப்படியே நாம் தோல்வியை ஒப்புக்கொண் டிருந்துவிட்டால் சிறுகச் சிறுக அக் குர்ஆனின் இனிய த்வனியானது அராபிய ஜனங்களையெல்லாம் தன் பக்கல் ஈர்ந்துகொள்ளும் என்றும், அக் குர்ஆனின் வாதத்தை எதிர்த்து நிற்க நம்மிடம் எத்தகைய கல்விச் சம்பந்தமானதும், அறிவுச் சம்பந்தமானதுமான ஆதார ஆதேயம் இல்லையே என்ன செய்வது?' என்றெல்லாம் அவர்களுக்கு அச்சமும் எண்ணமுந் தோன்றலாயிற்று. எனவே, அவர்கள் தங்கள் ஜனபலச் செல்வாக்கை உபயோகித்து, "இனி நீங்கள் குர்ஆனை இரைந்து ஓதுதல் கூடாது" என்று எம்பெருமானுர் (ஸல்.) அவர்கட்குத் தடையுத்தரவும் போட்டார்கள். மேலும், அவர்கள் ஓதும் குர்ஆனை அராபியர் யாரும் செவிகொடுத்துக் கேட்கவுங் கூடாது என்று பொது ஜனங்கட்கு ஓர் தடை உத்தரவும் பிறப்பித்துக்கடுமையான கட்டுப்பாடும் செய்தார்கள். இதையொட்டி திருகுர்ஆன் கூறியிருப்பதாவது.—

(சகாக்களே!) 'நீங்கள் அந்த குர் ஆனுக்கு செவிகொடுத்துக் கேட்காதீர்கள்; அதன் ஓதலின்போது கூச்சல் போட்டு அதை வியர்த்தமாக்குங்கள்; அப்போதுதான் நீங்கள் மிகைக்கப்படாதவர்களா யிருத்தல் சாலும்' என்றும் அந்தக் காபிர்கள் கூறுகின்றூர்கள்' என்பதாகும்.

நிற்க, அக்கால அரேபியாவின் பிரபலத் தலைவனை 'வலீத் இப்னுமுகைரா' என்பான் பரிசுத்த குர்ஆன் மொழியை ஒரு சமயம் செவிகொடுத்துக் கேட்க நேரிட்டுவிடவே, அவனது மூர்க்கத்தன அகந்தையினில் ஒருவித மாறுதல் ஏற்பட்டுவிட்டது. மேலும் அவனது ஆன்மார்த்தத்தில் குர்ஆனின் சத்தியத்துவமானது இடம்பெற்று அவன் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளத் தலைப்பட்டுவிட்டது. இதனை அறிந்துகொண்ட 'அபூஜஹல்' என்பான், வலீத் இப்னு முகைராவை யடுத்து அவனது புத்துணர்ச்சியைக் குலைத்து, பழையபடி மூர்க்கப் பிடிவாத உரோஷத்தைக் கிளப்பிவிடலானுன்; இல்லாததையும் பொல்லாததையும்கூறி பரிசுத்தக் குர்ஆன்மீது வெறுப்பை உண்டாக்கிவைக்கலானுன். மேலும், மற்றும் மௌடீகர்களைப் போல், "குர்ஆனனது யாரோ புலவன் புனைந்த மொழிகளாகும்; அல்லது யாரேனும் மாயாவதியின் முன்னறிக்கையான மாய மொழிகளாகும்" என்று பகிரங்கமாய் கூறிவிடுமாறும் வற்புறுத்தினுன். ஆனல், அதற்கு வலீது இப்னு முகைரா அளித்த சமாதானமாவது:—

ஏ நண்பா! யான் என்ன செய்யட்டும்? இது என்னல் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பிணியன்று! ஆண்டவன்மீது சத்தியமாக! என்னை விட அதிகம் நல்லவிதமாக கவிகளை ஓர்ந்துணர்பவன் உங்களில் ஒருவனுமே கிடையானென்பது பிரசித்தம்; நானே காவியங்களுடையவும் சங்கீதங்களுடையவும் இலக்கிய இலக்ஷணங்களை நன்கறிவேன்; அக்கவிகளின் நிறையமைப்பு, பண்பு யாவையும் நன்குணர்வேன்; ஆயினும், ஆண்டவன்மீது சத்தியமாக! அந்த குர்ஆனில் இப்படிப்பட்ட கற்பனைகள் யாதொன்றுமே கிடைக்கமாட்டாது. ஆனல், குர்ஆனனது ஆதிமுதல் அந்தம் வரை தெள்ளியத் தேன்மயமாக இருக்கின்றது; இன்னும், அத்தூய குர்ஆன் முழுமையும் இன்பக் களஞ்சியமாயும், ஆன்மார்த்த உயிராயு மிருக்கின்றது; இன்னும் அது தோலற்ற வெறும் சதையுள்ள கனியாயிருக்கின்றது; அது தாழ்வு என்ற

பேச்சே யில்லாது யாவும் மிகமிக உச்ச ஸ்தானத்தை யடைந்ததாயு மிருக்கின்றது; தோல்வி யென்பதே யில்லாத பரிபூரணவெற்றி யாகவும் அது இருக்கின்றது. ஆகவே, இவற்றைத் தவிர்த்து குர்ஆனைப்பற்றி வேறொன்றையும் யான் கூறவே முடியாது'' என்பதாம்.

இதைக்கேட்ட அபூஜஹல் மீண்டும் அதிருப்தியடைந்து, மேலும் குர் ஆனை நிராகரிக்குமாறு பின்னும் வலீத் வை வற்புறுத்தினான். அவ்வற்புறுத்தலுக் கட்டுப்பட்ட வலீத் என்பான் 'சரி அப்படியானால் யான் நன்கு தீர்க்காலோசித்து முடிவுக்கு வர அவகாசம் வேண்டும்' என்று கூறிச்சென்று வெகு வெகு ஆழமாய் ஆலோசனைசெய்து பார்த்துவிட்டு வந்து "குர்ஆனானது எதனாலும் மிகைக்கப்படாத ஒரு அற்புதமாகயிருக்கும்'' என்று கூறிவிட்டான்.

மானுஷ்யவள்ளல் நபிகள் திலகம் முஹம்மத் றஸூல் (ஸல்.) அவர்களது சத்தியத் தன்மைக்குரிய அத்தாக்ஷிகள் இதைப் போன்று இன்னும் பலவுள. என்றாலும் கீழ்காணும் உவமான மொன்று அதற்குப் போதிய சான்றாகும். அதாவது.—"ஓர் அன்னிய மனிதர் புதிய ஊர் ஒன்றினுள் பிரவேசிக்கின்றார்; அவ்வூர் முழுதும் விஷபேதிப்பரவிக் கிடக்கின்றது; ஊர் மாந்தரெல்லோரும் அக்கொடிய நோயுக்கு ஆளாகிக் கிடக்கின்றனர்; அவ்வூரிலே அந்நோயை நிவாரணம் செய்வதற்குரிய எந்த வைத்தியனோ, எவ்வித ஔஷதமோ கிடையவே கிடையாது; அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்வூருக்குள் பிரவேசித்த அன்னியர் 'யான் உங்களுக்குரிய வைத்தியனாக வந்துள்ளேன்; உங்கள் பிணிகளையெல்லாம் போக்கி, உங்களை சுகத்திலாக்கிவைக்கும் ஆற்றல் உள்ளவனாயிருக்கின்றேன்; ஆகையால் யான் சொல்வதைக் கேளுங்கள்; என் சொற்படி நடந்துகொள்ளுங்கள். என்று கூறுகின்றார். நோய்வாய்ப்பட்டுக்கிடக்கும் ஊரார் அனைவரும் அவருக்கு எதிரிகளாகி, அவரை பரிகசிக்கவும், தூஷிக்கவும், பகிஷ்கரிக்கவும் தலைப்பட்டுவிடுகின்றார்கள்; அப்போது அந்த மனிதர் தான் உண்மையான வைத்தியர் தானென்பதை அம்மூட ஜனங்களுக்கு நிருபணஞ்செல்வதற்காக, கலாஞான அத்தாக்ஷிகளையும், அனுஷ்டானப் பூர்வமான சத்திய ஆதாரங்களையும் அன்னவர்களுக்கு எண்பித்துக்காட்டி, எந்தவிதத்திலாவது அந்த ஜனங்களை சுகப்படுத்திவைக்கலாமென்று பாடுபடுகின்றார்,''

ஆன்மார்த்த வழிகாட்டியான நபிகள் பிரான் (ஸல்.) அவர்களுடைய நிலைமைஅந்த அன்னிய மனிதனுடைய நிலைமைக்கு முற்றும்ஒத்தமைந்ததாயிருந்தது. என்னெனின், லோகதயாளர் (ஸல்.) அவர்கள் இத்தாரணியின்கண் ஓர் ஆன்மார்த்த வைத்தியராகவே தோன்றி எழுந்தருளினார்கள்; தாங்கள் உண்மை வைத்தியர் என்பதற்கு ஆதாரமாய் ஓர் அரும்பெரும் ஞானோதய வேதமொன்றை உலகத்தவர்பால் சமர்ப்பித்து அஞ்ஞானப் பிணியிலும் குபிர் ஷிர்க் என்னும் கொடு நோயிலும் அகப்பட்டுக் கிடந்த மாந்தர்களின் உயிர்கள் எனும் உள்ளங்களை காப்பாற்றி, அவர்களை மானுஷ்யத் தன்மையெனும் சுகநிலையத்துக்கு அழைக்கலானார்கள். உலக மக்கள் அத்தகைய உயிருக்கேமிக பயங்கரமான கொடிய வியாதிகளில் கிடந்தாராயினும் அன்னோருக்கு தக்க சிகிச்சைகள் புரிந்து கொஞ்சங்கொஞ்சமாய் சகல பிணிகளையும் நீக்கி அவர்களை சுத்தமாக்கிவிட்டார்கள். தங்களது ஔஷதங்களென்ற நற்போதனைசார நியதிகளைக்கொண்டு ஆன்ம சம்பந்தமான சுகம், க்ஷேமம் அன்பு, விசுவாசம், ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் முதலியவற்றின் வாயில்களில் அவர்களை புகுத வைத்தார்கள். ஆமாம்! உண்மையில் துரதிருஷ்ட சாலிகளாய் ஆத்மார்த்த கொடிய நோய்களில் கிடந்தவர்களில், எவரெவர் அப்பெருமானார் (ஸல்.) அவர்கள் நன்மொழிக்கிசைந்தனரோ அவர்களெல்லாம் சுகம்பெற்று ஜயமடைந்தனர்; எவரெவர் அவர்களது உபதேசம் என்னும் மருந்தை நிராகரித்தனரோ அன்னோரெல்லாம் முன்னைய நிலையைக் காட்டினும் அப்பிணிகளில் அபரிமிதமாய் ஆழ்ந்தார்கள்; எனவே அன்னோர் கொடுமையான வேதனைகட்கு இலக்காகினார்கள்.

மேற்படி உபமானத்தை யுத்தேசிக்குமிடத்து லோக ரக்ஷகர் நபிகள் பெருமான் முஹம்மத் (ஸல்.) அவர்கள், அதைவிட ஆயிர மாயிரம் பங்கு உயர்ந்த உபமானத்துக்குரியவராக யிருக்கின்றார்கள். எனவே லோகநாதர் (ஸல்.) அவர் களின் விஜய நோக்கம் உலகமக்களின் உடல் சம்பந்த

மானப் பிணிகளைமட்டும் போக்குவதாக இருக்கவில்லை. இப்பிணிகளை சிலபல மூலிகை வேர்களாலும் இலைச்சருகு முதலியப் பொருட்களாலும் சிகிச்சை செய்து, சீர் திருத்தம் பண்ணிப் போக்கிவிடலாம். ஆனல் எம்பிரான் (ஸல்.) அவர்கள் விஜயஞ் செய்தமையானது, சர்வ லோக சகல மாந்தர்களுடையவும் ஆத்ம சம்பந்தமான அந்தரங்கப் பிணியாம் குப்பிரியத்தை ஒரே அடியாய்ப் போக்கி வைப்பதாகும். இச் சிகிச்சையானது தேகக் கோளாறு சம் பந்தமானதைக் காட்டிலும் மிக மிக கடினமானதும், சிக்கலானதுமாகும். இதற் குரிய பரிகாரம் புரிவதற்கு சொற்ப ஞானத் தின் உதவியால் ஆகுவதில்லை. ஆனல் நூற்றுக் கணக்கான வித்தைகளைக் கரைகண்டு தேர்ச்சியும் பரிபக்குவமும் அடையவேண் டும். இது சம்பந்தமானத் துறையில் இது பொழுது பெரும் பெரும் சர்வகலாசாலைகளி லுங்கூட பற்பல வித்தைகளும் ஞானர்த்தங்க ளும் போதிக்கத்தான் படுகின்றன. அவ்வித விவேகார்த்தக் கல்விகளில் நூற்றுக்கணக் காக புஸ்தகங்களைப் படித்து பரீக்ஷைகளில் தேர்ந்து விடுகின்றனர்; பற்பல புரோப்ஸர்க ளுடையவும் பாஜில்களுடையவும், பண்டிதர்க ளுடையவும் தத்துவார்த்தப் பிரசங்கங்களை யும் கேட்கின்றனர். ஆனல் இன்னோரெல் லாம் சமூக வியவகாரத் துறையில் இறங்கி விடுங்கால் ஜனசமுதாயத்தின் சீர்திருத்தத் துக்கான ஒரு சிறுசேவையையும் வெற்றியு டன் சாதித்து வைத்ததாய் யாம் கண்டிலேம். இதனை ஓர்ந்துப்பார்த்துவிட்டு எம்பிரான் றஸூல் (ஸல்.) அவர்களைப்பற்றி கவனிக்கு மிடத்து, எந்த பாடசாலையிலும் கல்விக்கல் லாமல் வெறுமனே உம்மீயாக (ஓதப் படிக்கத் தெரியாதவராக) இருந்தவர்கள் — மேலும் முற்றும் காட்டுமிராண்டியான 'பதவி' களின் மத்தியில் பிறந்து வளர்ந்தவர்கள், இவ்வுலகத் தில்வேறு இணையிலாமுறையில் ஜனசமுதாய சீர்திருத்தத்துறையில் இறங்கி, தொண்டியற் றத்தொடங்கி ஒரு சில ஆண்டுகட்குள்ளரே உலகச்சமுதாய மனத்தின் ஆன்மப் பிணி களைப்போக்கி, உய்யும் மார்க்கத்தினைக் காட்டி வெற்றிப்பெற்று விட்டார்களன்றே? எனவே, அவர்களது புனித ஜீவியமானது உலக இராஜீய மார்க்க சரிதையையே ஒருபெரும் மாறுதலடையச் செய்துவிட்டது; அவர் களின் சிஷ்யகோடிகள் தங்கள் சுயபதியான ஹிஜாஸ் தேசத்தைவிட்டுப்புறப்பட்டு ஒரே நூற்றாண்டுக்குள் மேனுட்டைச்சேர்ந்த ஐரோப்பா ஆப்ரிக்கா முதலிய தூரதேசங்க ளின் மூலைமுடுக்குகளிளெல்லாம் போய்ச் சேர்ந்து ஜெயக்கொடிநாட்டிவிட்டனர். இன் னும் கீழ்நாடுகளின் பக்கல் போந்து, சீனுச் சுவற்றைத்தாண்டிச் சென்று சமுத்திரங்களை யும் கடந்து சத்திய துவிஜத்தை உயர்த்தினர்; ஆங்கு தலையோங்கி யிருந்த பெருஞ்சமூகத் தின் அகந்தைச் சிரங்களை எல்லாம் பணிய வைத்துவிட்டனர். இவர்களின் சத்தியச் சேவையின் துணிவின்பயனுய் பெரும்பெரும் அரசாங்கங்களும் தம் சிரங்களைச் சாய்த்து விழ்ந்துவிட்டன. அப்பிறதேசத்து பௌ ராணிக வழக்கப் படலங்கள் மீதும், அனுசரி கச் செயல்கள்மீதும் இன்னோரது சத்தியா சாரமும் நன்னுகரிகமும் ஜயங்கொண்டுவிட் டன. இன்னோரது சத்தியப்போதனுப் பிர காசத்தின் முன், அன்னோரது அவிவேக அனுச்சார துன்மார்க்க எதேச்சாதிகார ஒழுக்கமென்னும் கார்மேகப் படலங்களெல் லாம் இருந்தவிடந் தெரியாது ஓடிப்பறந்து விட்டன. அன்னோரது குணம், அறிவு, பழக்க வழக்கம், உலகார்த்தம் யாவற்றின் மீது இச் சத்திய சீலர்களின் ஆன்மார்த்த மெஞ்ஞா னப் போதனையென்னும் பிரகாசக் கிரணங் கள் பாய்ந்து உலகையே ஒளிமயமாகச் செய்துவிட்டது.

இத்தகைய சத்திய உழைப்பின் வழியில் லோகநாயகர் றஸூல் (ஸல்.) அவர்களுடைய சத்தியவாதமான துபொதுவாக உலகமாந்தர் களின் ஜீவிய வாழ்வை தூய்மையாக்கிப் பரி பக்குவம் எய்தும்படியும், சகலலோக மாந்த ரின் ஆன்மார்த்தம் பரிபக்குவமடைந்து உய் யும்படியும், யாவரும் திவ்விய குர் ஆனின் போதனைகளைப் பின்பற்றி யொழுகும்படிக் கும் செய்வதில் வெற்றியடைந்துவிட்டது. ஆகையால் இப்படிப்பட்ட மகத்தான காரி யத்தில் வெற்றும் பரிபக்குவமும் அடைந்து விடுவது தெய்வீக சகாயமில்லாமலும், ஆண் டவனது தனிப்பட்ட அருளில்லாமலும், அவனது பக்கத்துணையில்லாமலும் நடை பெற்றுவிடும் காரியமாகும் என எந்த மனிதனேனும் சொல்லி மெய்ப்பித்துவிடுதல் முடியுமோ?

இஃதொருபோதும்முடியவே முடியா! இவ்வெல்லா அற்புதச்சாதனைகளும், அந்த மகா சக்தியாளனும் சர்வத்தின் சிருஷ்டிகர்த்தனும், தன்னுடைய தனிப்பட்ட சொந்த அருளினாலும் உதவியினாலும் எம்பிரான் முஹம்மத் (ஸல்.) அவர்களைத் தனது திருத்தூதராகத் தேர்ந்தெடுத்து அப் பெரும் காரியத்தின் பொறுப்பை அவர்கள்பால் ஒப்படைத்து, அதை வெற்றிப் பெறச் செய்த இணையிலாப் புகழுக் குரித்தானவனை அல்லாஹுத ஜல்லஷானுஹுதஆலாவுடைய திருவற்புத காரியங்களேயாம்.

ஹிஜ்ரத்தின் பிரயத்தனம்

லோக சீர்திருத்தகர் ஹஜ்ரத் முஹம்மத் றஸூல் (ஸல்.) அவர்கள், ஆரம்பத்தில் முதலாவதாக தங்களுடைய நெருங்கிய பந்துஜனங்களையும், மக்கா வாசிகளில் குறைஷியர்களையும், அடிமைகளையும், மக்காவை தரிசிக்க வரும் யாத்ரீகர்களையுமே இஸ்லாத்தின் பக்கல் அழைக்கலானார்கள். எனினும் அக்கூட்டத்தினர் லோக சீர்திருத்தகர் (ஸல்.) அவர்களுக்கு எதிரிடையாய் கடுமையான எதிர்ப்புகளையும் தீங்குகளையும் புரிந்து வரலானார்கள். எனவே, எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடன் ஜனங்கள் சேர்ந்துவிடாமலிருப்பதற்குள்ள ஒரு வழியைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று இஸ்லாத்தின் விரோதிகளெல்லோரும் நபிகள் பிரான் (ஸல்.) அவர்களின் சிறிய தந்தையாகிய அபூலஹபுடைய தூண்டுதல்படி, எம்பிரான் (ஸல்.) அவர்களைத் தடுத்து, அராபிய ஜனங்களெல்லோரும் நபிகள் பெருமான் (ஸல்.) அவர்களைச் சூழ்ந்து சேர்ந்து விடாமலிருப்பதற்குள்ள வழியை அடைவதற்கு பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டார்கள். எனவே நபிகள் பிரான் (ஸல்) அவர்களின் சொல்லுக்கிசைந்து இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டவர்களில், அவரவர்களுடைய சுற்றத்தார்களின் பாதுகாப்பும் ஆதரவுமில்லாதவர்களை மிகப் பொல்லாதவிதமாகத் துன்பப்படுத்தலானார்கள்; பலபல நாள்வரை அடைத்து வைத்து அன்னந் தண்ணீரளியாமல் வதை செய்துவந்தார்கள்; முரட்டுக் கழிகளைக் கொண்டு அவ்வெளியவர்களின் சரீரத்தைத் தாக்கி கடுங்காய முண்டுபண்ணிவந்தார்கள்; தணல்விட்டெரியும் அக்கினிக் குண்டத்தில் அவர்களைத் தூக்கிவிட்டு கொடும்வதை செய்துவந்தார்கள். இங்ஙனம் அக்கினிச் சுவாலைக்கு ஆளாக நேரிட்டுங்கூட அந்தச் சத்திய உத்தமர்களில் பெரும்பாலோர் உறுதியான ஈமானின் பயனுய் நெருப்பில் கிடந்து வெந்துக் கடுஞ்சாம்பலாவதை விரும்பிக்கொண்டனரேயல்லாது இஸ்லாம் மார்க்கத்தை விடுவதற்கு ஓரணுவளவும் மனம் மாறினார்களில்லை. இத்தகையவர்களில் ஒரு சிலரேதான் உடல் துன்பங்களை சகிக்கொணுத்தன்மையால் ஒரு சிறிதே அக் காபிர்களின் கூற்றுக்குத் தலையாட்டினார்களெனினும் உள்ளத்தில் மாத்திரம் இஸ்லாத்தின் விசுவாசத்தை விட்டுவிடாமல் — மர்மத்தில் முஸ்லிம்களாக இருந்து வந்தார்கள்.

இவ்வாறெல்லாம் காபிர்த் தலைவர்களின் கொடுங்கோன்மைகள் எளிய நவ் முஸ்லிம்கள் விஷயத்தில் வரம்பைக் கடந்து விடவே, லோக தயாளர் (ஸல்.) அவர்கள் தங்கள் சிஷ்ய வர்க்கத்தினரை இரகசியமாக அழைத்து 'நீங்கள் மக்கா பதியைவிட்டு ஹபஷ் (அபிஸினியா) தேசத்துக்கு ஹிஜ்ரத்துச் சென்றுவிடுங்கள்! என்று திருவுளமானார்கள். அதற்கிணங்க, அம்முஸ்லிம்கள் அங்குபோய்ச்சேர்ந்தபோழ்து,(அபிஸினியா அரசரான) நஜ்ஜாஷீ அந்நவ் முஸ்லிம்கட்கு கண்ணியம் புரிந்து பாதுகாப்பும் அருளினர். அதன்பின் இச்செய்தியை யுணர்ந்த மக்காவின் குறைஷித் தலைவர்கள், அம்முஸ்லிம்களைத் துரத்திவிடுமாறு பல தூதுவக் கூட்டமும் பல உயர்தர சன்மானங்களும் அம் மன்னவனுக்கு அனுப்பியுங்கூட அந்நல்ல இராஜர், அவற்றையெல்லாம் நிராகரித்துத் தள்ளிவிட்டு முஸ்லிம் கட்கே ஆதரவளித்தார். இறுதியாய் சில காலத்துக்குப் பின் அம்மன்னவர் மனமுவந்து இஸ்லாத்திலாகிவிட்டாரென்பதையும், அம்மன்னர் பின்னர் இறந்துவிட்டபோது லோகநாதர் (ஸல்.) அவர்கள் அவருக்காகமதீனுவிலிருந்துகொண்டே ஜனஸாத் தொழுகையை நிறைவேற்றினார்களென்பதையும் ஈண்டுச் சுட்டிக்காட்டி விடுவது அவசியமேயாகும்.

நபிகள் பிரான் (ஸல்.) அவர்களின் இஸ்லாமியப் பிரசாரத்தைக் குலைப்பதற்காக வென்று குறைஷியர் மற்றுமோர் ஆலோசனையையும் கைக்கொண்டார்கள். அதாவது, நபிகளுதர் (ஸல்.) அவர்களுடைய சிறிய

தந்தை அபூதாலிபையும், அவர்களுடைய பனூஹாஷிம் குடும்பத்தார்களையும் பூரண பகிஷ்காரம் செய்துவிட்டதேயாம். எனவே, அவ்வெளியோர்களை மக்காவை விட்டும் வெளியேற்றி அனுப்பிவிட்டார்கள். இங்ஙனம் அன்னோர் தொந்திரை இழைக்க முற்பட்டதற்குக் காரணம், பனூஹாஷிம் குடும்பத்தினர், தம் பாதுகாப்பில் வைத்திருந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அக்கொடியவர்களின் கையில் ஒப்படைத்துவிட மறுத்ததேயாகும். இதன் காரணமாய் அபூதாலிபும், அவர்களது பிள்ளைகளும், பனூஹாஷிம் குடும்பத்தினரும் நபிகளுடைய கத்தின் (ஸல்.) க்ஷேமத்திற்காக மக்காவை விட்டு ஒரு மலைக் கணவாயின் குறுகிய பொதும்பில் பதுங்கி வசிக்கலானார்கள். அவ்வாறு ஊருக்கு வெளியேபோய் வசிக்கத் துணிந்தவர்களுடன் நகரத்திலுள்ளவர் எத்தகைய சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், அவர்கள் வியாபாரத்துறையின் சம்பந்தமுங் கொள்ளக்கூடாதென்றும், யாதொரு உணவுப் பண்டத்தை அவர்கட்கு விற்கவும், அவர்களிடத்திலிருந்து வேறெதையும் விலைக்கு வாங்கவும் கூடாதென்றும் கடுமையான தடையுத்தரவும் போட்டுவிட்டார்கள். இப்பகிஷ்காரமும் தடையுத்தரவும் அவர்கள், முஹம்மத் (ஸல்.) அவர்களை தங்கள் வசம் ஒப்படைத்துவிடுகிற வரை நடைபெறுமென்றும் தெரிவித்துவிட்டனர்.

லோக தயாளர் (ஸல்.) மீது கரைகடந்த அன்புப்பூண்டிருந்த பனூஹாஷிம் குடும்பத்தினர், அதே கஷ்ட நஷ்ட சஞ்சலத்திற்றனே சரியாக மூன்று ஆண்டுகளை அம்மலைப் பொதும்பிலேயே தனிமையாய் வசித்துக் கழித்து வந்தார்கள்; சமைத்துத்தின்பதற்குப் பண்டங்கள்பக்கத்தினின்று கிடைக்காமற்போனமையால் பற்பலசமயங்களில்வெறும்இலைகளையும் சருகுகளையும் தின்று ஜீவியத்தின் நாட்களை எண்ணி எண்ணிக் கழித்துக்கொண்டிருந்தனர். இவ்வாறே இன்னோர் ஒரே பிடிவாதமாய் நகரவாசத்தைவிட்டு, வனவாசத்தையே ஏற்றுக்கொண்டிருந்து விட்டமையால், குறைஷிக் காபிர்கள் சோர்வடைந்து, அன்னோர் திரும்ப மக்கா நகருக்குள் வந்து வாசம் செய்யலாமென்று அனுமதித் தந்துவிட்டார்கள்.

இச்சம்பவம் நிகழ்வுற்று ஆறுமாதங்கள் கழிந்ததன் பின்னர், லோகதயாளர் (ஸல்.) அவர்களின் சிறிய தகப்பனார் அபூதாலிபும், எம்பிரான் (ஸல்.) அவர்களின் உத்தமப் பத்தினியாய ஹஜ்ரத் கதீஜா நாயகி (ரலி.) அவர்களும் ஒருவர் பின்னொருவராய் இப்பொய்யுலகை நீத்துச்சென்று விட்டார்கள். முக்கியமானவர்கள் மரித்துப் போகவே, குறைஷிகள் இனி எளிய முஹம்மத் (ஸல்.) அவர்களை தம்மனே இஷ்டப்படியெல்லாம் என்னவென்ன வேண்டுமானாலும் நடத்தக் காலம் வந்துவிட்டதென்று மனோராஜ்ஜியங் கொள்ளலானார்கள்.

தேவத்திருத்தூதர் (ஸல்.) அவர்கள், ஹஜ்ஜுக் காலங்களிலும் வேறு விசேஷ சந்தர்ப்பங்களிலும் அராபியக் கூட்டத்தார் முன்னிலையில் பெரும்பெருங் கூட்டங்களில் பகிரங்கமாய் நின்று தங்களது நுபுவ்வத்தை ஒப்புக்கொண்டு இஸ்லாத்தில் வந்து சேரும்படி நற்போதங்கள் வாயிலாய் வெளிப்படையாக அழைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பகிரங்கப் போதனை யாதாயிருந்ததெனின் :—

ஏ ஜனங்களே! ஒரே இறைவனான அல்லாஹ்வைத் தவிர வேறெந்த நாயனும் வணக்கத்துக் குரியவனாய் இல்லையென்று உறுதியுடன் நம்புங்கள்; இதனால் நீங்கள் ஜயசீலர்களாய் விளங்குவீர்கள். இத்திவ்யக் கொள்கையின் பயனாய் நீங்கள் அரபுதேசம் முழுமையின்மீதும் பூரண வெற்றிக்கொண்டு, அரபல்லா (அஜம்) தேசத்தின்மீதும் ஜயங்கொண்டு விளங்குவீர்கள்" என்பதாகும்.

எம்பிரான் றஸூல் (ஸல்.) அவர்கள் இத்தேவ அறிக்கையை வெளிப்படையாகக் கூறிவிட்ட பின்னர், ஏக தெய்வத்துவ மூலாதாரக் கட்டளைகளை அனுஷ்டானங்களில் கொண்டு வருவதற்காக பொது மக்களிடமிருந்து வேண்டுமான சகாயங்களைக் கோரலானார்கள். ஆனால், விவேகமில்லா மூடமாக்கள், லோக தயாளர் (ஸல்.) அவர்கள் மீது செங்கல்களையும் கூழாங் கற்களையும் வீசி யெறியலானார்கள்; எனவே அதுகாலை அங்ஙனம் அவர்கள் கோரியதற்கு இத்தகைய பிரதிப் பலன் தான் செய்தார்கள். என்னே மூட உலகம்?

நபித்துவம் கிடைத்த பத்தாவதாண்டு ஹஜ்ஜுச் சந்தர்ப்பத்தில் பலதிக்கின் மக்களெல்லாம் வந்துகூடி எம்பிரான் (ஸல்.) அவர்

களின் பிரசங்கத்தைக் கேட்டதன் பயனாய், 'கஸ்ரஜ்' வர்க்கத்தின் பத்துப்பேர்கள் மட்டும் மனமுவப்புடன் முஸ்லிம்களாய் விட்டனர். இப்பதின்மர், ஏற்கெனவே தங்கள் யூத அயல் வீட்டார் வாயிலாய் 'கூடிய விரைவில் அரப் தேசத்திலே ஒரு பெரும் தீர்க்க தரிசிதோன்றப் போகின்றா ரென்று கேள்விப்பட்டிருந்தார்கள். இன்னோர்கள் மீண்டு தம் சுயபதியாய மதீனா நகருக்குப்போய், மதீனாவாசிகளை குர் ஆனின் போதனையளவில் அழைத்து இஸ்லாமியப் பிரசாரம் செய்யலானார்கள். இவ்வுத்தம சீலர்களின் பொருட்டினாலும் மதீனாநகரத்தில் பரிசுத்த இஸ்லாம் உறுதியாய் வேரூன்றி செழித்தோங்கலாயிற்று. இங்ஙனம் ஓராண்டு இஸ்லாம் பரவியதில் அடுத்த ஆண்டின் ஹஜ்ஜுசந்தர்ப்பத்தின்போது 73-ஆடவர்களும் பெண்டீர்களுமாய்ச் சேர்ந்து நபிகட் பெருமானார் (ஸல்.) அவர்களை தரிசித்துப் போவதற்காக மக்கமாநகருக்கு வந்தார்கள். வந்தவர்கள், 'நபியே! தாங்கள் எங்களூருக்குஎழுந்தருளுவீர்களாயின் யாங்கள் தங்களை எங்கள் மனைவிமக்களைவிட அதிக பத்திரமாய்ப் பாதுகாத்து உதவிபுரிந்து வருகிறோம்' என்று அறுதியிட்டு உறுதி கூறினார்கள்.

இத்தெரிய மொழியின் சம்பவப்பயனாய் மக்காவில் வதிந்துவந்த எளிய முஸ்லிம்களும் மக்காவை ஒரே அடியாய் ஹிஜ்ரத்துச் செய்துப் போய்விட வழிதுலங்குவதைக் கண்டார்கள். இதற்கு முன்னரே ஒரு கூட்டத்தினர் அபிஸினியாவுக்குப் போய் விட்டவர்கள் போக, எஞ்சியிருந்த மற்றும் முஸ்லிம்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் போய்விடலாம் என்று லோகநாதர் (ஸல்.) அவர்கள் பூரண அனுமதி அளித்துவிட்டார்கள். எனவே, மக்காவின் முஸ்லிம்கள் ஒருமிக்கக் கூட்டமாகவே மதீனாவுக்கு (ஹிஜ்ரத்து)ப்போய்விட துணிந்தெழுந்துவிட்டார்கள். இங்ஙனம் நபி அவர்களின் தோழர்கள் மக்காவைவிட்டுப் போய் விட்டபின்னர், எம்பிரான் (ஸல்) அவர்களும் மதீனாவுக்கே ஹிஜ்ரத்துப் போய்விடப் பிரயத்தனமா யிருக்கின்றார்களென்ற விஷயம் அந்தக் கொடிய குறைஷியர்கட்குத் தெரிந்துவிட்டது. உடனே அவர்கள் லோகதயாளர் (ஸல்.) அவர்களுக்கு எதிரிடையான கபட சூழ்ச்சி வலைகளை விரிக்க இடுப்பை வரிந்துக் கட்டிக்கொண்டார்கள். எனவே, குறைஷியர்களுடைய ஆலோசனை மன்றம் 'தாருன்னதவாவில்' எல்லா அரப் கூட்டத்தினர் யாவரும் ஏகமாய் மகாநாடு கூடினார்கள். "இனி முஹம்மத் (ஸல்.) விஷயமாய் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வது?" என்ற பிரரேபணையையொட்டி அந்த குறைஷியர் பார்லிமெண்டில் விதவிதமான அபிப்பிராயங்கள் எழுந்தன. அவற்றில் சிலர், அவரை தேசப்பிரஷ்டஞ் செய்துவிட வேண்டுமென்றனர்; இன்னுஞ் சிலர், அவரை மரிக்கும் வரை கடுஞ்சிறையில் போட்டுவிட வேண்டுமென்றனர்; வேறுசிலர், அவரைகொன்றேப் போடவேண்டுமென்று தீர்மானங் கூறினர். இறுதியாய் முடிவுக்குவந்த தீர்மானம் யாதெனில், ஒவ்வொரு கூட்டத்தினின்றும் ஆயுதபாணியாயுள்ள வீரதீரவாலிபர் ஒவ்வொருவரைத் தெரிந்தெடுக்க வேண்டும்; அவர்கள் எல்லோரும் ஏகமாய் ஒரே சமயத்தில் வாட்களையேந்தி ஒரே சனத்தில் முஹம்மத்நபி (ஸல்.) அவர்கள் மீது வீசி அதே சமயத்தில் கொன்றுப்போடவேண்டும்" என்பதாம். இந்த நூதனமுறையில் யாவரும் சேர்ந்து கொள்வதினுள்ள! அனுகூலம் யாதெனில், "முஹம்மத் (ஸல்.) அவர்கள் கொல்லப்பட்டுப் போவதின் பழியானது எல்லாக் கூட்டத்தார்கள் மீதும் ஏகமாய் ஏற்படுவதால் பனூஹாஷிம் குலத்தவர்கள் அவ்வெல்லா கூட்டத்தாருடனும்போராடிப் பழிக்குப்பழி வாங்க முடியாதென பயந்து வாளாயிருந்து விடுவர்; அந்தக்கொலைக்கு பதிலாய் ஏதேனும் தண்டப்பணம் கொடுத்துவிட்டால் போதுமாய்விடும்" என்பதேயாகும்.

அதே சந்தர்ப்பத்தில், லோகதயாளர் (ஸல்.) அவர்கள், தங்கள் உற்ற தோழர் ஆபூபக்ர்ஸித்தீக் (ரலி.) அவர்களது சகாயத்தோடு, இரண்டு ஒட்டகங்களையும் ஒரு வழிகாட்டுவோரையும் தங்கள் பிரயாண சாதனமாய்க் கொண்டு மதீனாவுக்குப் போய் விடுவதற்குரிய முழு ஏற்பாடுகளும் செய்து முடித்திருந்தார்கள். மறுகணத்தில் ஒரு பக்கல் குறைஷியர்களில் ஆயுதபாணிகளான கொடுங் காளையர்கள் எம்பெருமானார் ரஸூல் (ஸல்.) அவர்களுடைய சயனக்கிரகத்தை முற்றுகையிட்டுக் கொண்டனர்; மற்றொரு பக்கல் நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் சயனவிரிப்பில் இளவீரகேசரியாம் ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்

களைச் சயனித்துக் கொண்டிருக்கும்படிச் செய்துவிட்டு வெளிப்போந்தார்கள். ஆயுதந் தாங்கிய கொடிய காளையர்கள் கண்விழித்துக் காவல் புரிந்துகொண்டிருந்தனரெனினும், தெய்வாதீனமாய் அன்னோரின் கண்கட்குத் தென்படாமல் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் கிரகத்தை விட்டுப் புறப்பட்டுபோய் ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் இல்லத்திற் சேர்ந்துவிட்டார்கள். இச் சம்பவத்தை திருக்குர் ஆன் ஷரீபானது பின்வருமாறு வருணிக்கின்றது:-

“நபியே! உம்மைச் சிறையிடுவதற்கோ, அல்லது கொன்று விடுவதற்கோ அல்லது (ஊரைவிட்டு) வெளியேற்றி விடுவதற்கோ, அந்தக் காபிர்கள் உமக்கு எதிரிடையாய்க் குயுக்திகள் செய்துகொண்டிருந்த போது, (பகீரதக்) குயுக்திகள் தான் செய்யலானார்கள். ஆனால் அல்லாஹுத ஆலாவும் (அவர்கட்கு) எதிரிடையாகக் குயுக்திச்செய்து விட்டான். குயுக்திச்செய்கின்றவர்களெல்லோரினும் அல்லாஹுத ஆலா சிரேஷ்டமானவனா யிருக்கின்றான்.”

மதீனாவாழ்க்கையின் ஆரம்பம்

நபிகள் பிரான் (ஸல்) அவர்கள், ஸித்தீக அக்பர் (ரலி) அவர்களோடு, அவர்களது வீட்டின் குறுகிய வழியாய்ப் புறப்பட்டுச்சென்று, மக்காவினின்று மூன்று மைல் தூரத்திலுள்ள ‘தவ்ர்’ என்னுங் குகையின்கண் பாதுகாப்பிடம் பெற்றார்கள். மேலும், பிரயாண வழிகளைப்பற்றி நன்கறிந்திருந்த விக்கிரகந் தொழும்பர் ஒருவரை நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள், தங்களின் வழித்துணைக்கு கூலிப்பேசி அமர்த்திக் கொண்டு, தங்கள் வாகனச் சாதனங்களை அன்னவர்பால் ஒப்படைத்ததுடன், இனி நடந்து கொள்ளவேண்டிய நடைமுறையையும் தீர்மானித்து, அடுத்தமூன்றாவது நாள் ஒட்டகச்சாதனங்களை ‘தவ்ர்’ குகைக்குக்கொண்டுவந்து மதீனாவுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லவேண்டுமென்று கோரிக்கொண்டிருந்தார்கள். நன்றியறியும் நற்குணமுள்ளவரான அந்த விக்கிரகந் தொழும்பர் எம்பிரான் (ஸல்.) அவர்களது கட்டளைக்கு சிறிதும் முரண் புரியாமலும், இதர காபிர்களிடம் இவ்விரகசியத்தை வெளிப்படுத்தாமலுமிருந்து, குறித்த தவணைப்படி குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி நடந்தொழுகிக் கொண்டார்.

குறைஷியர்களுக்கு, எம்பெருமானார்(ஸல்.) அவர்கள் வீட்டைவிட்டுச் சென்றுவிட்ட விஷயம் பிறகு தெரிந்துவிட்டது. உடனே அவர்கள் நாலுதிசைகளையும் நோக்கி பல வேவுக்காரர்களை அனுப்பிஓடிப்போய் பார்க்கச்செய்தார்கள். உளவுகாரச் சிப்பாய்களிற் சிலர், நபிபெருமானார் (ஸல்.) மறைந்திருந்த குகைவாயல்வரைக்குங்கூட வந்துவிட்டார்கள். ஆனால், அவர்களது சித்தஞ் சிதறியமையால் குகையினுள் அவர்கள் நோட்டம் செல்லவில்லை. குறைஷியரின் வருகையைக் கண்டு மனங்குழைந்த ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் பயந்து, “யாறஸூலல்லாஹ்! இன்னவர்களில் எவனேனுமொருவன் குகையினுள் குனிந்துபார்த்து விடுவானாகில் நிச்சயமாய் நம்மைக் கண்டுபிடித்து விடுவான் அதுபொழுது, என்செய்வது என்று கூறினார்கள். அதற்கந்த சாந்தசுசீலர் சற்குணநாதர், இறைவன்தூதர் றஸூலுல்லாஹ்(ஸல்.) அவர்கள் “ஏ அபூபக்ரே! அஞ்சற்க! இறைவனே நமக்கு உடந்தையாயிருக்கிறானே” என்று ஆறுதல் கூறினார்கள்.

மூன்று நாட்கள் கழிந்ததும் வழிகாட்டியான விக்கிரகந்தொழும்பர் அங்கு வந்து சேர்ந்தார். உடனே இன்னோர் புறப்பட்டனர். ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் தங்களது அடிமையான ஆமிரை தோள்மேல் ஏற்றிக்கொண்டார்கள். பிறகு நாயகம் றஸூல் (ஸல்.) அவர்கள் தங்களது அத்தோழர்களோடு மதீனமா நகரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். இஃதிங்ஙன மிருக்க, முஹம்மத் (ஸல்.) முதலியோரைப் பிடித்துத் தருவோர்க்கு பெரும்பெரும் சன்மானங்களெல்லாம் அளிப்பதாய் குறைஷியர்கள் ஊர்பறையறைந்திருந்தார்கள். எனினும் சர்வசக்திவாய்ந்த அல்லாஹ்த ஆலா, அவ்வுத்தமசிலர் முதலியோரை பாதுகாத்து தன் பொறுப்பில் மதீனாவுக்குக் கொண்டுபோய் சேர்த்துவிட்டான். ஆகவே, ஆண்டவனது திருக்கருணையின் முன்னிலையில் அக்காபிர்களின் எதிரிடையான குயுக்திப் பிரயத்தனங்களெல்லாம் சிறிதும் சித்தியடையாது தோல்வியே உற்றன.

லோகதயாளர் (ஸல்.)அவர்கள் மக்காவை விட்டு ஹிஜ்ரத்தாகி (மதீனாவை நோக்கி)வரு

கின்றனர் என்ற விஷயத்தையுணர்ந்த மதீனாவின் அன்ஸாரிகள், மதீனாவினின்றுமூன்று மைல் தூரத்திலுள்ள 'ஹர்ரா' என்னுமிடத்திற்குவந்து தங்கியிருந்து எதிர்ப்பார்ப்பவர்களாயினர். அங்ஙனம் சிலநாள்வரை நித்தமும் வந்து சூரியஞ்சாயும் நேரம்வரை காத்திருந்துவிட்டுப் போவர். இறுதியாய், நுபுவ்வத்தின் 13-வது ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம் 12-ம் நாளன்று உலகச்சிரேஷ்டர் மானுஷ்யவள்ளல் றஸூல் (ஸல்.) அவர்கள் விஜயஞ்செய்து குபாவின்கண் எழுந்தருளினார்கள். அது சமயம் ஆங்குவந்திருந்த மதீனாவின் அன்ஸார்கள் மிகவும் உற்சாகம் பூண்டு ஆரவாரத்துடன் ஆத்மீகத்தலைவர் (ஸல்.) அவர்களை வரவேற்றுபசரித்தார்கள்.

முதன் முதலாய் நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் 'அம்ருப்னு அவ்ப்' அவர்களுடைய வீட்டில் தங்கியிருக்கத் திருவுள்ளங்கொண்டார்கள். அவ்விடத்திற்றானே மஸ்ஜித் நிர்மாணஞ்செய்வதற்குரிய அஸ்திவாரமும் போட்டார்கள். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் மதீனாவுக்கு விஜயஞ் செய்ததினாலேயே வசந்த காலத்தின் மனோரம்மிய க்ஷேமநிலைகளும் தொடங்கிவிட்டன; மக்கள் அளவிலா ஆனந்தப் பரவசமெய்தினர். ஆகவே இதனை அன்னார் பரிசுத்த இஸ்லாத்தின் புனித பாக்கியம் எனக் கருதினார்கள்.

பிறகு எம்பெருமானார் ரஸூல் (ஸல்.) அவர்கள் குபாவைவிட்டு மதீனாநகர் எல்லைக்குட் பிரவேசிக்கலானார்கள். அதுகாலைநாயகம் (ஸல்.) அவர்கள் ஓர் ஒட்டகத்தின்மீதமர்ந்து கொண்டிருந்தார்கள். அவ்வண்ணம் பனூஸாலிம் மஹல்லா பகுதியிற் போய் சேர்ந்ததும் ஆங்கு ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றி வைத்தார்கள். தொழுது முடிந்ததும் மீண்டும் ஒட்டகத்தின்மீதுஆரோகணித்துக்கொண்டார்கள். குபா என்னும் இடந்தொடுத்து மதீனா நகர்முழுதும் வழியெல்லாம் மக்கள் பேராவலோடு லோகதயாளரை வரவேற்றுபசரித்த வண்ணமே இருந்தனர். நபிகனாதர் (ஸல்.) அவர்கள், அன்ஸாரிகளுடைய இல்லத்துக்கெதிராய் சவாரி போகுந்தோறெல்லாம் அப்பகுதிக்குடையார் ஓடோடியும் வந்து, எம்பெருமானார் (ஸல்.) ஏறியிருக்கும் ஒட்டகத்தின் மூக்குக் கயிற்றைப் பற்றி நாயகமே! எங்கள் வீட்டிலேயே தாங்கள் முதல் விருந்தினராயிருக்கத் திருவுள்ளங் கொள்ள வேண்டுகிறோம்; எங்களுடைய உயிர்கள், பொருட்கள், ஆயுதங்கள் யாவும் தங்களுக்கு ஊழியம் புரிவதற்காகவே அர்ப்பணமாயிருக்கின்றன" என்று மிக விநயப்பூர்வமாய் வேண்டிக்கொள்ளலானார்கள். அதற்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள், "உங்கள் அபிமானத்துக்கு மகிழ்கிறேன்; என் ஒட்டக மூக்கணத்தை விட்டுவிடுங்கள்; இப்பிராணி இறைவனது கட்டளைக்கிணங்க நடந்துகொள்வதாகும்; ஆகையால் இப்பிராணி சுயமே எங்குபோய் நின்றுவிடுமோ அங்கேயே யானும் இறங்கித் தங்குவேன்" என்று அறிவித்து விட்டார்கள்.

இங்ஙனம் வேண்டுகோள்களும்மறுமொழிகளும் நிகழ்ந்துகொண்டிருக்குமூடே ஒட்டகமும் சுயமே நெடுக நடந்துபோய்க்கொண்டே இருந்தது. அதற்கு ஆண்டவன் அறிவித்துக்கொடுத்த இடம் வந்தவுடன் அதுதானே அங்கு உட்கார்ந்துவிட்டது. அது அங்ஙனம் உட்கார்ந்த இடம்தான் இதுபோழ்து உலகத்தோர் கண்டுகளிக்கும் 'மஸ்ஜிதெநபவீ' யாக இருக்கின்றது. அந்தஇடமானது 'பனூநஜ்ஜார்' வகுப்பினருக்குரித்தான நிலமாயிருந்தது. அங்கு, லோகநாதர் ரஸூல் (ஸல்.) அவர்கட்குஉணவோபசாரச் சேவைப்புரியும் பாக்கியமானது ஹஜ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி) அவர்களுக்கே கிடைத்தது. எனவே, நபிகனாதர் (ஸல்) அவர்கள், அவர்களது இல்லத்துட் பிரவேசிக்கும்போது தமாஷாக "வாகனக்காரரோடு வாகனமும் தங்கள் விருந்தினர்தான்" என்றுகூறினார்கள். அதாவது, நாயகம் (ஸல்) அவர்களும் மாண்புமிகக் அவ் ஒட்டகமும் அபூஅய்யூபுடைய விருந்தினர்களாய்ப் பாவிக்கப்பட்டனர். மேலும், மஸ்ஜிதெ நபவீயும், ஹுஜ்ரா என்னும் சிறு விடுதியும் ஆங்கு நிர்மாணித்து முடிவுபெறும் மட்டும் லோகதயாளர் (ஸல்.) அவர்கள் அவ்விடத்திற்றானே தங்கி யிருந்தார்கள். அதே காலத்திற்றான் எம்பிரான் (ஸல்.) அவர்களின் மற்றும் குடும்பத்தினர்களும் மக்காவைவிட்டு மதீனாவுக்கு வந்து சேர்ந்துவிட்டனர். இங்ஙனம் நபிகள் திலகம் (ஸல்) அவர்களும், அவர்களது குடும்பத்தார்கள் யாவரும் தங்களை நண்ணிவந்து சேர்ந்து விட்டமைக்கு அவ்வன்ஸாரிகள் அடைந்த சந்தோஷக் களி பேறிசைக்கு மட்டுதிட்டமேகிடையாதெனலாம். எனவே,

ஆயுளில் அதுகாறும் அவர்கள் அடைந்தில்லாத அத்துணை ஆனந்தங் கொண்டார்கள். இந்தக் கரைப்புரண்ட ஆனந்த வெள்ளத்தை யொட்டி மதீனாவின் பிரபல கவிவாணரொருவர் பாடியுள்ள புகழ்பாவின் கருத்துக்களை கீழே கண்டுபிடித்து அதன் திவ்வியத்தை உணருங்கள். அதாவது.—

"இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்.) அவர்கள் குறைஷியர்களிடையே பத்தாண்டுகள்வரை பிரசாரம் புரிந்தார்கள். எனினும் அன்னோர் அப்பெருமானார் (ஸல்.) அவர்களின் புனித பிரயத்தனங்களை கண்ணியப்படுத்தி யேற்காமலிருந்து விட்டனர்"

"அப்பெருமானார் (ஸல்.) ஹஜ்ஜின் காலங்களில் சத்தியத்தின் தொனிகளை எல்லா ஜனங்கள் பாலும் எற்றிவைத்தார்கள். எனினும் அன்னோரில் அவர்கட்கு உதவியானுகூலங்கள் புரிவார் ஒருவரும் தோன்றவில்லை"

"அந்த இஸ்லாமியத் திருத்தூதர் (ஸல்.)எங்கள் ஊருக்கு எழுந்தருளியபோதுதான் அல்லாஹுதஆலா, தனது சன்மார்க்கத்துக்கு வெற்றியின் அறிகுறிகளை அருள்புரிந்தான். மேலும், மதீனாவின்கண் இஸ்லாத்திற்கு ஏற்பட்ட சாத்வீகச் செல்வாக்குகளினால், கொடுங்கோன்மைக்கார மக்கத்து காபிர்களின் கொட்டம் அடங்கிப் போய்விட்டது"

"யாங்கள் எங்கள் உயிர், பொருள், சொத்து, சுவதந்திரம் யாவையும் இஸ்லாத்தின் திருத்தூதரவர்கட்குப் பணிவிடைப்புரிவதற்காகவும், அவர்கள் கட்டளையிடும்போதெல்லாம் யுத்தகளத்திற்கு வந்து ஜிஹாது புரிவதற்காகவும் அர்ப்பணஞ் செய்துவிட்டோம்"

"யாங்கள், இஸ்லாத்தின் திருத்தூதரவர்களுக்குரிய பகைவர்களை எங்கள் கடும்பகைவர்களாக எண்ணியுள்ளோம். எனவே, இதற்கு முன் யாங்கள் அவர்களோடு எவ்வளவு சம்பந்தங்கள் கொண்டிருந்தோமோ அவைகளை யெல்லாம் ஒரே அடியாய் எங்கள் மனங்களை விட்டு அப்புறப்படுத்திவிட்டோம்."

"வானங்களுடையவும் பூமியுடையவும் சர்வ இரக்ஷகனொருவனைத் தவிர்த்து வேறெதுவும் வணக்கத்துக் கருகதையானதல்ல வென்பதையும், எங்கள் ஜீவியத்தின் விசிராந்தியான நபியவர்கட்கு வழிப்பட் டொழுகுவதிற்றான் அமைந்திருக்கிறதென்பதையும் நன்கறிந்துகொண்டோம்" என்பதாகும்

வேதக்காரர்கள், முஷ்ரிக்கீன்கள் உடன் சம்பந்தங்கள்.

ஹஸ்ரத் முஹம்மத் றஸூல் (ஸல்.) அவர்கள மதீனாவுக்கு விஜயஞ் செய்ததும், ஆங்கு வதிந்துவந்த யூத ஜனங்களுடன் நேச சம்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள், அன்னோர்களுக்கு கண்ணிய மளித்து அவர்களின் அந்தஸ்தை நிலைப்படுத்தினார்கள்; அவர்களுடைய உதிரம், பொருள்யாவற்றிற்கும் அமைதியையும் பாதுகாப்பையும் அருளினார்கள். மேலும் அன்னோரை முஸ்லிம்களுக்கிணையான ஒரு நேச சமூகமாக ஏற்படுத்திக் கொண்டதோடு, எங்கிருந்தேனும் விரோதிகள்வந்து இரு கூட்டத்தாரில் எவர்களைத் தாக்கியபோதிலும் இரு சாராரும் ஒன்றுசேர்ந்து ஐக்கியமாய் அவ் விரோதியரை முறியடிப்பதென்றும், துன்பப்படுவோர் யாராயினும் அவர்க்கு உதவி புரிவதென்றும், யுத்தச் செலவினங்களில் இரு சாராரும் கலந்து கொள்வதென்றும் ஒப்பந்த முடிவுசெய்து கொண்டார்கள். இதுவிஷயங்களில் அடிமை உரிமையாளன் எல்லோரும் ஒன்றென்ற சமத்துவமும் ஏற்படுத்தி வைத்தார்கள்.

ஆனால் அந்தப் பொல்லாத யஹூதிகள் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் ஏற்படுத்திய ஒப்பந்தங்களின்படி சரிவர நடந்து கொள்ளாமல் மீறிவிட்டார்கள். அத்துடனில்லாமல், வெகு துரிதத்திலேயே அன்னோர் முஸ்லிம்கட்கு எதிரிடையாய், இஸ்லாமிய விரோதிகட்கு ஆதரவும் புரிந்துவரலானார்கள். ஆகவே, சதாகாலமும் அன்னோர்களுடைய எதிர் சூழ்ச்சிகளும் பகைமைச் செயல்களும் இடைவிடாது நடந்து கொண்டே இருந்தது. இதன் காரணமாய் யூதர்கட்கும் முஸ்லிம்கட்கு மிடையே ஏற்பட்ட பிணக்கில் அல்லாஹுதஆலா முஸ்லிம்கட்கே வெற்றியையும் செல்வாக்கு பலத்தையும் அருள் புரிந்தான். எனவே, முஸ்லிம்கள் அப்பொல்லாத யூதர்களை ஒரே அடியாய் மதீனமா நகரைவிட்டுமே அப்பால் பிரஷ்டம் செய்துவிட்டனர். ஆகையால் மதீனாவின் காற்றுங்கூட அவர்களுடைய தீய சூழ்ச்சியின் நாற்றத்தினின்றும்—கெடுதிகளின் அசூசைகளை விட்டும் தூய்மையடைந்து விட்டது.

இஸ்லாத்துக்கு எதிரிடையாய் எஞ்சி நின்றவர்கள் மக்காவின் முஷ்ரிக்கீன்கள் தான். அன்னோர் பல்லாண்டுகளாக லோக தயாளர் தேவத் திருத்தூதர் (ஸல்.) அவர்கட்கும், முஸ்லிம்கட்கும் சொல்லொணாத்

துன்பங்களும் இடையூறுகளும் இழைத்துக் கொண்டே இருந்தார்கள். ஆங்கு, எளிய முஸ்லிம்களுடைய சொத்து சுதந்திரங்கள், வீடுவாசல்கள் முதலிய யாவற்றையும் பிடுங்கிக் கொண்டு, மக்காவை விட்டும் வெளியிற் றுரத்திவிட்ட பின்னருங்கூட அவர்கட்கு மனவமைதி ஏற்படவில்லை. ஆகையால், அவர்கள், ஆங்கு எஞ்சியிருந்த முஸ்லிம் அடிமைகள், வயோதிகர்கள், ஏழைப் பெண்பிள்ளைகள் ஆகியவர்களையும் பற்பலவிதமான துன்பங்கட்கும் கொடுமைகட்கும் ஆளாக்கி வந்தார்கள். இஸ்லாத்தையேவிட்டு பழையபடி விக்கிரகந் தொழும்பர்களாய் மாறி விடுமாறு அவ்வெளியோர்களை பலவாறு நிர்ப்பந்தித்துவந்தார்கள். இவ்வாறெல்லாம் சதி புரிந்து மக்காவின்கண் ஒருமுஸ்லிமும் உயிர் பாதுகாப்புடன் இருக்கவிடாமற் செய்துவிட்டார்கள். ஆனால், இனபந்து ஜனங்களின் ஆதரவுள்ளவர்களும், கஃபாவின் ஹரமுக்குள் இருந்தவரும், சங்கையான நாட்களில் பாதுகாப்புத் தேடியவர்களும் தப்பி இருந்து வந்தார்கள்.

ஹிஜ்ரீ 6-வது ஆண்டில் நபிகட்பெருமானார் முஹம்மத் (ஸல்.) அவர்கள் சுமார் ஒன்றரையாயிரம் முஸ்லிம்களோடு மதீனாவினின்று புறப்பட்டு (மக்காவுக்குப்) போனார்கள்; முஸ்லிம்களெல்லோரும் உமராவுக்காக வென்று இஹ்ராம் கட்டிக்கொண்டிருந்தார்கள்; குர்பானிக்குரிய பிராணிகளும் அவர்கள் வசத்திலிருந்தன. அங்ஙனமிருந்தும் குறைஷ் குப்பார்கள் அன்னோரை மக்காவுக்குள் வரவிடாது தடைசெய்துவிட்டார்கள். இறுதியாய் இப்பிரச்சினை விஷயமாய் அபரிமிதமான வாக்குவாதங்கள் இருசாராருக்குமிடையே நிகழ்வுற்றபின் கீழ்கண்ட சில நிபந்தனைகள்மீது இருதிறத்தாரும் ஹுதைபிய்யா என்னுமிடத்தில் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டனர். இதற்கு ஹுதைபிய்யா உடன்படிக்கை என்று சொல்லப்படும். அந்நிபந்தனைகளாவன.—

(1) முஸ்லிம்கள் இந்த வருடம் கஃபாவின் தரிசனை செய்யாமலேயே திரும்பிப் போய்விட வேண்டும்.

(2) அடுத்த வருடம்தான் அதற்காக வர வேண்டும்; அங்ஙனம் வந்தாலும் மூன்றே நாட்கள் மட்டுந்தான் தங்கி இருத்தல் வேண்டும்.

(3) அங்ஙனம் வருங்கால் யாரும் ஆயுத முஸ்தீபுகளோடு இருத்தலாகாது. ஆனால், வெறும் வாளாயுதம் மட்டும் அதுவும் உறையினுள் போட்டு வைத்திருக்கலாம். அந்த உறையும் அதற்குரிய பையினுள் போட்டிருத்தல் வேண்டும்.

(4) இனி குறைஷியர்களினின்று யாரேனும் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு முஸ்லிம்களுடன் சேர்ந்துவிட்டால் அந்த மனிதரை குறைஷியர்கள் திரும்பவும் வாப்பீஸ் பெற்றுக்கொள்ள பாத்தியதை வேண்டும், யாரேனுமொரு முஸ்லிம் குறைஷியரோடு போய்ச் சேர்ந்துகொண்டால் அவரைத் திரும்ப முஸ்லிம்களிடம் ஒப்படைக்கப்படமாட்டாது

(5) அராபிய வர்கத்தினர் நாடுவார்களாயின் அவர்கள் எந்தவர்க்கத்தாருடன்சேர்ந்துகொள்ள இஷ்டமுண்டோ, அதில்சேர்ந்துகொள்வார்கள் என்பனவாகும்.

இவண் மக்காவைநாடி புறப்படுவதற்கு முன்னரே திருவருள்தூதர் ரஸூல் (ஸல்.) அவர்கள் ஒருநல்ல சொர்ப்பனங் கண்டார்கள். அதில், "தாங்கள் கஃபாவுக்குள் பிரவேசித்து விடுவதாய்"க் கண்டார்கள். ஆயினும், லோகதயாளர் (ஸல்.) அவர்கள், 'அம்முறை கஃபத்துல்லாவின் பிரதக்ஷிணஞ்செய்யாமலே திரும்பிச் சென்றுவிடுவதென்று தீர்மானித்த விஷயம், இதர முஸ்லிம்கட்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அந்த க்ஷணம் அவர்கள், அவ்வித சமாதானப் படுவதை விரும்பாதவர்களாய்த் தோன்றினர். எனினும், அல்லாஹுதஆலா முஸ்லிம்களுடைய உள்ளக்கமலங்களை இஸ்லாத்தின் சாத்வீக சமாதானப் பிரகாசத்தினால் ஒளிமயமாக்கிவைத்தான். அச்சமயம் அல்லாஹுதஆலா அங்ஙனம் அருள்பாலிக்கா திருந்திருந்தால், கலவரத்தீயானது மூண்டுமக்களின் உயிர்பொருள்களை அழிவுறச்செய்துவிடுமென்ற அச்சம் பெரிதும் இருந்துவந்தது. இவ்வெல்லா சிந்தனைவஸ்தைகளையும் சாந்தசீலர் சற்குணநாதர் (ஸல்.) அவர்கள் சகித்துக் கொண்டு, அமைதி சமாதானத்தையே விரும்பி யுத்தஞ் செய்வதைவிட சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதையே தெரிந்து கொண்டார்கள். இச்சம்பவங்களால் லோகதயாளர் (ஸல்) அவர்கள் உலக சமாதான வாழ்வை நிலை நிறுத்துவதில் எத்துணைப் பிரியமும் பற்றுங் கொண்டிருந்தார்களென்பது நன்கு விளங்குகின்றது. பொதுப்

படையாய் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கட்கு யுத்தம் புரிவதென்பதின் பேரிலேயே பெரும் வெறுப்பிருந்து வந்தது. எதுவரை, இஸ்லாத்தின் விரோதிகள் வாளேந்தி வந்து இஸ்லாமிய மக்களின் உயிர்ப்பொருட்கட்கு தீங்கிழைக்கத் துணியமாட்டார்களோ அது வரை லோக தயாளர் (ஸல்.) அவர்களும் யுத்தத்திற்குச் சிறிதும் துணியாதவர்களாயிருப்பார்கள்.

மேற்படி சமாதான ஒப்பந்தத்தினல் அநேகப்பயன்களேற்பட்டன. அதில்விசேஷமும் சிரேஷ்டமுமானது, முஸ்லிம்கள் மக்காவின் முஷ்ரிக்கீன்களோடு நேசமுறையில் நெருங்கியசம்பந்தங்கொண்டிருக்கவும், அன்னேர்கட்கு சந்தர்ப்பம் கிடைத்தபோது பரிசுத்த குர்ஆன் ஷரீபை ஓதிக்காட்டவும், அன்னேரை பகிரங்கமாகவே தீனுல் இஸ்லாத்தின் சத்தியத்தின் பக்கல் அழைக்கவும், அவர்கட்கு உண்மையை உணர்த்தி வைக்கவும், இடம்பாடுகள் ஏற்பட்டதேயாம். மேலும் இதே வருடத்திற்றன் நபிகட் பெருமானர் (ஸல்) அவர்கள் பல வேந்தர்கட்கு இஸ்லாத்தின் அழைப்புக் கடிதங்களும் அனுப்பி வைத்தார்கள்.

தவிர இச்சமாதானத்திற்குப்பின்னர் இஸ்லாத்தின் சத்திய ஜோதியானது மற்றும் எண்ணற்ற மாந்தர்களின் உள்ளங்களை பிரகாசப் படுத்தி வைக்கலாயிற்று. அதுகாறும் முஷ்ரிக் குறைஷியரின் கொடுங்கோன்மைத் தன்மைக்காக இஸ்லாத்தைப்பற்றிய தங்கள் அபிமானத்தை வெளியிட அஞ்சிப் பதுங்கிக் கொண்டிருந்த மாந்தர்களுங்கூட பகிரங்கமாய் வெளிவந்து இஸ்லாத்தின்மீது தங்களுக்குள்ள ஈமானை வெளியிட்டுக் கூறி முழங்க ஆரம்பித்தனர்.

நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் அவ்வுடன்படிக்கை முடிந்து மக்காவை விட்டு மதீன வழியில் வந்துகொண்டு இருக்குமிடையேதான் 'ஸுரெத்துல் பத்ஹ' இறங்கிற்று. ஜயத்தை அறிவித்த இவ்வத்தியாயத்தில் "ஹுதைபிய்யா உடன்படிக்கையின் பெருமை, அதனலாய பிரயோஜனனுகூலப் பலன்கள், மற்றும் வருங்காலச் சம்பவ விஷயங்கள், முஸ்லிம்கட்கு இனி கிடைக்கப் போகும் செல்வ பாக்கியங்கள், இணையிலா வெற்றிகள் யாவும் துலக்கமாய் அறிவிக்கப்பட்டிருந்தன. மேலும், அச்சமாதானமே முஸ்லிம்கட்கு மகத்தான வெற்றிக்குரிய அத்தாக்ஷி யென்றும் அதனல் பகிரங்கமாய்க் கூறப்பட்டு விட்டது. நிற்க இந்தச் சம்பவங்கட்குப் பிறகு நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளை நோட்டமிட்டுப் பார்க்குமிடத்து, குர்ஆன் ஷரீப் கூறிய முன்னறிக்கை (நன்மாராயங்) களெல்லாம் பிரத்தியக்ஷமாய் நிகழ்ந்துவிட்டதென்பதை நாம் நன்கு தெரிந்துகொள்கிறோம். ஆகையால் இனி மக்காவை ஜயித்து விடுதற்குரிய மார்க்கமும் தெளிவாய் தெரிந்துவிட்டது; முஸ்லிம்கள்மீது அல்லாஹ்வுடைய நிஃமத்தும் பூர்த்தியாய் அருளப்பட்டு விட்டது; அவர்களுடைய ஈமானும் மிகமிக ஸ்திரமானதாகி இலங்கிவிட்டது; இன்னும் இவ்வுலகத்தின் நானுதிசைகளினின்றும் இஸ்லாத்தின் சத்தியாமிர்தத்திற்காக பசியும் தாகமும் பூண்டவர்களின் ஆத்மாக்கள் சத்தியத்தை நோக்கி ஓடிவந்துவிட்டது. எனவே அவையெல்லாம் இஸ்லாம் என்னும் ஊற்றினின்று பயனடைந்து தங்கள் தாகத்தையும் பசியையும் நிவர்த்தித்துக் கொண்டன; அன்னேரது ஈமான் என்னும் விருக்ஷமானது தழைத்து ஓங்கிவளர்ந்து பலன் தரலாயிற்று.

றஸூல் (ஸல்) அவர்களின் சற்குண ஒழுக்கமும், ஜீவியப் போதனைகளும்

நபிகணுதர் றஸூல் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பிரசாரம் ஆரம்பித்ததன்பின் பத்தாண்டுகள்வரை மக்காவின்கண் வாசம்செய்துள்ளார்களாதலின் அக்காலத்திலெல்லாம் அவர்கள், ஈமானின் மூலாம்சத்தையும், சன்மார்க் ஒழுக்கத்தைப்பற்றியும் பிரசாரம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். மேலும், கலப்பற்ற ஏகதெய்வத்தின் பக்கமும், நல்லனுஷ்டானத்தின் பக்கமும், ஆன்மத்தூய்மையின் பக்கமும் மக்களை இனியமுறையில் அழைத்து அன்னேரது துற்குணங்களைவிட்டு விடும்படி விலக்கிவந்தார்கள்; மானுஷ்யவர்க்கத்தின் பகுத்தறிவையும், குண ஒழுக்கத்தின் சக்திகளையும் தூண்டி எழுப்பிவந்தார்கள். தவிர மானுஷ்ய வர்க்கத்தின்பால் தெய்வீக சத்தியத்தின் உண்மையத்தாக்ஷிகள் வெளிப்படும் வண்ணமும், இறைவனது அருட்கொடையாகிய ரிஸ்கு (உணவுச்சாதனம்) விருத்தியாகும் வண்ணமும் கல்விஞானங்களைப் பரத்திவைக்க வேண்டுமென்றும் போதித்

தார்கள். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் தாங்கள் போதித்தப் போதனைகளை யெல்லாம் தங்களது நித்திய அனுஷ்டான மூலமாக எண்பித்தும் காட்டினார்கள். மேலும் இவ்வித உயர்தர ஞானங்களை மக்களின்பால் வியாபிக்கச்செய்வதற்காக வேண்டியும் மாபெரும் கஷ்ட நஷ்டங்களைப் பெரிதும் சகித்துவந்துள்ளார்கள். எத்தனையோ சங்கடங்கள் குறுக்கிட்டும் அவர்கள் தங்கள் பாதத்தை ஓரடியும் பின்னெடுத்துவைக்கவில்லை. இவ்வித சத்தியப் பிரசாரத்தைவிட்டும் அவர்களை (ஸல்.) தடுத்துவிடும் நோக்குடன், இஸ்லாத்தின் விரோதிகள் ஏராளமான முதல்களையும் செல்வங்களையும் இராஜ்ஜியாதிகாரத்தையும், தலைமை ஸ்தானத்தையும் எம்பிரான் (ஸல்.) அவர்கள்பால் சமர்ப்பித்தும் பார்த்தார்கள். ஆயினும் லோகசீர்திருத்தகர் (ஸல்.) அவர்கள் அவற்றையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு சத்தியமூலாதாரப் பிரசாரத்திலே அனவரதமும் ஈடுபட்டுழைத்துவந்தார்கள். அங்ஙனம் உலகசம்பந்தமான பதவிகளிலோ பொருட்களிலோ எம்பிரான் றஸூல் (ஸல்.) அவர்கட்குக்கொஞ்சமேனும் பாசப்பற்று இருந்திருக்குமாயின், தங்களுடைய மிகமிக ஏழ்மை நிலைமையையும் தொல்லையான வாழ்வையும் விட்டு உடனே உயர்ப்பதவியை விரும்பி ஏற்றுக்கொண்டு அக்குறைஷியர்கட்கு பெரிய அரசராக விளங்கியிருப்பார்களன்றோ?

ஹிஜ்ரத்துக்குப் பின்னரே பரிசுத்ததீனுல் இஸ்லாத்துக்குப் பரிபூரண சுயேச்சை ஏற்பட ஆரம்பித்தது. இதன் பயனாய் முஸ்லிம்கள் தங்கள் சத்தியப்பிரசார சக்தியில் பெரும் ஆதரவும் செல்வாக்கும் கிடைக்கப் பெற்றார்கள். எனவே, முன்னர், மக்கா வாழ்க்கையின் போது எங்கெங்க சட்டதிட்டங்கள்மீதும், வழக்காசாரத்தின் மீதும் சமிக்கைமட்டும் செய்யப்பட்டிருந்தனவோ அவைகள்மீது மதினாவாழ்க்கையில் ஞானோதயம் பொருந்திய பஹிரங்க அறிக்கையும் செய்யப் பட்டுவிட்டது.

இதன்பயனாய் ஆண்டவனின் சன்மார்க்கமும் பரிபூர்த்தியடைந்து விட்டது. மாந்தர் கோடிகட்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள் வழியாய் அருளப்படவேண்டிய பாக்கியங்களெல்லாமும் பரிபூரணமாய் அருளப்பட்டுவிட்டன. நாயகம் (ஸல்.) அவர்கள் சாதித்த பரிபூர்ணநிலையானது இம்மட்டோடு நின்றுவிடவில்லை. ஆனால், ஆயிரக்கணக்கான முஹாஜிரீன்களும் அன்ஸாரிகளும், தோழர்களும், பக்தர்களும் தங்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து இஸ்லாத்தின் மூல தத்துவங்களில் தங்கள் வாழ்க்கையைப் பரிபக்குவப் படுத்திக்கொண்டு வெளிப்போந்து பிறர்களைப் புனருத்தாரணம் புரிந்து வரலாயினர். இதன் பயனாய் நாயகம் (ஸல்.) அவர்களுடைய சேவைகளை எடுத்து தம் கடமைகளைப் போல் புரியும் உத்தம சிஷ்யகோடிகளின் தொகையும் ஒரு பெருங் கூட்டமாய்விட்டது. எனவே இன்னோர் இவ்வகில உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளுக்கும், திக்குதிசைகட்கும் பரவிச் சென்று சத்திய சன்மார்க்கத்தின் பக்கல் மனித கோடிகளை சாத்வீக முறையில் அழைக்கலானார்கள்; பழைய மதங்களின் தலைவர்களும், புராதன நாகரிகத்தின்படி நடந்த அறிவாளிகளுங்கூட அன்னோரின் நீதம், தயை, சத்குணம், நல்லொழுக்கம் முதலியவற்றிற்கு உலக மானுஷ்யச் சரித்திரத்திலேயே இணைகிடையாதென்று கூறி வியப்படைந்தார்கள்.

இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்.) அவர்கள் முஸ்லிம் சமூகம் (என்னும் விருக்ஷ)த்தை குர்ஆனின் ஜீவாதாரத்தைக் கொண்டு வளர்த்துப் பெரிதாக்கினார்கள்; தங்களுடைய ஞானோதயத்தையும், ஜனச்சேவையையும் கொண்டு அதை ஜோதி மயமாக இலங்கச் செய்து முன்னுக்குக் கொண்டு வந்தார்கள்; லோகதயாளரான றஸூல் (ஸல்.) அவர்கள், மதினாவின் அன்ஸாரிகளுக்கும், மக்காவினின்று ஹிஜ்ரத்செய்த முஹாஜிரீன்களுக்கும் எத்தகைய சமத்துவ சகோதரத்துவ சம்பந்தத்தை ஏற்படுத்தி வைத்தார்களெனின், இரு திறத்தாரும் இரத்தச் சகோதரர்களைப்போல தங்களுடைய சொத்து செல்வம் வீடுவாசல் பொருள் முதலியவைகளை யெல்லாம்பங்கிட்டுக்கொடுத்துக்கொண்டார்கள். இங்ஙனம் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள், 'அவ்ஸ்' வர்க்கத்தின் மனங்களையும் 'கஸ்ரஜ்' வர்க்கத்தின் உள்ளங்களையும் ஒன்று சேர்த்துப் பிணைத்துவிட்டார்கள். இவ்விரு சாராரும் எத்தகையவர்களெனின், இஸ்லாத்துக்கு முன்னைய ஜாஹிலிய்யத்தான காலத்தில் ஒருவர் இரத்தத்தை உருஞ்ச மற்

றவர் கொடுந் தாகத்தினராயிருந்தவர்கள். இப்பால் அன்பு என்னும் சாகரத்தில் ஆழ்ந்து அண்ணனும் தம்பியும்போல் அணுகிச் சேர்ந்து கொண்டார்கள்.

நாயகம் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள் ஏதேனுமொரு பொதுக்காரியத்தைப் பற்றி கவனிப்பதாயின், தங்களுடைய நேசர்கள், தோழர்கள் முதலியோரைக் கூட்டி உட்கார வைத்துக்கொண்டு ஆலோசனைக் கேட்டு ஏக அபிப்பிராயப்படி முடிவுக்கு வருவார்கள்; யாவருடனும் சமத்துவமாய் உட்காருவார்கள்; சர்வ சாதாரணமான வரிடமும் யோசனைக்கேட்பார்கள்; எளியோர்கட்கு உதவி செய்வார்கள்; யாவருக்காயினும் துன்பம் வந்துற்றபோது உடனிருந்து அவர்களது கவலையைப் போக்கிவைப்பார்கள்; அங்ஙனமேபிறருடைய சந்தோஷத்திலும் கலந்து கொள்வார்கள்; அன்னேரில் பெரியோர்கட்கு மேதைமரியாதைகள் புரிந்து கண்ணியப்படுத்துவார்கள்; அன்னேரிற் சிறியோர்களை பிரியமாய் ஆதரித்து விசுவாசம் பாராட்டுவார்கள்; அன்னேரின் ஏழை எளியோரை போஷித்துப் பாதுகாப்பார்கள்; அன்னேரில் வறுமையாளர்கட்கு ஆறுதலும் தேருதலும் கூறி ஊக்க மூட்டுவார்கள்; அன்னேருடைய மையித்துகளை நல்லடக்கம்செய்வார்கள்; அவர்களில் யாராயிருப்பினும் ஒருசிறுபொருளும் சன்மானம், காணிக்கைக் கொடுப்பார்களானல் அன்பு விசுவாசத்தோடு அதை ஏற்றுக் கொள்வார்கள். அன்னேர்களுடன் கூடிக் கலந்து உறவாடி சமத்துவமாயும், சகோதரத்துவமாயும் வாழ்வார்கள். எனவே இந்நிலையில் நோட்டமிடுவோமாயின், எம்பிரான் (ஸல்.) அவர்களும் அன்னேரில் ஒருவரைப்போலவே காணப்படுவார்கள்.

லோகச்சிரேஷ்டர் திருவருள் தூதர் (ஸல்.) அவர்கள், ஆரம்பமுதற்கொண்டே மானுஷ்ய இனத்திலே சிறப்பான குணமும் ஒழுக்கமும் வாய்ந்தவர்களாகவும், பரிபூரணமான பணிவும் பண்பான சுபாவமும், கௌரவமான தன்மையும் நம்பிக்கைக்குரிய நடப்பும் வாய்ந்தவர்களாய் விளங்கினர்கள். இதன் காரணமாய் மௌடீகக்காலத்து காபிர் கூட்டத்தினருங்கூட லோகதயாளர்(ஸல்.) அவர்களை மனமாரப் புகழ்ந்து வந்தார்கள். இவ்வாறுன மகான் அவர்கள் தங்களுக்கு நுபுவ்வத் கிடைத்து லோக சீர்த்திருத்தகரான பின்னர் எத்தகைய மான்மியமுள்ளவர்களாய் விளங்கியிருப்பார்களென்பதை (அவர்களது காலடி தூசிக்கும் நிகராகாத) நம்மனேரால் என்னவென்று வர்ணிக்கமுடியும்? ஆகையினல் அல்லாஹூத ஆலாவே தனது குர்ஆன் ஷரீபின்கண் "வஇன்னக லஅலா குலுகின் அலீம்" (நபியே நிச்சயமாக நீர் மகத்தான குணவிசேஷத்தின்பாலுள்ளீர்) என்று திருவுளம்பற்றி யருளியுள்ளான்.

நபிகட் பெருமானுர் (ஸல்.) அவர்கள் மிகவும் இளகிய மனச்சுபாவ முள்ளவர்களாயிருந்தார்கள்; அளவற்ற கருணையுள்ளவர்களாய் விளங்கினர்கள். அத்துடன் கௌரவமும், நன்மதிப்பும், கண்ணியமும், உத்சாகமுமுள்ள சத்திய ஸ்வரூபராய் விளங்கினர்கள். யாரேனும் ஒருவர் எம்பெருமானுர் (ஸல்.) அவர்களை சிறிதுநேரமே கண்கொண்டு நோக்குவாரானல், உடனே அவர்கள்பால் விசுவாச மையல்கொண்டு விடுவர்; யாரேனுமொருவர் லோகநாயகர் (ஸல்.) அவர்களது தன்மையை அறிய முயற்சிப்பாரானல் அவர்களது திருச்சமுகத்தை நண்ணியதும் அவர்கள்பால் பணிந்து அர்ப்பணமாகிவிடுவர். லோகநாயகர் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள், அளவற்ற பச்சாத்தாபமும், கரையற்ற கருணையும் பரிபூர்ணஞானமும் உடையவர்களாயிருந்தனர். அவ்வாறே பராக்கிரமத்திலும், நேர்மையாய் நடந்துகொள்வதிலும், ஜாக்கிரதையிலும் மிகச்சிறந்தவர்களாயிருந்தனர். யுத்தம்புரியும் சங்கல்பம் நேரிட்டு யுத்தகளம் மூண்டுகொள்ளுமாயின் எம்பிரான் (ஸல்.) அவர்கள் மற்றேரைக் காட்டினும் முன்னணியில் நிற்கத் துணிவார்கள்; ஓரடியும் பின்னெடுத்து வைக்கமாட்டார்கள். எனவே, எம்பெருமானுர் (ஸல்.) அவர்களின் பராக்கிரமத்தைக்கண்டு பெரும்பெரும் அரசர்களெல்லோரும் வியந்து பணிந்துபோயிருக்கிறுர்கள். (உஹத்)யுத்தத்தில் ஒருபொழுது சேனைகள் யெல்லோரும் ஓடிப்போய்விட்டபோது, லோகதயாளர் (ஸல்.) அவர்கள் மட்டும் நின்று போர்ப் புரிந்த இடத்தைவிட்டு ஓர் இம்மியும் அகலாதிருந்தார்கள். எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் எத்தனையோ மிக பயங்கரமான யுத்தங்களிலெல்லாம் கலந்துகொண்டுள்ளார்கள். ஆயினும் லோகதயாளர்(ஸல்.)

அவர்களது திருக்கரமானது உபைய்யிப்னுகலபு என்பானுடைய இரத்தத்தைத் தவிர்த்து மற்றெல்லா சந்தர்ப்பத்திலும் தூய்மையாகவே இருந்துளது. யுத்தத்தில் புகுவார்களானல் பிறரை வீணே கொல்லாமலேயே சேனையை முறியடிப்பார்கள். அதே சம்பவத்தின் ஒரு சந்தர்ப்பத்தின்போது விரோதிகளின் எதிர்ப்புக் கடுமையாகி, தங்களையும் மற்ற சகாக்களையும் காப்பாற்றித் தப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்ட நேரத்தில் முன்வைத்தகாலை பின்வாங்கலாகா தென்று ஊக்கப் படுத்தியுள்ளார்கள். அதிக்கிரமமாக போர்த் தொடுக்கின்றவர்களுடன் போர்த் தொடுத்துக்கொண்டே அவர்கட்கு அன்பைப்பற்றியும் சாத்வீகத்தைப்பற்றியும் அறிவும் நற்புத்தியும் போதிப்பார்கள். தங்களுக்கு யார் ஒரு தீங்கு செய்துவிட்டபோதிலும் உடனே அதை தயையினல் க்ஷமித்து விடுவார்கள்; பழிக்குப்பழி வாங்கமாட்டார்கள்.

சத்தியத்தையும் நியாயத்தையும் நிலை நிறுத்தும் விஷயத்தில்நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், தங்கள் சுய நன்மையையோ, பிறர் தாக்ஷண்ணியத்தையோ கிஞ்சித்தும் பொருட்படுத்தமாட்டார்கள். எம்பெருமான் (ஸல்.) அவர்களுக்கு யாரேனும் மிகக்கடுமையான தீங்கைப் புரிந்து விட்டபோதிலும் சிறிதும் முன் பின் யோசியாமல் உடனே அவரை மன்னித்து விடுவார்கள். பிறர் குறை சொல்வார்களே, அல்லது குற்றம் கண்டு பிடிப்பார்களே என்ற பயத்துக்காக சத்திய வழியை விட்டு ஒரு சிறிதும் நகரமாட்டார்கள். மேலும் தங்களாலேண்டமட்டும் பிறர்க்கு உபகாரங்கள் புரியத் துவங்கிவிடுவார்களானல் ஏழைகள்பாலும், தேவைப் படுவோர்பாலும் தங்கள் உபகாரங்களை மழைபோல் வருஷிப்பார்கள். எந்தச் சமயத்திலும் பொறுமையையும், ஸ்திரமான நிலையையும் கைவிடமாட்டார்கள். ஆண்டவனுக்கு நன்றியாய் ஷுக்று செய்வதைப் போல், மக்களின் உபகாரங்களுக்கும் நன்றி செலுத்துவார்கள். அனுவசியமான விஷயத்திற்காக சங்கடத்திற் சிக்கிக்கொள்ள மாட்டார்கள். வீண் கஷ்டங்களை விட்டும் தப்பித்துக் கொள்வார்கள். எளியவாழ்க்கை, ஆத்திரப்படாமை, சாதுத்தன்மை ஆகியவைகளைப்பற்றிப் பிறர்க்குப் போதனைகள் புரிவார்கள். பசிநேரத்தில் எப்பொருள் தங்களுக்கு முன்கொண்டு வந்து வைக்கப்படுகிறதோ அதை பூரணத்திருப்தியுடன் புசிப்பார்கள். நல்ல பதார்த்தங்கள் கிடைக்காமற் போனல், ருசிக்கு ஆசைப்பட்டு அதை விரும்பிக் கொண்டாடமாட்டார்கள். அங்ஙனம் ஏதேனும் ருசியும் மணமுள்ள உணவுப் பொருள் கிடைத்துவிடுமானல் அதையும் குறைசொல்லும் யோகிகள், பாதிரிகள், துறவிகளைப்போல் இருமொழிக்கூறி இகழாமல் சந்தோஷமாய்ப் புசிப்பார்கள். எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் பெண்களையும் வாசனைதிரவியங்களையும் நன்முறையில்நேசிப்பார்கள். அடிமைகள் அனுதைகள், பெண்பாலார்கள்முதலியோருடன் அத்யந்தநேசத்துடன் பரஸ்பரம் நடந்துகொள்வார்கள். இவ்வாறே மற்ருேரையும் அன்னேர் விஷயத்தில் பிரியமாய் நடந்துகொள்ள வேண்டுமென்றும் உபதேசம் புரிவார்கள்; அவ்வெளியோர்களை இழிவான நிலையைவிட்டும் மேன்மைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் போதிப்பார்கள்.

நபிகட் பெருமானர் றஸுல்(ஸல்.) அவர்களின் இந்தத்தூய்மையும் புனிதமும் வாய்ந்த குணநல்லொழுக்கங்கள், பிறமானுஷ்யகோடிகள் யாவருக்கும் ஓர் அழகிய நமூனுவாக விளங்கிவந்தது. இதுவே ஆன்மார்த்தத்துக் குரிய குறையாச் செல்வமுமாயுமிருந்தது. கல்விஞானத்தின் மணிவிளக்காய் விளங்கிய பத்தினி ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் எம்பெருமானர் (ஸல்) அவர்களைப்பற்றி தகவுரை யளிக்குமிடத்து 'கான குல்குஹு அல்குர் ஆன்' (அவர்களுடைய குணமானது குர் ஆனகவே இருந்தது) என்று திருவுளம் பற்றியுள்ளார்கள். அதாவது, நாயகம்(ஸல்.) அவர்களின் குணம், ஒழுக்கம் யாவும் முற்ற முற்ற குர்ஆன்ஷரீபின் போதனைக்கு ஒத்தமைந்தனவா யிருந்தன வென்பதாம்

இறுதி ஜும்ஆ

லோகநாயகர் (ஸல்.) அவர்கள், ஹிஜ்ரத்துக்குப் பின் பத்தாவதாண்டில் இறுதியான ஹஜ்ஜை நிறைவேற்றிவைத்தார்கள். அதே சந்தர்ப்பத்திற்ருன் ஷிர்கு, குப்ரியத்து, மௌடீகம் முதலியவற்றின் ஸ்தாபனங்கள் முழுதும் வீழ்த்தப்பட்டுப்போயின; அஞ்ஞான்றே இஸ்லாத்தின் ஜீவியத்தை உறுதி

யானதாக்கியும் வைத்துவிட்டார்கள்; ஆயிரக்கணக்கான முஸ்லிம்கட்கு அப்போது ஹஜ்ஜின் கடமைகளை இனி தெடுத்துப் போதித்தார்கள். மேலும் இக்கட்டளைகளைப் பிறர்க்கும் எடுத்துப் போதிக்கும்படியும் ஆக்ஞாபித்தார்கள். இங்ஙனம் தங்கள் சிஷ்ய கோடிகட்கும் மற்றோருக்கும் போதிக்க வேண்டியனவற்றை யெல்லாம் போதித்துவிட்டு, தங்களது திரு மரணத்தைப்பற்றி முன்னறிக்கைச் செய்யலானுர்கள். மேலும், எம்பெருமானுர் றஸூல் (ஸல்.) அவர்கள், இவ்வுலகத்தின்கண் விஜயஞ்செய்து, அல்லாஹூத ஆலாவுடைய கட்டளைகளை யெல்லாம் மாந்தர்பால் எடுத்தோதி முடித்துவிட்டமைக்கும் ஜனங்களை சாக்ஷியாகவும் ஏற்படுத்திக்கொண்டார்கள். அங்ஙனம் செய்வனவற்றை யெல்லாம் செய்து முடித்த அன்றுமாலை பின்வரும் ஆயத்து இறங்கிற்று:—

"இன்று, காபிரானவர்கள் உங்களுடைய (சன்மார்க்கத்தை எதிர்ப்ப)தினின்றும் ஓய்ந்துபோய் விட்டார்கள். ஆகையால் அவர்கட்கு நீங்கள் பயப்படவேண்டாம்; எனக்கே பயப்பட்டொழுகுங்கள். இன்று யான் உங்களுக்கு உங்கள் (இஸ்லாம்) மார்க்கத்தையே பரிபூரணமாக்கி வைத்துவிட்டேன். இன்னும் உங்கள்மீது என்னுடைய அருட் பாக்கியத்தை நிரை பூர்த்தியாக்கி வைத்துவிட்டேன். இன்னும் உங்களுக்காக வேன்று பரிசுத்த இஸ்லாத்தையே சன்மார்க்கமாகப் பொருந்திக்கொண்டேன்." என்பதாம்.

மானுஷ்யக்கோடிகள் முன்னையப் பல்லாயிரமாண்டுகளாக தெய்வசக்தியின் சட்டதிட்டங்களின் பிரகாரமே முன்னேற்ற எல்லைகளைக் கடந்து மேன்மை யடைவதற்கு முயன்று வந்தார்கள். அவர்களின் அம்முன்னேற்ற நிலையானது, சுயேச்சையான உள்ளத்துடையவும், சுதந்திரமான மனசாக்ஷியுடையவும் அருள்நிழலின் கீழிருந்து யௌவனத் தசைவரைப் போய் சேர்ந்திருந்தது. இதன் காரணமாய் பண்டைய மார்க்கத் தலைவர்களையும், உலக வியவகார அதிகாரிகளையும் குருட்டுத்தனமாய் பின்பற்றி நடக்க வேண்டுமென்ற விலங்கை முறித்துக்கொண்டு தங்கள் ஆன்மாவையும் உடலையும் சுயேச்சைமயமாய்ச் செய்துகொள்வதற்குரிய வழிகளை நிர்மாணஞ் செய்துகொள்ளலானுர்கள். உலகமக்கள் இங்ஙனம் நன்னிலையடைவதை விரும்புவதற்கேற்ப தெய்வீக சக்தியும் அம்மாந்தர்களின் அவ்வவசியத்தை நிறைவேற்றிவைக்க முனைந்தது. எனவே சாந்த தயாளர் (ஸல்.) அவர்கள் பரிபூரணமனத்தோடு சன்மார்க்கத்தின் திருத்தூதைக் கொண்டுவந்து மாந்தர்க் கோடிகட்குப் போதித்தார்கள். அவர்களுடைய திருப்போதனையின் இலக்ஷியமானது மானுஷ்ய வர்க்கம் தங்கள் பகுத்தறிவை நன்கு பயன்படுத்தியே எக்காரியங்களையும் செய்தல் வேண்டுமென்பதும், உலகாசாரத்தில் ஞானவிவேகங்களை உணர்ந்தொழுக வேண்டுமென்பதுமாகும்.

இஸ்லாத்தின் திருத்தூதர் றஸூல் (ஸல்.) அவர்கள் எழுந்தருளியதற்குப் பின்னர், பிரசாரத்தின் காலமும், ஹிஜ்ரத்துக்குப்பின் சன்மார்க்கம் பரிபக்குவமானதின் காலமும் ஒன்றுக்கொன்று சரிசமமானதாகவே இருந்தது. 'ஹஜ்ஜதுல் விதாஃ' நிகழ்ந்த மூன்று மாதங்கட்குப் பின்னர் ஜூம்ஆ தினத்தன்று லோகதயாளர் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள் இவ்வழியமுலகைவிட்டும் சாஸ்வத உலகத்தின்பால் ஏகிவிட்டார்கள். ஆயினும் தங்களுக்குப்பின், இத்தரணியின் இணையற்ற முன்மாதிரியாகவும் என்றும் உஜ்ஜீவிதமாயிருக்கும் அத்தாக்ஷியாகவும் தங்கள் வாழ்க்கையின் நமூனவை (உஸ்வயேஹஸனவை) கியாமத்துவரை நிலைத்திருக்கும்வண்ணம் விட்டுச்சென்றார்கள்.

லோகதயாளர் (ஸல்.) அவர்களது திருமரணத்துக்குப் பின்னருங்கூட அவர்களது சிஷ்யகோடிகளாகிய நம் முஸ்லிம் உம்மத்தினர்கள் எதுவரை பரிசுத்த குர்ஆனையும், நபிகள் பிரான் (ஸல்.) அவர்களின் உபதேச ஹதீதுகளையும் தங்களுக்கு சத்வழிக்காட்டியாய் ஆக்கிக்கொண்டு நடந்து வருவார்களோ அதுகாறும் ஒருபோதும் எவ்விதமான க்ஷீணதிசையும் அடையவே மாட்டார்கள். எனவே எம்பிரான் (ஸல்.) அவர்கள் தங்கட்குப் பின்னர் வரப்போகும் சிஷ்ய வம்சத்தினர்கட்காக தங்கள் குடும்பத்தாரின் உபதேசங்களையும், உத்தம ஸஹாபாக்களின் ஜீவவாழ்க்கையின் முறைகளையும் சிறப்புமிக்க கலீபாக்களின் தூயவாழ் முறைகளையும் நேர்வழிகாட்டும் சாதனங்களாக இத்தரணியின்கண் விட்டுச்சென்றார்கள்.

இன்னோர்களுங்கூட சத்குணநல்லொழுக்கங்களில் குர்ஆனை முற்றும் பின்பற்றி நடப்பவர்களும், எம்பெருமானார் அவர்களின் அழகிய நமூனாவின் பிரகாரமே ஒழுகுபவர்களுமாவர். ஆகையால் இன்னோர் தலீல் ஹதீதுகளின் சாஸ்வத ஜீவித பிரதிபிம்பங்களாகவும், தோற்றங்களாகவும் மிளிர்கின்றவர்களாவர்.

மானுஷ்யப் பரிபூரணகர் முஹம்மத்றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள் ஒரு சத்தியசன்மார்க்கத்தையும், மகா மேன்மை மிக்கதோர் சமுதாயத்தையும், சற்குணத்தாலாய ஆத்மார்த்த அரசாங்கத்தையும் ஏற்படுத்திவைத்துவிட்டுச் சென்றார்கள். இந்த நற்சாதனத்தில் அளிக்கப்பட்டிருந்த சகல உரிமைகளும் இறைவனது கட்டளையை முற்றும்பின்பற்றியதாயிருந்தன. அம்மார்க்கப் பெரியார்களின் அறிவுப்போதனைகளனைத்தும் மனித கோடிகளின் அனுகூலத்தையும் பொதுஜன அபிப்பிராயத்தையும் முற்றும் அனுசரித்தமைந்தனவையா யிருந்தன. மேலும், "ஒருகாலத்தில் முஸ்லிம்கள் கீழ்நாட்டுடையவும் மேனாட்டுடையவும்மிக விஸ்தீரணமான பூபாகங்களை ஆதீனங்கொண்டு விளங்குவார்களென்றும், கைஸர் கிஸ்ரா முதலானோரின் அரசாங்கங்களையும் வென்று நிர்வகிப்பார்களென்றும்" எம்பெருமானார் (ஸல்.) அவர்கள்முன் கூட்டியே நன்மாராயம் அறிவித்துள்ளார்கள். இன்னமும் எதுவரையில் உம்மத்தினர்கள் சத்தியத்தின் மீதும் நியாயத்தின்மீதும் நிலைத்து நிற்பார்களோ அதுவரை அவர்களுடைய வெற்றிகளும் கீர்த்திகளும் நிலைப்பெற்றோங்கிகொண்டே இருக்கும்; அதன்பின் இவ்வரசாங்கங்களின் ஆட்சிக் கயிரானது தகுதியற்ற அசத்தியர்களின் கையில் மாறுபட்டுப் போய் விடுங்கால் இவ்வரசாங்கங்கள் அழிவுபட்டே போய்விடுமென்றும் முன்னறிக்கைச் செய்துள்ளார்கள். இன்னமும், முஸ்லிம்களினின்று ஒரு சார்பினர் எஞ்ஞான்றும் சத்தியத்தின்மீதே நிலைத்து நின்று, ஆண்டவனுடைய கட்டளைகட்கு ஒரு சிறிதும் மாறுபடாமல் நடந்து வருவார்களானால் அவர்கள் உலகமுடிவு—கியாமத்து நாள்வரைக்கும் கண்ணியத்துடன் நிலைத்திருப்பார்கள் என்றுங்கூட எம்பெருமானார் றஸூல் (ஸல்.) அவர்கள் உறுதிச் சுபமொழிக்கூறிச் சென்றுள்ளார்கள். இவ்வாறெல்லாம் லோக சீர்திருத்தகர் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறிச் சென்ற முன்னறிக்கை நன்மாராயங்களெல்லாம் ஒவ்வொன்றாக இதுகாலைப் பூர்த்தியடைந்தும், நிறைவேறியுமே வந்துள்ளன. அவர்களுடைய எச்சரிக்கைகளும் பலிதமடைந்தே வந்துள்ளன. ஆகையால் எதுகாறும் இப் பிரபஞ்சமானது நிகழ்வுற்றுக் கொண்டே இருக்குமோ அதுகாறும் கால உலக மாறுதல்களினூடே எம்பெருமானார் றஸூல் (ஸல்.) அவர்களுடைய நபித்துவத்தின் சத்திய அத்தாக்ஷிகள் விருத்தியடைந்து உலகத்தை சுபீக்ஷயடையச் செய்துகொண்டேதானிருக்கும்.

எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அழகிய நற்சேவைகள் புரிந்து, வீழ்ச்சியடைந்து போயிருந்த உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்து, நேர்வழியை மறந்துபோய்க் கிடந்த மாந்தர்களை சன்மார்க்கத்திலாக்கிவைத்த மகத்தான பேருபகாரங்கட்காக தூய்மையும் வன்மையும் பொருந்திய இறைவன் நற்கூலி அளித்தருள் பாலிப்பானாக.

வஸல்லல்லாஹு வபாரிக் அலைஹிவஅலா அஹ்லிபைத்திஹித்தாஹிரீன் வஸலாமுன் அலல் முர்ஸலீன் வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

'திருவருள் தூது'

இவ்வாண்டின் 'மவ்லூதுநபி' விழாவிற்கென்றே நம் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கத்தாரால் தயாரிக்கப்பெற்றுள்ள அரும் நூல் மிக்க மாக்ஷி பொருந்தியதாய் இலங்கிக்கொண்டிருக்கிறது. அதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் அருட் தூதுகளை நன்கறிந்துகொள்ளக்கூடும். ஆதலின் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒரு பிரதி அனுப்பிவைக்கப்படும்.

திருவருள் தூதர் (ஸல்.) அவர்களின் சீர்திருத்த சேவைகள்.

மௌலானா அப்துல் மஜீது சாஹிப் கர்ஷீ வரைவது.

நுபுவ்வத்தின் 23-ஆண்டுக் காலம் வரை எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் பற்பலவிதமான கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகவேண்டியிருந்தது உண்மையே. அவ்வாறிருந்தும் நுபுவ்வத்தின் முதற் தேதிமுதல் இறுதிநாள்வரை தங்களுடைய லக்ஷியங்களும் சீர் திருத்த சேவைகளும் ஓயாது நடந்து கொண்டேதானிருந்தது. அவர்கள் தேசத்திற்கும், சமுகத்திற்கும், பொதுவாய் மானிடர்களுக்கும் செய்துமுடித்த சீர் திருத்தங்கள் இப்பிரபஞ்ச சரிதையில் ஒப்பற்றனவாய் இலங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே, மதுபானம் ஒழிக்கப்பட்டுப் போயிற்று; விபசாரம் அகற்றப்பட்டுப்போயிற்று; திருட்டும் கொள்ளையும் அழிந்தொழிந்தது; விக்கிரக ஆராதனை ஏகதேசத்தில் அகற்றப்பட்டுப்போயிற்று; அரப் தேசத்தின் எந்த மூலை முடுக்குகளிலும் அதன் அறிகுறியும் இல்லாது போயிற்று; பல நூற்றாண்டுகளாய் அரபிகளிடம் குடிகொண்டிருந்த பகைமைத்தனம் அடியோடு அழிக்கப்பட்டுப் போயிற்று; தேசத்தின் நாலுபாகங்களிலும் சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயக ஆக்ஷி இவைகள் தலை சிறந்து விளங்கிற்று; முஸ்லிம்கள் நீதி நேர்மை, ஈமான், உறுதி, சத்தியம், தக்வா முதலியவற்றில் சிறந்து விளங்கினார்கள்; நாகரீகமற்ற இச்சமுகம் அளவுகடந்த முன்னேற்றமடைந்து விட்டது; இவர்களில் யாரேனும் குற்றஞ் செய்து விடுவார்களாயின் அக்குற்றத்தை மறைப்பதற்கோ அல்லது அக்குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்காமல் தடுப்பதற்கோ எவரும் முன்வரமாட்டார்கள். ஈதென்ன தாங்கள் செய்த குற்றத்தை அதிகாரிகளின் முன்னிலையில் தெரிவித்து அதற்கு தண்டனை கொடுக்கும்படி கோருபவர்களாகவுமாய் விட்டார்கள். தவிர அன்னோர் பொய்ப்புறம்பேசுதல், தாக்ஷண்யம், அகம்பாவங் கொள்ளல், லஞ்சம் வாங்கல், வட்டிவாங்கித் தின்னல் முதலிய கெட்ட குணங்களை விட்டொழித்து சிறந்து விளங்குபவர்களாய் விட்டார்கள். இவர்கள்தான் நுபுவ்வத்தின் காலத்திற்கு சற்றுமுன் தங்களுடைய அருமை பெண்சிசுக்களை மண்ணிற்குள் உயிருடன் புதைத்தவர்களாகும். இவ்வாறான செயல்புரிந்துகொண்டிருந்தவர்கள்தான் இஸ்லாத்தைக்கொண்டு சிறப்புற்றபின் பெண்மக்களுக்கு தங்கள் சொத்துக்களில் சுதந்திரமளித்து வெகு அருமையாக வளர்ப்பவர்களாய் விட்டார்கள். இரத்திவெறிகொண்டிருந்த அந்த அரபியர்கள் பூமியில் தலையைத் தூக்கிக்கொண்டு பெருமையாக நடப்பதையுங்கூட விரும்பாதவர்களாய் விட்டதுடன் நாளொன்றுக்கு ஐந்துமுறை தொழுகக்கூடியவர்களாகவும் இராக்காலங்களில் விழித்து அழுதுகொண்டிருப்பவர்களாகவு மாய்விட்டார்கள்; விர்த்தாபிய மாதுக்கள் தங்க நாணயத்துடன் 'ஸன்ஆ' என்னும் பட்டணத்திலிருந்து மக்காவரை யாதொரு அச்சமுமின்றி சென்று வருவதற்குள்ள வசதியும் ஏற்பட்டுவிட்டது; அடிமைகளுக்கும் சமத்துவமான நிலைமை அளிக்கப்பட்டுப்போயிற்று; விதவைகளும் அகதிகளும் ரக்ஷிக்கப்படுபவர்களாய்விட்டார்கள்; கொள்ளையடித்துச் சாப்பிடுவதையே ஜீவனோபாயமாகக்கொண்டிருந்த ஜனங்கள் தங்கள் வருமானத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் நாற்பதிலொருபாகத்தை நற்கதியற்ற அகதிகளுக்கும் விதவைகளுக்கும் வழிப்போக்கர்கட்கும் சிறைப்பட்டவர்கள் கடனாளிகளின் உபகாரத்திற்கும் செலவிடுபவர்களாய்விட்டார்கள்; போலீஸ் அதிகாரத்திற்குப் பயப்படுவதைவிட அல்லாஹ்வுக்குப் பயப்படுவதைப் பெரிதாக மதிப்பவர்களாய்விட்டார்கள். ஈதெல்லாம் எம்பெருமானார் (ஸல்.) அவர்களது திருத்தூதால் ஏற்பட்ட நற்பயன்களேயாகுமென்பது திண்ணம்.

தெய்வ வணக்கம்.

அரப்தேசத்தை சீர்திருத்தஞ் செய்ய வேண்டுமென்பது மட்டும் திருவருள் தூதர் (ஸல்.) அவர்களுடைய நோக்கமாகயிருக்க வில்லை. அவர்களோ சகல மானிடர்களுக் காகவும் அல்லாஹ்வின் பக்கலிருந்து அனுப் பப்பட்ட திருத்தூதராகும். ஆகவே அவர் களின் ஒவ்வொரு காரியாதிகளும் சகல மானிடர்களும் ஏககாலத்தில் அனுஷ்டித்து நடக்கவேண்டிய முன்மாதிரியாக யிருக்க வேண்டியிருந்தது. எனவே, அவர்கள் செய் யும் ஒவ்வொரு காரியாதிகளும் கியாமத் இறுதித் தீர்ப்பு நாள்வரை சகல கோடி மானிடர்களின் நேர்வழிக்கும் அத்தாக்ஷி யாகு மென்பதை அவர்கள் நன்குணர்ந் திருந்தார்களாதலின் அவர்களது சிறிய பெரிய ஒவ்வொரு காரியத்தையும் மிக்க ஜாக்கிரதையோடு ஆண்டவனுக்கு பயந்தே நடத்திவந்தார்கள். தாங்கள பகல்முழுதும் தெருவீதிகளிலும் கடைத் தெருவுகளிலும் வியாபார ஸ்தலங்களிலும் சென்று அல் லாஹ்த ஆலாவின் அடியார்களை அவன் பக் கல் அழைப்பார்கள்; இராக்காலம் வந்து விடின் அல்லாஹ்வின் ஞாபகத்தில் நின்று விடுவார்கள்; இப்பிரபஞ்சம் அயர்ந்து துயில் கொண்டிருக்கும் சமயத்திலும் தங்களுடைய ஹிருதயமும் நாவும் ஆண்டவனுடைய ஞாப கத்தைவிட்டுத் தாகந் தீர்ந்துவிடாது; பகற் காலங்களின் பெரும் பிரயாசைக்குப் பின் பும் இராக்காலங்களின் அதிக வணக்கத்திற் குப் பின்பும் தாங்கள் படுக்கைக்குச் செல் வார்கள். அப்படுக்கை யாதாகுமென்று நினைக்கின்றீர்கள்? சிலகால் பழைய ஈச்சம் பாயின் துண்டுகளாக யிருந்ததெனினும் சில கால் தோல்த்துண்டுகளும் பாய்த்துண்டங் களுமாகயிருந்தது. இதுவுமில்லாது போயின் பூமியிலேயே படுத்து சுகம் பெறுவார்கள். அவ்வாறு படுத்துக்கொண்டும் பரிசுத்த குர் ஆன் ஷரீபின் அத்தியாயங்களை உறுக்கமாக ஓதுவதற்கு ஆரம்பித்து விடுவார்கள். மறு படியும் நடு நிசியில் எழுந்து வணக்கம் புரிய நின்று விடுவார்களாயின் கால்களில் வீக்க மும் ஏற்பட்டுப் போய்விடும். சிலகால் இராக் காலங்களில் கபரஸ்தான்களுக்குச் சென்று உணர்ச்சி பெற்று ஆண்டவனிடம் பிரார்த் தனை புரிவார்கள். இந்நிலைமையில் ஒருநா ளன்று ஒரு ஜனாஸாவுக்குச் சென்று அந்த கபரடியிலிருந்துகொண்டு கண் தண்ணீர் வடிய அழுதுக்கொண்டே ஜனங்களை நோக்கி சகோதரர்களே! இந்த நாளுக்காக வேண் டிய சாமான்களைத் தயார்செய்து கொள் ளுங்களென உபதேசம் புரிந்தார்கள். அவர் களுக்கு வணக்கம், பள்ளிவாசல் முதலிய வைகளில் மட்டுந்தான் ஆண்டவனது எண் ணம் வந்துகொண்டிருந்ததென எண்ணி விடற்க.

அவர்கள் உட்காரும்போதும், எழுந்திருக் கும்போதும், படுக்கைக்குச் செல்லும்போ தும், அதைவிட்டு எழும்பும்போதும் யாத் திரைசெல்லும்போதும், அதைவிட்டு திரும்பி வரும்போதும், உணவு சாப்பிடும்போதும், நீர் அருந்தும்போதும் சகல சமயங்களிலும் ஆண்டவனை ஞாபிக்கிறவர்களாக யிருந்தார் கள்; அவர்களில் ஒவ்வொரு நேரங்களிலும் ஆற்றவேண்டிய தனித்தனி பிரார்த்தனைக ளும், ஏற்பட்டிருந்தது. 'ரமலான்' மாதம் வந்து விடுமாயின் வணக்கம்புரிவதற்காகவே தங்களை தியாகஞ்செய்து விடுவார்கள். இத் தியாகத்தை போர்முனையிலும் கையாண்டு வந்தார்கள். எனவே 'பத்ர்' யுத்தத்தில் சேனைகள் யுத்தத்தி லீடுபட்டிருக்கும்போது சேனாதிபதியான நபிகள் திலகம் ஸல்.) அவர் கள் கிப்லாவின் பக்கல் முகத்தைத்திருப்பி பிரார்த்தனைசெய்து கொண்டிருந்தார்கள்.

எல்லாம்வல்ல அல்லாஹ்தஆலா அவர் களைப் பின்பற்றி நடந்த சாலிஹீன்களின் கூட்டத்தில் நம்மெல்லோர்களையும் ஆக்கி வைப்பானாகவும்.

சந்தா நேயர்கட்கு!

சிலோன் பகுதிகளிலும், நம் நாட்டிலும் வதியும் சந்தாதார்களில் இவ்வாண்டிற்கு சந்தா செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் உடனே தங்கள் சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இன்றேல் அடுத்த மாசிகையை அவர் களுக்கு வி. பி. செய்து அனுப்பப்படுமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

முஹம்மதியர்களென்று அழைப்பது குற்றமா?

நேயன்மீர்! சிலதினமுன் இது சம்பந்தமான வினு ஒன்றெழுந்தது. அதாவது, முஸ்லிம்களை முஹம்மதியர்களென்றும், இஸ்லாம் மார்க்கத்தை முஹம்மதிய மார்க்கமென்றும் அழைக்கலாகாதென்று ஒரு சிலர் பஹீரதப் பிரசாரஞ் செய்துவருவதால், அவ்வாறு அழைப்பதால் ஏதாகிலும் குற்றமேற்படுமோவென வினவப்பட்டிருந்ததற்கு, அவ்வாறு கூறுவதால் குற்றமெதுவும் ஏற்படுவதில்லை; நம்மை முஹம்மதியர்களென்றும் நம் சன்மார்க்கத்தை முஹம்மதிய மார்க்கமென்றும் அழைக்கலாமென விடையிறுத்தப்பட்டது. அதன் சாராம்சத்தை நன்குணர்ந்துகொள்ளாது ஏதேதோ அர்த்தமற்ற வீண் வார்த்தைகளை உளறிக்கொட்டுகின்றனர். அக் கூற்றுக்கு மறுப்பெழுதுகிறவர்கள், அவ்வாறு கூறுவதினுல் இன்ன குற்றமேற்படுகிறதென்பதை எடுத்து விளக்கவேண்டும். அவ்வாறு செய்யாது "இந்தச் சன்மார்க்கத்தை முஹம்மதிய மார்க்கமென்று அழைத்தல் அவ்வளவு அர்த்த புஷ்டியுள்ளதல்ல; யாம் ஆதிமுதல் அவ்வளவு அர்த்த புஷ்டியுள்ளதல்லவென்று கூறிவருகிறுேமேயன்றி முஸ்லிம்களை முஹம்மதியர்களென்று அழைப்பது மார்க்கப்படி ஈமானைப்போக்கும்படியான குற்றமாகுமென யாண்டும் கூறியுள்ளோமல்லேம்" (தா. இ. 9-6-33) என வரைகின்றனர். என்னே இவர்களின் விதண்டாவாதம்? முஹம்மதியர்களென்று கூறுவதில் குற்றமொன்றுமில்லை என்று கூறும் இவர்கள், எதற்காக அதற்கு மாற்றமாய் பிரசாரம் புரிந்து வருகிறுர்களென்பதுதான் புலனுகவில்லை.

மேலும் இவர்கள், சன்மார்க்கத்தில் ஈஸாவின் மதம், மூஸாவின் மதம் என்று கூறியுள்ளதாக ஆதாரங்கிடையாது என்று வரைகின்றனர். இச்சிறு விஷயத்தையுங்கூட தெரிந்துகொள்ள முடியாத இவர்கள், இவ்விவாதத்தில் தலையிட்டது அறிவீனமேயன்றி வேறில்லை. எனவே குர்ஆன் ஷரீபில் அந்தந்த நபிமார்களுக்கு அருளப்பட்ட மார்க்கத்தை அந்தந்த நபிமார்கள் பக்கல் சேர்த்துக் கூறப்பட்டிருப்பது இன்னேருக்குத் தெரியாது போனது பெரும் விந்தைக்குறியல்லவா! மேலும் இவர்கள் 'தீனமுஹம்மதீ' என்று கூறலாம் என ஒருவாறு ஒற்றுக்கொண்டு முந்திய வேதங்களைப் பின்பற்றி யொழுகுபவர்கள் இதுகாலை எவருமில்லையாகில் பகுத்தறிந்துகொள்வான் வேண்டி முஹம்மதியர் என்று சொல்லவேண்டிய அவசியமே கிடையாதென்கின்றனர். முந்திய நபிமார்களுக்கு அருளப்பட்ட மார்க்கத்தையும் நபிபெருமானர் (ஸல்.) அவர்களின் மார்க்கத்தையும் சீர்தூக்கி தாரதன்மியங்களை எடுத்துக் கூறுமிடத்து மில்லத்த இப்ருஹீம், மில்லத்த மூசா, மில்லத்த ஈஸா (அலைஹிம்) மில்லத்த முஹம்மத் (ஸல்.) என்று எடுத்துக் கூறவேண்டிய அவசியமேற்பட்டுப்போய் விடுகிறது. இது விஷயம் மந்தபுத்தியுள்ளவர்களுக்கு விளங்காதுபோவது சகஜமேயாகும். ஆனல் இப்பெயர்களை வழங்குவதில் இதர மதஸ்தர்கள் ஏதேனும் தப்பபிப்பிராயங் கொள்வார்களாயின் அதனை அகற்றிவிடுவதற்கு வழிதேடவேண்டியது முஸ்லிம்களின் கடமையேயாகும். அவ்வாறின்றி அப்பெயரையே வழங்கக்கூடாதென்று பிரசாரம்புரிவது எம்மட்டும் பொருத்தமுடையதாகுமென்பதை நேயர்களுணரக்கடவர். தவிர முஸ்லிம் என்னும் வார்த்தைக்குக்கூட 'மிலேச்சர்' என்று தப்பருத்தங்கொள்கின்றனர் ஒரு சில அயல் மதவாதிகள். இதனுல் அந்தப் பெயரையும் விட்டுவிடவேண்டுமென்று பிரசாரம்புரிய முற்படுவர்போலும். இவ்வாறுதான் இன்று முஸ்தபா கமால் பாஷா 'அல்லாஹ்' என்னும் திருநாமத்தை உச்சரிக்கக்கூடாதென்று அறிக்கை வெளியிட்டிருக்கின்றுர். தவிர இன்னேர் பழைய குரோதத்தின் காரணமாய் தங்களுக்கு விரோதமாக இவ்வாறு சொல்லலாமென்று நாம் கூறுவதாக வரைகின்றனர். வினு எழுந்த காலத்தில் இவர்களுடைய பிரஸ்தாபமே யில்லாதிருக்கும்போது எவர்பேரில் கொண்ட பொருமையினுல் யாம் இவ்வாறு கூறியதாக பசப்புவது எவ்வளவுதூரம் பொருத்தமுடையதாக யிருக்குமென்பதை நேயர்களே அறியக்கடவர். ஈதெல்லாம் வீண் விதண்டாவாதமாகும். ஆதலால் பழைய ராமாயணம் பாடுவதைவிட்டு முஹம்மதியர் என்று கூறுவதில் குற்றமேதாவதுண்டா என்பதை ருசுப்படுத்த முற்படுவார்களாக. மேலும் நபிபெருமானர் (ஸல்.) அவர்களுடைய உம்மத்திலொருவன் என்று அருத்தங் கொடுக்கக்கூடிய ஒரு பெயரை வழங்குவது அதிருஷ்ட பாக்கியமெனக் கருதவேண்டியதிருக்க அதனை வழங்கக்கூடாதென பிரசாரம் புரிவது எவ்வளவுதூரம் மதியீனமுடையதாகு மென்பதை நேயர்களுணரக்கடவர்.

'யவ்முந்நபீ'

திருநபி திருதினக்கொண்டாட்டம்

ஏகத்துவத்தூதர், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அருள் செய்த ஏகத்துவம், அமைதி, கல்வி, சமத்துவம், சகோதரத்துவம், நீதி முதலியவைகளைத் தெரிந்துகொள்வதற்கும், அதனை மானிடர்களிடையே பரத்துவதற்கும் ரபீஉல் அவ்வல்மீ 12-ந் தேதி (6-7-33) வியாழக்கிழமைய தினத்தை ஒதுக்கிவைத்து அன்று சகல ஊர்களிலும் மகாநாடுகள் கூட்டி முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதாரும் ஒருங்கே 'ஸீரத்' பிரசங்கத்தைக் கேட்க வசதியளிக்க வேண்டும்; அன்று நடைபெறும் மகாநாடுகளில் வீண் ஆடம்பரம், கெட்டபித்அத்தான காரியங்கள் முதலியன கலந்துவிடாதவாறு மிக்க ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்; நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் ஹிதோபதேசங்களும், அவர்களின் தூயவாழ்க்கை விபரங்களும் மக்களிடையே பரவுவதற்கு தக்க முயற்சி எடுக்கவேண்டும்; அந்த மகாநாட்டில் வினியோகிப்பதற்கென்றே உங்கள் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டிருக்கும் "திருவருள்தூது" என்னும் ஸீரத் பிரசங்கத்தை மகாநாடுகளில் படித்துக்காட்டி ஏராளமாக வினியோகிக்கவேண்டும். அப்பிரசங்கத்தில் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் உலகத்தினருக்கு எத்திவைத்த திருத்தூதுகளாய ஏகத்துவம், சமாதானம், கல்வி, சமத்துவ சகோதரத்துவம், பாத்தியா பாத்தியம், நியதி, பாரமார்த்தீகம், பாசுத்தம் முதலியவைகள் தக்கமுறையில் விளக்கப்பட்டிருப்பதால் அதனைப் படிக்கும் யாவரும் அவைகளைத் தக்க முறையில் உணர்ந்துகொள்ள வசதி ஏற்படுமாகையால் அப்புனிதம் தங்கிய தினத்தை அதற்கென்றே ஒதுக்கிவைத்து அந்நாளைத் திருநாளாகக்கொண்டாடுவோமாக.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.